## அதிகாரம் 6

# “பூரணத்தை நோக்கி முன்னே றுதல்”

### பரிபூரணத்தை அடைய எச்சரிக்கையும் அறிவுறுத்துதலும் (5:11-6:20) (தொடருகிறது)

பூரணத்தை நோக்கி முன்னேறுவதே கிறிஸ்துவின் போதனை அல்லது உபதேசத்தின் முதன்மை நோக்கமாக இருக்கிறது. பவுலின் முதன்மை கரிசனமும் இதுவாகவே இருந்தது, நம்முடைய நோக்கமும் இதுவாகவே இருக்க வேண்டும் (பிலி. 3:12-14). கிறிஸ்துவிற்குள் பூரண மனிதராக நாம் தொடர்ந்தால், நாம் நம்முடைய வாழ்விற்கான தேவனுடைய சித்தத்தை அடைய நெருங்கி வருவோம். எபிரெய நிருபத்தின் ஆசிரியர் பூரணப்படுவதின் முன்னேற்றத்தைக் குறித்த அவருடைய வலியுறுத்தலின் சிந்தையை 6ஆம் அதிகாரத்திலேயே தொடங்கினார்.

**விசுவாசத்தை விட்டு விலகுவதற்கான எச்சரிக்கை (6:1-8)**

**6:1-3**

**[1]ஆகையால், கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூல உபதேசவசனங்களை நாம்விட்டு, செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல், தேவன்பேரில் வைக்கும் விசுவாசம், [2]ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம், கைகளை வைக்குதல், மரித்தோரின் உயிர்த்தெழுதல், நித்திய நியாயத்தீர்ப்பு என்பவைகளாகிய அஸ்திபாரத்தை மறுபடியும் போடாமல், பூரணராகும்படி கடந்து போவோமாக. [3]தேவனுக்குச் சித்தமானால் இப்படியே செய்வோம்.**

**வசனம் 1.** இந்த பகுதியானது ஏற்கெனவே கூறியிருப்பவற்றை தொடர்புபடுத்தி, **ஆகையால்** என்று தொடங்குகிறது. ஒருவர் எப்படி பூரணத்திற்கு நேராக முன்னெடுக்கிறார் என்பதை இதன் ஆசிரியர் விளக்க முற்படுகிறார். வளர்ச்சியின் அவசியத்தையும், வளர்ச்சியின்

இயல்பையும் எடுத்துக் காட்டின பின்னர், அவர் அடுத்ததாக அதனை எப்படி செய்ய வேண்டுமென்று கூறினார்.

இந்த ஆசிரியரின் **போவோமாக** என்று எடுத்துரைப்பது அவர் குறிப்பிடுகிற அந்த குழந்தை கிறிஸ்தவர்களோடு தன்னையும் ஒருவராகக் கருதினார் என்று பொருள்படுகிறது. இதன் ஆசிரியர் பவுலல்ல என்று மேற்கோளிட அடிக்கடி சொல்லப்படும் "நாம்" என்ற இந்த பயன்பாடானது 2:3 லுள்ள "நாம்" என்ற பயன்பாட்டிற்கு ஒத்திருக்கிறது. உண்மையாகவே 6:1 ல் "நாம்" என்று கூறப்படுதலில் இதன் ஆசிரியர் இல்லாதபடியால், அநேகமாக 2:3 ல் காணப்படும் "நாம்" என்று கூறப்படுதலிலும் அவர் இருக்க வாய்ப்பில்லை. இந்த பகுதியானது பவுலை ஆசிரியர் என்ற சாத்தியத்திலிருந்து வெளியேற்றுவது கிடையாது.

**மூல உபதேசங்கள்** என்று கூறுவது *கிறிஸ்துவைப் பற்றியதா அல்லது கிறிஸ்துவால் கூறப்பட்ட மூல உபதேசங்களா*? இதை கிறிஸ்துவின் உபதேசங்களைக் குறித்த கோட்பாடுகள் என்று KJV கூறுகிறது. இச்சொற்றொடர் கிரேக்க மொழியில் "கிறிஸ்துவின் வார்த்தைகளின் தொடக்கம் என்று எழுத்துப்பூர்வமாக கூறப்பட்டுள்ளது." *கிறிஸ்துவின் மூல உபதேசங்கள்* என்பது ஆரம்பத்தில் கர்த்தரால் போதிக்கப்பட்ட வார்த்தைகள் இரட்சிப்பிறகு ஏதுவாக இருக்கிறது என்ற யோசனையை குறிக்கிறது (2:3), இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ள மூல உபதேசங்களின் பட்டியலானது *கிறிஸ்துவைப் பற்றியதை விட அதிகமானது.* முதல் ஆறு குறிப்புகள் யூதர்களுடைய அல்லது பழைய ஏற்பாட்டிற்குரிய போதனை என்று வாதிடப்படுகிறது. எப்படியாயினும், ஆதியிலிருந்தே சபையானது இந்த சத்தியங்களை "விசேஷித்த கிறிஸ்தவ உபதேசங்கள்"[1] என்று புரிந்துகொண்டு அந்த வாதத்தை புறந்தள்ளியது.

இந்த யோசனையை வெளிப்படுத்தக் கூடிய ஒரு வழி என்னவென்றால், இந்த வார்த்தைகள் பழைய யூதப் போதனையைக் குறிப்பிடாமல், அடிப்படையில் கிறிஸ்தவ போதனைகளைக் குறிக்கிறது, "முந்தைய யூதர்களாகிய இதன் வாசகர்கள் அவர்கள் கிறிஸ்துவிடம் வருவதற்கு முன்பே கற்றிருந்தனர்."[2] நியாயப்பிரமாணத்தின் ஒவ்வொரு குறிப்புகளும் கிறிஸ்தவ சூழலில் ஒரு புதிய முக்கியத்துவத்தை பெற்றிருக்கிறது.[3]

எபிரெய நிருபத்தின்படி, பூரணமாகுதலின் முதல் படியானது தொடருவதற்கான அர்ப்பணிப்புடன் **தொடர்ச்சியான ஒன்றாக இருக்கிறது. பூரணமாகுதல்** (τελειότης, *டெலியொய்டெஸ்*) என்ற வார்த்தை "முழுமையாக வளர்ச்சியடைந்த" அல்லது "பூரணமான" என்றும் மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இது பூரணப்படுத்துவதை அல்லது முழுமைப்படுத்துவதை விவரிக்கிறது. கிறிஸ்தவர்கள் கண்டிப்பாக பின்வாங்கிவிடக் கூடாது அல்லது

சோர்ந்து விடக் கூடாது; அவர்கள் ஆவிக்குரிய வாழ்வையும் தேவனுடைய சத்தியத்தின் ஆழமான புரிந்துகொள்ளுதலையும் கண்டிப்பாகத் தொடர வேண்டும்.

ஏனெனில் “பூரணமானவர்களே” கிறிஸ்துவினுடைய ஆழமான காரியங்களை பெற்றுக்கொள்ளவும், புரிந்து கொள்ளவும் தகுதியுடையவர்களாக இருக்கிறார்கள், இந்த கிறிஸ்தவர்கள் பூரணமாகுதலை நோக்கித் தொடர வேண்டியது அவசரமாக இருக்கிறது. மூல உபதேசங்களை கற்றுக்கொள்ள வேண்டி மீண்டுமாக எச்சரித்த பின்னர் (5:12) இதன் ஆசிரியர் அந்த காரியங்களை மீண்டும் ஒரு முறை போதிக்க அநேகமாக எதிர்ப்பார்த்திருக்கக் கூடும். ஆனால் அவர் கிறிஸ்துவின் பிரதான ஆசாரியத்துவத்தை விவரித்து அவர்களுடைய புரிந்துக் கொள்ளுதலை விரிவுபடுத்தினார்.

“பூரணராகும்படி கடந்து போவோம்” என்ற வாக்கியம் *ஆவிக்குரிய* முதிர்ச்சிக்கு போராடுதலை பொருள்படுத்துகிறது. இந்த தொடருதல் பாவமற்ற பூரணத்தை குறிப்பிடுவது இல்லை. அப்படிப்பட்ட நிலையானது நம்முடைய சிறந்த நோக்கமாக இருக்க வேண்டும் (பிலி. 3:12-15), ஆனால் ஒரு நபர் தன்னுடைய வாழ்நாளில் பாவத்தை முற்றிலும் மேற்கொள்ள முடியுமா? இந்த கேள்வியானது ஒருவேளை “ஒரு மனிதன் எவ்வாறு குதிக்க முடியும்?” என்று இப்படி கேட்பது போல இருக்கும், ஒவ்வொரு ஆண்டும் பாவத்தின் பதிவுகளானது அளவை மிஞ்சிக் கொண்டே போகிறது, ஆனால் அதற்கு ஒரு எல்லை இருக்க வேண்டுமென்று நாம் அறிந்திருக்கிறோம். இங்கே கவனத்தில் கொள்ளப்பட்ட பூரணமென்பது “அவர் ஒரு பூரண குழந்தை!” என்று கூறுவதுபோன்றுள்ளது. இதன் மூலம் அந்த குழந்தையானது ஒரு முழுமையான மற்றும் இயல்பான குழந்தைக்குரிய எல்லா உடல்பாகங்களையும் கொண்டுள்ளது என்பதை நாம் பொருள்படுத்துகிறோம்.

எந்தவொரு கட்டிடத்தையும் பலப்படுத்த **அஸ்திபாரமானது** அவசியமானதாக இருக்கிறது, ஆனால் ஒருவருடைய நேரமனைத்தையும் அஸ்திபாரமிடுவதிலேயே கழிப்பது ஞானமற்ற செயலாக இருக்கும். சிலர் தேவனுடைய வார்த்தையில் கொண்டுள்ள உயரிய கோட்பாடுகளை தவறவிடும் எல்லைக்கு சென்று சுவிசேஷத்தின் அடிப்படைகளில் வாசம் செய்து கொண்டிருக்கிறார்கள் (மத். 23:23). இது சுவிசேஷத்தின் அடிப்படைகளை தினசரி ஒழுங்காக போதிக்கக் கூடாது என்று கூறுவதல்ல. எல்லா காலத்திலும் உள்ள கிறிஸ்தவத்தின் புதிய தலைமுறையினர் ஒருவேளை அவர்கள் சத்தியத்தில் நன்றாக ஊன்றப்படாவிட்டால் சறுக்கி விடும் ஆபத்தில் இருக்கிறார்கள்.

இதன் ஆசிரியர் எதிர்மறையான திசையில் சென்று “மூல உபதேசங்களை” **விட்டுவிடும்படி** தன்னுடைய வாசகர்களுக்கு

கட்டளையிடுகிறார். "அஸ்திபாரம் மற்றும் "மூல உபதேசங்கள்" ஆகிய பட்டங்கள் நிச்சயமாக ஒன்றாகவே இருக்கக்கூடும், ஆனால் அவைகள் எதைப் பொருள்படுத்துகிறது? அவைகள் ஆறு உருப்படிகளாக, இணைகளாக வசனத்தில் பட்டியலிடப்பட்டிருக்கிறது. முதலாவதாக "இரு குறிப்புகள் தொடக்க நிலை அனுபவங்கள், மற்ற இரு குறிப்புகள் உருவக வெளிப்பாடுகள், மற்றும் [கடைசி] இரு குறிப்புகள் எதிர்கால நிகழ்வுகள்."[4]

இந்த பட்டியலானது கிறிஸ்தவ விசுவாசத்தில் வாழ்கிற இரு அடிப்படைகளோடு தொடங்குகிறது: **செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல், தேவன்பேரில் வைக்கும் விசுவாசம்.**[5]

நாம் பாவத்தை விட்டு விலகி கிறிஸ்தவ நடையை நடக்க தீர்மானித்த தொடக்கத்திலேயே கண்டிப்பாக மனந்திரும்ப வேண்டும் (μετάνοια, *மெடநொய்யா*; "மனதில் மாற்றத்தை கொண்டிருத்தல்" ) ஆகவே மனந்திரும்புதலானது கிறிஸ்தவ வாழ்வின் முதல் படிவமாக அஸ்திபாரமாக இருக்கிறது, இராஜ்ஜியத்தின் வருகைக்கு ஆயத்தமாகும் யூத பின்னணியின் மத்தியில் முதல் காரியங்கள் பிரசங்கிக்கப்பட்டது (மாற்கு 1:4, 14, 15; அப். 2:38; 3:19; 5:31).

"வருந்துதல்" என்பது (μεταμέλομαι, *மெடமெலொமொய்*) ஒரு ஒத்த வார்த்தையாக இருக்கிறது. இந்த வார்த்தை மத்தேயு 27:3ல் யூதாஸை தொடர்புப்படுத்தி பயன்படுத்தப்பட்டுள்ளது: அவன் தனக்குத் தானே *மனந்திரும்பினான்* (மேஜேவி). மிகவும் பொருத்தமான மொழிபெயர்ப்பாகிய அவன் "பட்சாதாபம்" அடைந்தான் என்று NASB கூறுகிறது. தற்கால மொழிபெயர்ப்பில் வேறுபாடுகள் தெளிவாக காணப்படுகின்ற அந்த "இரண்டு பதங்களும் 2 கொரிந்தியர் 7:7-10 ல் பவுலால் பயன்படுத்தப்பட்டுள்ளது, உண்மையான மனந்திரும்புதலானது நாம் மாற்றத்தை ஏற்படுத்தாவிட்டால் நித்திய அழிவை அடைவோம் என்ற விழிப்புணர்வுடன், நம்முடைய பாவம் தேவனை காயப்படுத்துகிறது என்ற உண்மையை இணையப் பெற்றுள்ளது (லூக். 13:3; அப். 17:30, 31). மனந்திரும்புதலைக் குறித்த ஒரு முழுமையான சித்திரிப்பானது கீழ்கண்டவாறு இருக்கிறது: மனந்திரும்புதலானது ஒருவருடைய மனம் மற்றும் பண்புகளை மாற்றுவதாகும், ஒருவருடைய வாழ்வை மறுபடியும் திசை திருப்பி பாவத்தை துறந்து அறிக்கை செய்து தேவனிடம் துக்கத்தோடு அவருடைய இருதயம் உடையும்படிக்கு திரும்ப தீர்மானிப்பது. இது ஒரே சாத்தியமான இரட்சகராகிய கர்த்தரால் விடுதலை பெற்று ஒருவருடைய பாவத்திலிருந்து வாழ்வின் ஒரு புதிய வழிக்கு திரும்புவதாகும். காரேத் எல். ரீஸ் அவர்கள் "பாவத்திற்காக தேவனுக்கேற்ற துக்கம் மற்றும் சாத்தியமான இடத்தில் இழப்பீட்டை தருவதில் இணைந்து விளைந்த மனதில் ஒரு மாற்றம் செயலில் ஒரு மாற்றம்"[6] என்று இதை மிகவும் எளிமையாக விளக்கினார்.

அப்போஸ்தலர் 3:19 ஆம் வசனம்; பாவிகள் “மனந்திரும்பி மறுபடியும் குணப்படும்படியாக” (அல்லது “திரும்பும்படியாக” NIV) கூறப்பட்டுள்ளனர். இதோடு அப்போஸ்தலர் 2:38 ஐ ஒப்பிடுகையில், மனந்திரும்புதலை பின்பற்றி குணப்படுகிற செயல் வருகிறதை நாம் காண்கிறோம். இது இப்படியிருக்குமென்றால், மனந்திரும்புதலென்பது மனதின் மாற்றம் அல்லது ஒருவருடைய சித்தத்தில் மாற்றமாக இருக்கிறது. இப்படிப்பட்ட மாற்றத்தை பின்தொடர்ந்து, அவர் தன்னுடைய பாவத்திலிருந்து திரும்புகிறார். அப்படியென்றால் இந்த “திரும்புதலானது” ஞானஸ்நானத்திற்கு இணையாக கூறப்பட வேண்டும்.

“செத்த கிரியைகள்” என்பது இங்கேயும் மற்றும் 9:14 லும் காணப்படுகிறது.[7] “செத்த” என்கிற பதம் பொதுவாக விசுவாசத்திற்கு (யாக். 2:17), சரீரத்திற்கு (ரோமர் 8:10), மற்றும் ஒரு மனிதனுடைய ஆவிக்குரிய நிலைக்கு (ரோமர் 6:11; எபே. 2:1, 5; கொலோ. 2:13) நடைமுறைப்படுத்தப்படுகிறது. “செத்த கிரியைகளில்” தொடருவது மரணத்திற்கு நேராக வழிநடத்துகிறது (ரோமர் 6:21-23).

சைமன் ஜெ. கிஸ்ட்மேகர் அவர்கள் “கடந்த காலப் பாவங்கள் உட்பட மரணத்திற்கு நேராக நடத்தும் செயல்களிலிருந்து மனசாட்சியை சுத்தம் செய்வதையே” இந்த செத்தத்தன்மை குறிப்பிடுகிறது என்று நம்பினார்.[8] நியாயப்பிரமாணத்தின் தேவைகளுக்குட்பட்டு செய்யப்படும் செய்கைகளுக்கு மட்டும் “செத்த கிரியைகளை” மட்டுப்படுத்துவது என்று கூறுவது மிகவும் கட்டுப்படுத்துவதுப்போன்று காணப்படுகிறது. நற்செயல்கள் மட்டுமே இரட்சிப்பை அளிக்காதபட்சத்தில், பாவச் செயல்கள் ஆவிக்குரிய மரணத்திற்கு வழிநடத்துகிறது. ஒரு பாவி கிறிஸ்துவிடம் மனந்திரும்பும்போது இப்படிப்பட்ட கிரியைகளிலிருந்து திரும்பவேண்டும்.

இரண்டாவது உருப்படிகள் அடங்கிய பட்டியலானது “தேவன் பேரில் வைக்கும் விசுவாசமாகும்.” இந்த விசுவாசம் கிறிஸ்துவைக் குறித்து தேவனால் வெளிப்படுத்தப்பட்ட குறித்த சத்தியங்கள் காணப்படுகின்ற அவரை மையப்படுத்தியிருக்கிறது. மனந்திரும்புதலும் விசுவாசமும் யூதருடைய பிரசங்கத்தில் பெரும்பங்கு வகித்தவையாகும், ஆனால் மனந்திரும்புதல் வழக்கமாக முதலில் சொல்லப்படும் (மாற்கு 1:14, 15; அப். 20:21). இந்த எபிரெயர்கள் ஏற்கெனவே தேவனை விசுவாசித்தனர், ஆனால் அவர்கள் அவரிடம் மனந்திரும்பி இயேசுவை விசுவாசிக்க வேண்டியிருந்தது. இந்த நிருபமானது நம்பிக்கையின் மீதும் கீழப்படிதலின் மீதும் வலியுறுத்தம் கொண்டுள்ள விசுவாசத்தை ஒரு சக்திவாய்ந்த வல்லமையாக தொகுத்தளிக்கிறது. இந்த செயல்படக்கூடிய விசுவாசமானது அதிகாரம் 11லும் 4:2; 6:12; 10:22, 38, 39; 12:2; 13:7 லும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**வசனம் 2.** அடுத்ததாக பட்டியலிடப்படுள்ள இரு உருப்படிகளாகிய **ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம், கைகளை வைக்குதல்** ஆகியவை உருவக வெளிப்பாடுகளாக இருக்கிறது.

கிறிஸ்துவின் உபதேசங்களில் முதன்மையானவையாக இருப்பது ஞானஸ்நானமாகும். எப்படியாயினும் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள (βαπτισμός, *பாப்டிஸ்மோஸ்* என்ற வேர்ச் சொல்லிலிருந்து வருகிற) பன்மை பதமானது புதிய ஏற்பாட்டில் “பாப்டிஸம்” (βάπτισμα, *பாப்டிஸ்ட்மா*) என்பதற்கான பொதுவான பதமாக இருக்கிறது. இந்த உண்மையானது பலரை இது யூத கழுவுதல்களை அல்லது யூத மதத்திற்கு மாறினவர்களின் ஸ்நானத்தை குறிப்பிடுகிறது என நம்ப வைக்கிறது. புதிய ஏற்பாட்டில் (βάπτισμα, *பாப்டிஸ்மா*) வின் வடிவங்கள் நான்கு முறை பயன்ப்படுத்தப்பட்டுள்ளது (மாற்கு 7:4, 5; எபி. 6:2; 9:10). மாற்குவின் சுவிசேஷத்தில் காணப்படுகின்ற இரண்டு வசனங்கள் பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள சாதாரணமான ஸ்நானங்களை குறிப்பிடுகிறது. எஃப் எஃப் புரூஸ் அவர்கள் “நீருள்” அல்லது சடங்காச்சாரமான சுத்தமாகுதல் (RSV காண்க).[10] தொல்லியல் துறையானது ஒரு சாதரண யூத குடும்பமானது ஒரு மிக்வோட் அதாவது சடங்காச்சாரமான கழுவுதல்களுக்கு ஒரு குளத்தைக் கொண்டிருந்ததாக விவரிக்கிறது. தண்ணீரானது அந்த குளத்திற்குள் மேலிருந்து ஊற்றப்பட்டு அதன் பின்னர் வெளியேற்றப்பட்டு கழுவுதலுக்கு சுத்தமான ஓடுகிற “தண்ணீரை” தர வேண்டும். ஒரு வேளை ஒரு பரிசேயன் பயணத்தை முடித்து வீட்டிற்கு திரும்பும் போது ஒரு புறஜாதியானை சந்தித்திருந்தால் ஒரு “குளியலை” எடுப்பார், இல்லாடில் அவர் அசுத்தமாக இருப்பார்.

இதற்கு கூடுதலாக, (கழுவுதலுக்கு அப்பாற்பட்ட) யோவான் வருதவற்கு முன்பே யூதருக்கு “ஞானஸ்நானங்கள்” கட்டளையிடப்பட்டதாக கூறுவதை ஏற்றுக் கொள்ளும் சான்றுகள் ஏதுவும் கிடையாது. ஒருவேளை ஸ்நானங்கள் பொதுவானதாக இருக்குமென்றால், அவர் ஏன் “ஸ்நானகன்” என்று அல்லது “முழுக்குகிறவர்” என்றழைக்கப்பட வேண்டும்? அவருடைய அடையாளமானது மற்றவர்களை, அதிலும் குறிப்பாக யூதர்களை முழுகுவதில் இவர் தான் முதலாமானவர் என்பதைக் குறிப்பிடுகிறது. யோவான் கட்டளையிட்ட ஞானஸ்நானமானது யூதர்களுக்கு புதியதாக இருந்தது. மதமாற்றமடையும் ஞானஸ்நான காரியத்தில், மதமாற்றமடையும் ஒரு புறஜாதியான் தன்னை தானே முழுக்கிக் கொள்வான்; ஆனால் இது யோவானின் ஞானஸ்நானத்திலோ அல்லது இயேசுவின் ஞானஸ்நானத்திலோ உறுதிப்படுத்தப்படவில்லை.

ஞானஸ்நானத்தை குறித்த பெரும் கட்டளையானது, ஒரு நபர் பாவத்திற்கு மரிக்கும் முறைமையாகவும் (மத். 28:19; மாற்கு 16:16), மரணம், அடக்கம், மற்றும் உயிர்த்தெழுதலின் சித்திரங்களாகவும் இருக்கிறது (ரோமர் 6:3-5). ஒருவேளை “ஸ்நானங்கள்” என்ற பன்மைப்பதம் யோவானின் ஸ்நானத்தையும், யூத மதத்திற்கு

மாறினவர்களுடைய ஸ்நானத்தையும்,மற்றும் பழைய ஏற்பாட்டு ஸ்நானத்தையும் உள்ளடக்கியிருக்குமென்றால்,பின்னர் இது எப்படி “கிறிஸ்தவ போதனையாக” அல்லது “கிறிஸ்துவைப் பற்றிய போதனையாக” (வசனம் 1) கருத முடியும்? இப்படிப்பட்ட ஸ்நானங்கள் கிறிஸ்தவத்திற்கான ஆயத்தங்களாக இருக்கிறது. அந்த அடிப்படையில் எல்லா யூத சடங்காச்சார ஸ்நானங்களும் “கிறிஸ்தவ போதனைகள்” என்ற முடிவிற்கு ஒருவர் வரக் கூடும், அது ஒரு பெரிய காரியமாக இருக்காது.

மற்றொரு புறம், ஜொசிபஸ் அவர்கள் யோவானின் ஸ்நானத்தை குறிப்பிட *பாப்டிஸ்மோ* என்ற இதே போன்ற வார்த்தையைப் பயன்படுத்தினார்.[11] அவரால் கொடுக்கப்பட்ட இந்த பட்டத்தைக் கொடுப்பதில் ஒருவேளை அவர் தவறாக இருந்திருக்க கூடும், ஆனால் யோவானின் ஸ்நானமானது நிச்சயமாக யூதர்களின் சாதாரண ஸ்நானமல்ல என்பதை உறுதியாக அறிந்திருந்தார். ஒருவேளை அவர் *பாப்டிஸ்மோ* என்ற தன்னுடைய பயன்பாட்டில் சரியாக இருந்தால், யூத ஸ்நானங்களுக்கும் மற்றும் ஞானஸ்நானத்திற்கும் கூறப்பட்டுள்ள வேறுபாடு எப்போதும் மேம்பட்டதாக இருக்கவில்லை. கிஸ்டேமேக்கர் அவர்கள் *பாப்டிஸ்மா* என்பது *பாப்டிஸ்மஸ்* என்பதைப்போன்று கிரியையை மட்டும் கொண்டில்லாமல், “கிரியையோடு பலனையும்” கொண்டுள்ள யூத கிறிஸ்தவர்களின் சிந்தனையென்ற யோசனையை தெரிவித்தார்.[12] ஒருவேளை *பாப்டிஸ்மோஸ்* என்ற வார்த்தை யூத ஸ்நானங்களை மட்டும் குறிப்பிட்டால் (எபி. 9:10; மாற்கு 7:4, 5) எபிரெயர் 6:2 ன் அர்த்தத்தை வரைமுறைப்படுத்துவது அவசியமாகிறது. “*பாப்டிஸ்மோஸ்* என்ற பதம் எப்போதும் கிறிஸ்தவ ஞானஸ்நானத்தை குறிப்பிடுவதில்லை என்றாலும், ஸ்நானங்களும் ஞானஸ்நானமும் கவனத்திலுள்ளபடியால் இங்கே இது சரியானபதமாக இருக்கிறது.[13] ஞானஸ்நானத்தைக் குறித்து உண்மைகள் கிறிஸ்தவ அஸ்திபார உபதேசங்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டு அந்த செயலின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது (காண்க 1 பேதுரு 3:21).

எபேசியர் 4:5ல் பவுல் “ஒரே ஞானஸ்நானம்” என்று கூறுவதை தவிர்த்து, ஞானஸ்நானத்தைக் குறித்து ஒரு பன்மைத்தன்மையை புதியஏற்பாட்டில் நாம் காண முடியும்.[14] ஒருவேளை நடைமுறையில் இருந்தும் அவர் எபேசியரை எழுதும்போது விசுவாசத்தின் ஐக்கியத்திற்கு தேவையான, நடைமுறையிலிருந்த ஒரேயொரு ஞானஸ்நானத்தை பொருள்படுத்தியிருக்க வேண்டும். அந்த பெரும் கட்டளையில் கட்டளையிடப்பட்ட ஒரே ஞானஸ்நானம் இதுவாகும். கிறிஸ்தவ யுகத்தில் பவுல் உறுதிப்படுத்துகிற ஒரே ஞானஸ்நானமானது யோவானுடைய ஞானஸ்நானம் கிறிஸ்துவால் மாற்றியமைக்கப்பட்டதை (அப்போஸ்தலர் 19:1-6 ல் சான்றுப்படுத்தியிருப்பதுப் போன்று) சுட்டுகிறது, தேவனுடைய ஒதுக்கீட்டிலுள்ள மற்ற ஸ்நானங்கள், ஒருவேளை கிறிஸ்துவின் போதனைகளுக்கு ஆயத்தங்களாக இருந்திருக்கக் கூடும். சுவிசேஷம்

பிரசங்கிக்கப்படுகையில் அவைகள் பின்னுக்கு தள்ளப்பட்டன.

அடுத்த உருப்படியானது “கைகளை வைக்குதலாகும்” இது பழைய ஏற்பாட்டு பொதுவான வழக்கமானது, புதிய ஏற்பாட்டு காலத்தில் விசேஷமான வல்லமையில்லாத ஒரு நபராலோ (அப். 13:3) அல்லது தெய்வீக வரம் பெற்ற கிறிஸ்து அல்லது அப்போஸ்தலர்களாலோ ஒரு ஆசீர்வாதத்தை கொடுக்கும்போது தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டது. ஒரு பலியானது செலுத்தப்பட்டு, தனியொருவர் ஒரு அலுவலுக்காக அல்லது நோக்கத்திற்காக நியமிக்கப்பட்டு தனியொருவருக்காக ஜெபித்தபோது இதுபோன்று நடைபெற்றது. ஏவுதல் பெற்ற அப்போஸ்தலர்களால் கைகளை வைக்குதல் பயிற்சிக்கப்பட்டபோது, அப்படி வைப்பதினால் ஆவிக்குரிய வரங்கள் கொடுக்கப்பட்டது. அநேகமாக அது அவர்களுடைய அதிகாரத்தை காட்சிப்படுத்தப்பட்டதை சுட்டியிருக்க வேண்டும் (அப். 6:6; 8:14-17; 19:1-6; ரோமர் 1:11). இயேசு சிறுபிள்ளைகளை ஆசீர்வதிக்கும்படியாக அவர்கள் மீது தம்முடைய கரங்களை வைத்தார் மற்றும் வியாதியஸ்தர்கள் மீது கைகளை வைத்து அவர்களை சொஸ்தமாக்கினார் (மத். 19:13; மாற்கு 5:23). அப்போஸ்தலர்களும் வியாதியஸ்தரை சுகமாக்கினபோது (அப். 28:8), அலுவலுக்கு ஆட்களை நியமித்தபோது (அப். 6:6; 1 தீமோ. 5:22), ஆவியின் அற்புத வல்லமையை கொடுத்தப்போது தங்கள் கைகளை வைத்தனர். இந்த செயலானது அப்போஸ்தலர் 8:14-17; 19:1-6-ல் ஜெபத்தோடு இணைந்து செய்யப்பட்டது.[15]

வெளிப்படையாகவே, ஆவிக்குரிய வரங்களைக் கொடுக்க அப்போஸ்தலரைத் தவிர வேறு யாருக்கும் அதிகாரம் கொடுக்கப்படவில்லை. அற்புத வரங்களை அளிக்கும் வல்லமை சபைக்கு நிரந்தரமான செயலாக கொடுக்கப்படவில்லை. ஞானஸ்நானம் மற்றும் திருவிருந்து ஆகியவை மட்டுமே தொடர்ச்சியான கடைப்பிடிக்க வேண்டிய கட்டளைகளாக கொடுக்கப்பட்டது, ஆனால் வரங்களைக் கொடுப்பது அப்படியல்ல. அப்படிப்பட்ட வரங்கள் கொடுக்கப்பட்ட ஏவுதல் பெற்ற மனிதர்கள் மரித்தபோது, கைகளை வைக்குதல் அவசியமற்றுப் போனது. தற்போது தங்கள் கரத்தை வைத்து இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையை ஒருவரும் கொடுக்க முடியாது. இப்படிப்பட்ட வல்லமை இருப்பதாக உரிமை கோருபவர் யாராகிலும், மரித்தோரை எழுப்புதல் உட்பட அப்போஸ்தலருடைய வல்லமை யாவற்றையும் பயிற்சிக்க வேண்டும் (அப். 9:36-42).

மூல உபதேசத்தின் கடைசி இரு பகுதிகள், எதிர்கால நிகழ்வாகிய **மரித்தோரின் உயிர்த்தெழுதல், நித்திய நியாயத்தீர்ப்பு** ஆகியவையாகும்.

“செத்த” (νεκρῶν, *நெக்ரோன்*) என்பது ஒரு பன்மை வார்த்தையாகும். இந்த வசனமானது இயேசு உயிர்த்தெழுந்த போது உயிர்த்தெழுந்தவர்கள் உட்பட பல உயிர்த்தெழுதல்களை குறிப்பிடக் கூடும் (மத். 27:51-53). சரீர உயிர்த்தெழுதல் என்ற சிந்தையானது பல யூதர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக காணப்படுகிறது. உயர் குல சிறுபான்மையினராக இருந்த சதுசேயர்கள் மட்டும் இதில்

விதிவிலக்காக இருந்தனர் (அப். 23:8). எப்படியாயினும் மத்தேயு 22:23-33-ல் வெளிப்பட்டிருப்பது போல இயேசுவிடம் வினவினபோது இந்த பொருளானது விவாதத்திற்குரியதாக இருந்தது. உயிர்த்தெழுதலை ஆதரிக்க பயன்படுத்தப்படுகிற பழைய ஏற்பாட்டு வசனங்களாக யோபு 19:26; ஏசாயா 26:19; மற்றும் தானியேல் 12:2 ஆகியவை காணப்படுகிறது.

மரித்தோரின்; உயிர்த்தெழுதலானது புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் அதன் மேல் பெரும் வலியுறுத்தத்தை வைத்தபடியால் அது முக்கிய உபதேசமாக புதிய ஏற்பாட்டில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது, ஆனால் நாம் இதை யூதருடைய ஆயத்த விசுவாசத்திலிருந்து எடுத்துவிட முடியாது. உயிர்த்தெழுதலின் கருத்தானது புதிய ஏற்பாட்டை முழுவதுமாக நிரப்பியிருக்கிறது (லூக். 14:14; யோவான் 5:28, 29; 11:24, 25; அப். 17:18, 32; ரோமர் 1:4). இயேசுவானவர் உயிர்த்தெழுவதற்கு முன்னரே இது சீஷர்களுடைய புரிதலில் முக்கிய இடம் பிடித்திருந்தது.

நம்முடைய உயிர்த்தெழுதலின் உறுதியான அர்ப்பணிப்பிற்கு இயேசுவின் உயிர்த்தெழுதலே காரணமாகும் (அப். 17:31). மூல உபதேசங்களில் பட்டியலானது விசுவாசிகள் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலை விசுவாசித்தனர் அவர்கள் மூல உபதேசத்திலிருந்து கடந்து போக வேண்டும் என்று யூகம் கொள்ள வைக்கிறது.

பட்டியலில் ஆறாவதாக வருவது "நித்திய நியாயத்தீர்ப்பாகும்" ஒரு நியாயத்தீர்ப்பு முழு நித்தியத்தையும் தொடர்புபடுத்துகிறது. தேவனுடைய பல நியாயத்தீர்ப்புகள் அவற்றின் இயல்பில் தற்காலிகமானதாக இருக்கிறது, ஆனால் மனித இனத்தின் மீது இறுதியான மற்றும் நித்தியமான நியாயத்தீர்ப்பானது மத்தேயு 25:31-46; அப்போஸ்தலர் 17:30, 31 மற்றும் 2 கொரிந்தியர் 5:10 ஆகியவற்றில் போதிக்கப்பட்டிருக்கிறது. இந்த வசனப்பகுதிகளிலிருந்தும் மற்ற பகுதிகளிலிருந்தும் "நாம் தேவனுடைய நியாயாசனத்தின் முன் நிற்பது" (ரோமர் 14:10) தெளிவாக இருக்கிறது. தேசாதிபதியாகிய பெலிக்ஸ் அவர்களுடைய மனதிலிருந்த பாழாக்கும் பேரழிவின் எண்ணத்தைப் போன்று (அப். 24:25), சுவிசேஷத்தை கேட்டபிறகும் குற்றத்தை உணராத ஒவ்வொரு நபரின் மனதின் எண்ணமும் இருக்க வேண்டும்.

உயிர்த்தெழுதல் மற்றும் நியாயத்தீர்ப்பு ஆகியவற்றைக் குறித்து அல்லது இந்த உலகின் பாடுகளால் சிறிதளவு ஊக்கமிருப்பதைக் குறித்து ஒவ்வொரு கிறிஸ்தவரும் உணர்வுடையவர்களாக இருக்க வேண்டும். நியாயத்தீர்ப்பு நாளின் மேல் விசுவாசம் வைப்பதானது ஒருவரை சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய வைப்பதற்கு வல்லமையுள்ள தூண்டுதலாக இருக்கிறது (ரோமர் 2:3-6). இந்த கருத்தானது பழைய ஏற்பாட்டில் சுருக்கமாக கூறப்பட்டுள்ளது (பிர. 12:14). பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள தேவனுடைய பல நியாயத்தீர்ப்புகள் பாவத்திற்கான தற்காலிக தண்டனையாக காணப்படுகிறது.

எடுத்துக்காட்டாக இஸ்ரவேல் மக்கள் அவர்கள் மீது வரப்போகிற நியாயத்தீர்ப்பிற்காக “தேவனை ... சந்திக்க ஆயத்தப்படும்படியாக கூறப்பட்டனர். (ஆமோஸ் 4:12). எபிரெயர் 9:27 ல் நித்திய நியாயத்தீர்ப்பு தெளிவாகக் கூறப்பட்டு 12:25 ல் சுட்டப்பட்டிருக்கிறது.

**வசனம் 3.** இந்த பகுதி, 6:1-3, ஆகியவை **தேவனுக்குச் சித்தமானால் இப்படியே செய்வோம்** என்ற இந்த வார்த்தைகளோடு நிறைவு பெறுகிறது. இதன் ஆசிரியர் “தேவனுடைய உதவியாலும் மற்றும் அனுமதியாலும் நாம் பூரணத்திற்கு நேராக செல்வோம்” என்று பொருள்படுத்துகிறார். புரூஸ் அவர்கள் இந்த நிருபத்தை போதிப்பதால் கிடைக்கப்பட்ட முன்னேற்றமானது நம்மை பூரணத்திற்கு நேராக வழி நடத்தும் என்று கூறினார்.[16] எபிரெய நிருபம் எழுதப்பட்ட கிறிஸ்தவர்களில் சிலர் ஒருவேளை யூத மதம் மற்றும் கிறிஸ்தவம் ஆகிய இருவித விசுவாசம் முறையை பற்றிக்கொண்டிருக்க வேண்டுமென்று நினைத்திருக்க வேண்டும். இதன் காரணத்தினால் புறஜாதியிலிருந்து மனமாற்றமடைந்தவர்களை விட இவர்களுக்கு விசுவாச விலக்கின் ஆபத்து அதிகமாக இருந்தது.

இந்த ஆசிரியர் இதன் வாசகர்களை ஆவியின் ஆழ்ந்த சத்தியத்திற்குள் வழிநடத்த நாடினார், ஆனால் அனைத்து ஆவிக்குரிய வளர்ச்சியும் தேவனுடைய சித்தத்தை சார்ந்திருக்கிறது.” தேவனுக்கு சித்தமானால் என்ற விவரிப்பானது பக்தியாக மாறுவது மற்றும் ஆதி கிறிஸ்தவர்கள் மத்தியில் சொல்லப்பட்ட வழக்குச் சொல்லாக இருந்தது.[17] நம்முடைய வாழ்விலும் அதுவே உண்மையாக இருக்க வேண்டும்.

**6:4-8**

**4ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரம ஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், 5தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், 6மறுதலித்துப்போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம். 7எப்படியெனில், தன்மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்து, தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரைமுளைப்பிக்கும் நிலமானது தேவனால் ஆசீர்வாதம் பெறும். 8முள்செடிகளையும் முள்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும் சபிக்கப்படுகிறதற்கேற்றதாயுமிருக்கிறது; சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு.**

எபிரெயர் 6:4-8 ஆனது நமக்கு முன்பாக எச்சரிக்கையின்

சத்தியத்தைத் தருகிற பகுதியாக சுட்டப்படுகிறது. ஒருவேளை நாம் "பூரணத்திற்கு நேராக" கடந்து செல்லாமல் போனால், நாம் விசுவாசத்தை விட்டுவிடும் அபாயத்திலிருப்போம் அல்லது விசுவாசத்திலிருந்து முற்றிலும் விலகிப்போவோம்.

இந்த வசனம் விசுவாச விலக்கத்தின் ஆபத்தைக் குறித்து எச்சரிக்கிறது. விசுவாச விலக்கம் சாத்தியமற்றது என்பதை விசுவாசிப்போருக்கு இது பெரும் சிரமத்தை உருவாக்குகிறது. இந்த பொதுவான அணுகுமுறையானது இதில் ஈடுபாடு கொண்ட நபர்கள் உண்மையிலேயே மனமாற்றமடைந்தவர்களா என்ற விவாதத்தை எழுப்புகிறது. ஆர்த்தர் டபள்யு. பிங்க் அவர்கள் ஒரு கிறிஸ்தவர் விலகிப் போகுதல் சாத்தியமற்றது என விசுவாசித்தாலும், அவர் அதின் மீது ஒரு சரியான கவனத்தை செலுத்தவில்லை: (விசுவாசத்தின்) வெறும் பேராசிரியர்கள் எவற்றிலிருந்து "விலகிப்போகுதல்" என்பதைக் குறித்து ஒன்றும் கூறவில்லை.[18] குறைந்தபட்சம் அவர் இந்த விவரிப்பின் கவனத்தில் வருகிறவர்கள் வெறும் விசுவாச பேராசிரியர்களாக இருந்தார்கள் என்று அங்கீகரித்தார்.

"தொடருவதே" மனமாற்றத்தின் ஒரே அத்தாட்சிஎன்று மற்றவர்கள் கூறினர். இங்கு கூறப்பட்டுள்ள விலகிப்போன நபர்கள் உண்மையாகவே மனமாற்றமடைந்தவர்கள் என்று கூறி இந்த விவாதமானது நம்முடைய வசனத்திலும் புறந்தள்ளப்படுகிறது, நிச்சயமாகவே நாம் நம்முடைய வாழ்நாள் முழுவதும் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும்; ஆனால் அப்படி செய்வது மட்டுமே ஒருவர் நேர்மையாக மனமாற்றமடைந்தற்கு அத்தாட்சியாகாது.

விலகிப் போகுதல் சாத்தியமற்றது என்று விவாதித்த ஜேம்ஸ் ட்டி. டராப்பர். ஜூனியர் அவர்களும் "நாம் ஒருபோதும் ஒன்றை தொடங்காவிட்டால் நாம் பூரணராக முடியாது"[19] என்று கூறினார். இந்த வசனப்பகுதியில் விசுவாசத்திலிருந்து விலகினவர்களாக சித்தரிக்கப்பட்டவர்கள் தங்கள் கிறிஸ்தவ வாழ்வை தொடங்கியிருந்தனர், ஆனால் அவர்களுடைய முன்னேற்றத்தில் தோல்வியடைந்திருந்தனர். இப்படிப்பட்ட மக்கள் 10:26 ல் கிறிஸ்துவின் பலியை வேண்டுமென்றே புறக்கணித்தவர்களாக விவரிக்கப்பட்டனர். இப்படி செய்வதனால், மனமாற்றத்தை பயிற்சிக்க கூடிய ஒரே வழியை வெளியேற்றிவிட்டனர்.

6:4-6 ல் விவிரிக்கப்பட்டவர்கள் ஒருநாளும் கர்த்தர் அறிந்திராதவர்கள் அல்ல, ஆனால் தங்கள் விசுவாசத்தை இழந்த கிறிஸ்தவர்களாக இருந்தனர். விசுவாச விலக்கம் ஆபத்தானது "கற்பனையாக இல்லாமல் உண்மையாக இருக்கிறது; அப்படியில்லாதபட்சத்தில் இந்த நிருபமானது இதனுடைய உயர்ந்த சத்தத்துடன் கூடிய எச்சரிக்கைகளோடு முக்கியமற்றதாகவும், பாத்திரமற்றதாகவும், மற்றும் பரிகசிக்கக்கூடியதாகவும் கண்டிப்பாக புறந்தள்ளப்படவும் வேண்டும்."[20]

இது வருத்தமாக இருப்பதுபோன்று, ஒரு மெய் கிறிஸ்தவர்

கிறிஸ்துவின் சம்பவங்களில் தன்னுடைய நம்பிக்கையை இழந்து விலகிப்போகக் கூடும் (ரோமர் 11:22; கலா. 5:4). எபிரெயரின் ஆசிரியர் ஒரு இரட்சிக்கப்பட்ட நபர் அவர் எப்போதும் இரட்சிக்கப்பட்டவராய் இருப்பார் என்று உத்திரவாதம் கொடுப்பது கிடையாது. ஒரு முறை இரட்சிக்கப்பட்ட நபர் அவர் மீண்டும் கர்த்தரிடம் திரும்பி இரட்சிக்கப்படுவாரென்றும் அவர் யோசித்தது கிடையாது. ஏவுதல் பெற்ற இந்த எழுத்தாளர் ஒரு நபர் மீண்டுமாக, நித்தியமாக விலகிப்போய் அதே நிலையில் இருக்க முடியும் என்று விசுவாசித்தார். உண்மையாகவே, அவர் "விலகிப்போன" கிறிஸ்தவர்களிடம் பேசினார் (வசனம் 6).

விலகிப்போன இந்த நபர்கள் கிறிஸ்தவர்களாக இருப்பதுபோன்று காணப்பட்டனர் என்ற முடிவிற்கு எவரும் வர முடியாது, ஏனெனில் அவர்கள்; தெய்வாதீனமாக கொடுக்கப்பட்ட ஆசீர்வாதங்கள் பலவற்றை பெற்றிருந்தனர். தேவனுடைய கரத்திலிருந்து இந்த ஆசீர்வாதங்களை பெற அவரையே ஏமாற்றியிருக்க முடியுமா? "இனிவரும் உலகத்தின் *பெலன்களையும்*" தேவன் மட்டுமே அளிக்கக் கூடியவராக இருக்கிறார் (வசனம் 5; வலியுறுத்தங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன). "வல்லமைகள்" (δύναμις, *டுனாமிஸ்*) என்பதற்கு மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிற அதே வார்த்தையே 2:4 ல் "அற்புதங்களுக்கும்" பயன்படுத்தப்பட்டிருக்கிறது. நாம் "தேவன் இந்த போலியான விசுவாசிகளுக்கு இவைகளை கொடுத்தாரா?" என்று கேட்கக் கூடும். இல்லை, அவர் ஏமாற்றப்பட முடியாது. ஆகவே இங்கு கூறப்பட்டுள்ள நபர்கள் உண்மையாக விசுவாசிகளாக இராஜ்ஜியத்தில் பிரவேசித்திருந்தனர், ஆனால் விசுவாசத்தை விட்டு விலகி விழுந்துபோகக் கூடியவர்களாக இருந்தனர்.

**வசனம் 4.** பிற்காலத்தில் உண்மையற்றவர்களாக மாறிப்போனவர்களுக்கு தேவன் அளித்த பெரும் ஆசீர்வாதங்களில் ஒன்றாக **பிரகாசிக்கப்படுதல்** இருந்தது. இது 2 கொரிந்தியர் 4:3, 4 ல் சுவிசேஷத்தின் "ஒளி (யைப்பார்த்து)" என்று சித்திரிக்கப்பட்டுள்ளது. பிசாசினால் குழப்பத்திற்குள்ளாக்கப்பட்டவர்களே பிரகாசிக்கப்படாதவர்களாக இருக்கிறார்கள். 10:32 ல் "முந்தினநாட்களை நினைத்துக்கொள்ளுங்கள்; நீங்கள் பிரகாசமாக்கப்பட்டிருந்த அந்த நாட்களில் உபத்திரவங்களாகிய மிகுந்த போராட்டத்தைச் சகித்தீர்களே." என்று இதன் ஆசிரியர் கூறினார். அங்கே "பிரகாசிக்கப்பட்டு" என்று காணப்படுவது 10:26 ல் காணப்படுகிற "சத்தியத்தின் அறிவைப் பெறுதல்" என்ற வார்த்தையோடு ஒத்த வார்த்தையாக இருக்கிறது. இந்த நிருபம் எழுதப்பட்ட சமயத்தில், சுவிசேஷத்தின் ஒளியானது பாவத்தின் இருளை மேற்கொண்டு அவர்களுடைய இருதயத்தை நிரப்பியிருந்தது.

இயேசு உலகத்தின் ஒளியாக இருக்கிறார் (யோவான் 8:12), மேலும் இந்த ஒளியில் இருக்கிறவர்கள் உண்மையாகவே மனமாற்றமடைந்திருக்கின்றனர். அவர் இந்த ஒளியில் தொடர்ந்து நடந்தால் (1 யோவான் 1:7), கிறிஸ்துவின் இரத்தத்தினால் உண்டாகும் மன்னிப்பில் கடந்து

செல்வார். ஒருவர் ஒளியில் நடக்க முயற்சிக்கும் போது தன்னையறியாமல் பாவம் செய்யக்கூடும். அவர் அந்த பாவத்தைக் குறித்த குற்ற உணர்வின் விழிப்புணர்வு இல்லாவிட்டால் அவரால் அறிக்கை செய்ய முடியாது. அதைப் போன்ற சூழலில் இயேசுவின் இரத்தம் அவருடைய பாவத்தை நிச்சயமாக தொடர்ந்து சுத்திகரிக்கிறது. எப்படியாயினும் அவர் அதைக் குறித்த விழிப்புணர்வு அடைந்தவுடன் அந்த பாவத்தை ஒத்துக் கொள்ள வேண்டியது அவசியம் (1 யோவான் 1:8-10). "மரணத்திற்கு ஏதுவான பாவம்" (1 யோவான் 5:16) என்று கூறப்பட்டிருப்பது அநேகமாக ஒரு சகோதரன் அறிக்கையிடாத பாவமாக இருக்கக் கூடும், ஏனெனில் அறிக்கையிடுகிற எந்தப் பாவமும் மன்னிக்கப்படுகிறது (1 யோவான் 1:9). ஒரு தாழ்மையான மற்றும் பங்களிக்கும் நபர் அவருடைய பாவங்களைக் குறித்து விழிப்புணர்வில்லாமல் இருக்கக் கூடும் என்று அறிந்து ஒருவேளை எப்போதும் மன்னிப்பை நாடுவார். எபேசியர் 5:8 ல் "முன்னர் இருளில் இருந்தவர்களுக்கு" என்று சாடையாகக் குறிப்பிடுகிறார், ஆனால் அவர் எழுதும்போது அவர்கள் "கர்த்தருடைய ஒளியில்" இருந்தார்கள். கொலோசெயர் 1:13-ல் "இருளின் அதிகாரத்தினின்று" மீட்கப்பட்டிருக்கிறவர்களைக் குறித்துக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனமாற்றம் அடைந்த ஒருவர் **பரம ஈவை ருசிபார்த்தவராக** இருக்கிறார். கிருபையிலிருந்து விலகிப்போகுதலை சாத்தியமற்றது என கூறுகிறவர்கள் இங்கு கூறப்பட்டுள்ள நபர்கள் "ருசி பார்த்திருக்கிறார்கள் ஆனால் ஒருபோதும் உண்மையாக இரட்சிப்பை பெற்றிருக்கவில்லை" என்றுக் கூறுகின்றனர். இந்த கருத்தானது எபிரெயர் 2:9 லுள்ள இயேசுவின் "மரணத்தை ருசித்தல்" என்ற கருத்தால் புறந்தள்ளப்படுகிறது. "ருசித்தல்" (γεύομαι, *கெயொமய்*) என்பதற்கு இந்த இருபகுதிகளிலும் இதே வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இயேசு சிலுவையில் இருந்தபோது அவருக்கு காடி கலந்த ரசத்தை கொடுத்தபோது ருசித்ததற்கும் (ஆனால் விழுங்கினதற்கு அல்ல) இதே வார்த்தையே பயன்படுத்தப்பட்டிருப்பது உண்மையாக இருக்கிறது (மத். 27:34), ஆனால் எபிரெயரின் பயன்பாடு வேறுபட்டிருக்கிறது. அவர் மரணத்தை மட்டும் "ருசித்தாரா" அல்லது முழுமையாக அனுபவித்தாரா? எபிரெய ஆசிரியருக்கு "ருசிப்பது" என்பது முற்றிலுமாக சிலவற்றை உள்வாங்கிக் கொள்ளுதலாக இருந்தது. இந்த வார்த்தையானது ஒன்றில் முழுமையாக பங்கு கொள்ளுதலை பொருள்படுத்துகிறது.[21] இது தன்னில் ஒரு பகுதியாக ஒன்றை "ருசிக்கச் செய்தல்" என்று பொருள்படுகிறது. "தேவனுடைய வார்த்தையின் நன்மையை ருசிபார்ப்பது" (வசனம் 5) அதை முற்றிலும் நம்முடைய இயல்பின் ஒரு பகுதியாக ஏற்படுத்திக் கொள்ளுதலாக இருக்கிறது.

"பரம ஈவானது" கிறிஸ்துவினால் பெறப்பட்ட இரட்சிப்பாக இருக்க வேண்டும். இது அவர் மட்டுமே கொடுக்கக் கூடிய புதிய ஜீவனாக இருக்கிறது (ரோமர் 6:23). அந்த வரத்தை அவர்கள் பெற்றிருந்தனர், இங்கே கூறப்பட்டிருப்பவர்கள் உண்மையாக மனமாற்றமடைந்திருந்தனர். சிலர் இந்த ஈவை பரிசுத்த ஆவியானவர் என்று கூறுவதுண்டு, ஆனால் அது இந்தப் பகுதியில் தேவையற்ற திரும்ப திரும்ப கூறுதலைக் கொடுக்கும், ஏனெனில் "அவர்கள் பரிசுத்த ஆவியில் பங்குபெற்றவர்களாக" இதன் ஆசிரியர் இதற்கு அடுத்ததாகக் கூறியிருக்கிறார். ஆவியை பெறுபவர்கள் தம்மை "பானம் பண்ணுவதாக" இயேசு கூறினார் (யோவான் 7:37-39). இந்த எண்ணம் பவுலால் 1 கொரிந்தியர் 12:13 ல் மறுபடியும் கூறப்பட்டுள்ளது. நாம் விசுவாசிக்கிற வரைக்கும் நமக்குள் கிறிஸ்துவின் புதிய ஜீவனை நாம் கொண்டிருக்கிறோம். யோவான் 5:24 ல் காணப்படும் காலமும், மற்ற இதர வசனப்பகுதிகளும் "ஒருவர் தொடர்ந்து விசுவாசத்தோடு இருக்க வேண்டுமென்பதைக்" காட்டுகிறது. கிறிஸ்தவர்கள் தற்போது "நித்திய ஜீவனின் நம்பிக்கையில் இருக்கிறார்கள்" (தீத்து 1:2). ஒருவர் ஏற்கெனவே காண்கிறதில் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டிய அவசிமில்லை, ஆனால் அவர் பெற்றுக்கொண்ட பிறகு நம்பிக்கை முடிவிற்கு வருகிறது (ரோமர் 8:24, 25) என்று பவுல் பிரகடனப்படுத்தினார். நம்பிக்கையின் முடிவும், வரவேற்பும் இயேசுவின் வருகையில் நிகழப்போகிறது (எபி. 9:27, 28). ஈவு (δωρεά, *டோரியா*) என்பதற்கு பயன்படுத்தின வார்த்தையானது புதிய ஏற்பாட்டில் பெரும்பாலும் விசேஷமாக "ஆவிக்குரிய வரங்களைக்" குறிப்பிடுகிறது.[22] எப்படியாயினும் யோவான் 4:10 ல் இரட்சிப்பின் ஈவைக் குறிக்க இதே வார்த்தை பயன்படுத்தப்பட்டிருப்பதை நாம் காண முடியும்.

**பரிசுத்த ஆவியானவரில் பங்கு கொள்ளுதல்** மற்றொரு ஆசீர்வாதமாக இருந்தது. இந்த உலகம் பரிசுத்த ஆவியானவரைப் பெற முடியாது (யோவான் 14:17), ஆனால் அவர் கிறிஸ்தவர்களுக்கு வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறார் (கலா. 4:6; ரோமர் 8:9 ஐ காண்க). இயேசு ஆவியானவரை எல்லா விசுவாசிகளுக்கும் வாக்குப்பண்ணினார் (யோவான் 7:37-39), ஆனால் கிறிஸ்து "மகிமையடைந்து" பரலோகத்திற்கு திரும்பும் வரை அவரால் கொடுக்க முடியவில்லை. அப்போஸ்தலர் 2:38 ல் பரிசுத்த ஆவியின் வரத்தை அளித்தார். நமக்குள் கிறிஸ்து வாசத்தை நாம் எப்படி கொண்டிருக்கிறோமோ அதைப்போன்றே (எபே. 3:17) பரிசுத்த ஆவியானவர் விசுவாசத்தினால் அருளப்பட்டதாக உறுதியாக தெரிகிறது (கலா. 3:1, 2, 14).

பரிசுத்த ஆவியின் வல்லமையை ஆதி சபையினர் எப்படி புரிந்து கொண்டனர்? அப்போஸ்தலர் 5:32 பரலோகத்திலிருந்த கிறிஸ்துவின்

மகிமைப்படுத்தபடுதலை பரிசுத்த ஆவியானவர் சாட்சியிட்டதாகவும் மேலும் அப்போஸ்தலர்களும் அந்தப்படியே செய்ததாகவும் கூறுகிறது. அப்போஸ்தலர்கள் செய்த அற்புதங்களினால் ஆவியானவர் நிச்சயமாக இந்த மகிமையடைதலை கொண்டு வந்தார். பரிசுத்த ஆவியானவரைக் குறித்து, "... தேவன் தமக்கு கீழ்ப்படிகிறவர்களுக்கு தந்தருளின பரிசுத்த ஆவி" (அப். 5:32) என பேதுருவும் கூறினார். அதாவது அப்போஸ்தலர்கள் இப்படிப்பட்ட அற்புத வல்லமையைக் கொண்டிருந்தனர் என்பது உறுதியாகிறது (காண்க அப். 2:43; 3:1-9; 5:1-12), பின்னும் அவர்கள் இந்த வல்லமையை சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்த மற்றவர்களுக்கு தந்தனர் (அப். 8:14-17; 19:1-6). எப்படியாயினும் இயேசுவானவர் ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட வரங்களை அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே வாக்குப்பண்ணியிருந்தார் (யோவான் 14:26; 15:26, 27; 16:12, 13). அப்போஸ்தலர்களுக்கு கொடுக்கப்பட்ட இந்த அற்புத வல்லமையான வரங்களை அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் கொடுக்கப்பட்டது என்று நாம் கூறுவோமானால் நாம் இந்த வசனப்பகுதியை தவறாக பயன்படுத்துகிறோம்.

அப்போஸ்தலர் 10:45, 46-ல், இந்த "பரிசுத்த ஆவியின் வரமானது" நிச்சயமாகவே பரிசுத்த ஆவியானவரின் அற்புத அருளுதலாக இருந்த அந்நிய பாஷையையும் உள்ளடக்கியிருந்தது. இந்த வரமானதுஅப்போஸ்தலர்கள் பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவரை பெற்றபோது முதன்முதலில் பயிற்சிக்கப்பட்டது (அப். 2:4, 6-8).

அப்போஸ்தலர் 8 ல் சமாரியர்கள் விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்ற பின்னரும் பரிசுத்த ஆவியானவருக்காக காத்திருந்ததை காணவும். பேதுருவும் யோவானும் பரிசுத்த ஆவியானவரை அவர்கள் மேல் இறங்கி வரச் செய்த பின்னரே அவர்கள் பரிசுத்த ஆவியானவரிடமிருந்து வல்லமையைப் பெற்றுக் கொண்டனர். அவர்கள் மீது பரிசுத்த ஆவி இறங்கி வரச் செய்து இப்படிப்பட்ட வரங்களைப் பெறுவதற்கு ஒரு அப்போஸ்தலர் அவசியமென்பது தெளிவாகத் தெரிகிறது. சமாரியாவில் ஏற்கெனவே அற்புதங்களைச் செய்துக் கொண்டிருந்த பிலிப்பு அவர்கள் "பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற" கண்டிப்பாக அந்த அவர்களுக்கு வல்லமையை தந்திருக்க வேண்டும் அல்லது அவர் முன்பே அதைச் செய்திருக்க வேண்டும். அப்போஸ்தலர் 2 ஆம் அதிகாரத்திலிருந்து அப்போஸ்தலர் 11:15ல் கொர்நேலியுவின் வீடு வரை (அப்போஸ்தலர்களின் கைகளை வைக்காமல், தேவனால் அருளப்படுதல்) பரிசுத்த ஆவியானவரின் அற்புத வல்லமைகளை அருளப்பெறுதல் நேரடியாக நடை பெறவில்லை, "பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினது போலவே, அவர்கள் மீதும் இறங்கினார்" என்று பேதுரு கூறினார். இடையே அதைப் போல நிகழ்வு நடை பெறாததால், இந்த நிகழ்வை

அப்போஸ்தலர் 2:1-4ல் பதிவு செய்யப்பட்டுள்ள "ஆதி காலத்தோடு" பேதுரு ஒப்பிட்டார்.

பிற்பாடு அப்போஸ்தலர் 19:1-7 ல் பவுல் எபேசு பட்டணத்திலிருந்த ஏறக்குறைய பன்னிரெண்டு பேருக்கு இயேசுவின் ஞானஸ்நானத்தோடு ஞானஸ்நானம் கொடுத்த பின்னர் அவர்களுக்கு பரிசுத்த ஆவியின் வரத்தைக் கொடுத்தார். அவர்கள் யோவானால் அல்லாமல் மற்றவர்களால் போதிக்கப்பட்டு கடைப்பிடிக்கப்பட்ட (சாத்தியமாக அப்பொல்லோவால்) "யோவானின் ஞானஸ்நானத்தை" பெற்றிருக்க வேண்டும்.

அற்புதங்களினால் சுவிசேஷம் உறுதிப்படுதல் நிறுத்தப்பட்டுப்போனது. எப்படியாயினும் எபேசியர் 5:17, 18 ல் கட்டளையிட்டிருப்பது போன்று, கீழ்ப்படிவதின் மூலம் ஒருவர் பரிசுத்த ஆவியானவரின் உள் நிறைவை அனுபவிக்க முடியும். இந்த "நிறைவானது" செயல்தாக்கத்தோடு கீழ்ப்படிகிற கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே நிகழுகிறது. பரிசுத்த ஆவியானவரை குறித்துப் பேசுகிற வசனப்பகுதிகள் அவைகள் அற்புத வல்லமையின் விதமா அல்லது கீழ்ப்படியும் விசுவாசத்தின் இயல்பான விளைவா என்பதை குறித்து ஒருவர் கவனமாக மதிப்பீடு செய்ய வேண்டும்.

ஒரு கிறிஸ்தவருக்கு ஆவியானவரின் வாசத்தைக் குறித்த விழிப்புணர்வு விசுவாசத்தை உண்டுபண்ணுகிற அவருடைய வசனத்தின் வெளிப்பாடால் வருகிறது (ரோமர் 10:17). இது எவ்விதத்திலும் வசனமே ஆவியானவர் என்ற யோசனையை கூறுவது கிடையாது, ஆனால் அவருடைய "பட்டயத்தின்" (எபே. 6:17) மூலம் பாவிகள் மற்றும் பரிசுத்தவான்களின் இருதயத்தில் வல்லமையாக கிரியை செய்கிற ஆவியானவரை கூறுகிறது. பேசப்பட்ட அல்லது எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையானது நம்முடைய இருதயத்தை உருவக்குத்துகிற வல்லமையுடையதாக இருந்து (அப். 2:37), இதைக் கேட்பதினால் உள்ளத்தில் உணர்வை ஏற்படுத்தி நம்மை மனமாற்றம் செய்ய வைக்கிறது (யோவான் 16:8; எபி. 4:12, 13). "ஆவியே உயிர்ப்பிக்கிறது" என்று இயேசு கூறினார், ஆனால் மேலும் அவர் கூறுகையில் "மாம்சத்தினால் எந்த ஆதாயமுமில்லை, நான் கூறுகிற இந்த வார்த்தைகளே ஆவியும் ஜீவனுமுள்ளது என்றார்" (யோவான் 6:63). ஆக இயேசுவின் வார்த்தையின் மூலம் ஆவியானவரின் புதிய ஜீவன் வருகிறதென்று நாம் காண்கிறோம். நாம் வசனத்தின்படி வாழ்வது ஆவியானவர் நமக்குள் இருக்கிறார், அவருடைய சுத்திகரிப்பின் செயல் நமக்குள் இருக்கிறது என்பதற்கு அத்தாட்சியாக இருக்கிறது (அப். 20:32). இந்த அத்தாட்சியானது முதல் நூற்றாண்டில் பொதுவான அருளப்படுதலாக இருந்ததுபோல, நமக்கு அற்புத வரம் அந்நிய பாஷைகளில் பேசுவதினாலேயோ அல்லது வியாதியஸ்தரை சுகமாக்குதலினாலோ நமக்கு கொடுக்கப்படவில்லை.

மேலும் இந்த உலகத்தை நம்முடைய நன்மைக்காகவே ஆவியானவர் மேலதிகாரம் செய்கிறார். அதை நாம் தேவனுடைய ஒட்டு மொத்த கிரியைகளின்; மற்றொரு எல்லையாகிய "தெய்வீக ஒதுக்கீடு" என்று அழைக்கிறோம். மனந்திரும்புதல் மற்றும் சுத்திகரிப்பு செய்வதிலும் மக்கள் சுவிசேஷத்தை கேட்பதிலும் அதற்கு மறுமொழி செய்வதிலும் அவர் கிரியை செய்கிறார். தேவனுடைய வார்த்தையில் நம்முடைய விசுவாசத்தால் வருகிற ஆவிக்குரிய வளர்ச்சியின் அர்த்தத்தையும் (1 பேதுரு 2:1, 2), மற்றும் நம்முடைய நன்மைக்காக அவருடைய ஒதுக்கீடு கிரியைகளையும் நாம் வேறுபடுத்திக் காணவேண்டும் (ரோமர் 8:28).

"பரிசுத்த ஆவியானவரைப் பெற்றவர்கள்"; என்ற சொற்றொடரானது ஆவியால் நிறையப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்ட மக்கள் பாவத்திற்குள் பின்வாங்கிச் செல்லும் சாத்தியக்கூறு இருக்கிறதை காட்டுகிறது (கலா. 2:11). மாயவித்தைக்காரனாகிய சீமோன் வஞ்சிக்கிற மனச்சாயலால் "கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்படுவதற்கு"; அனுமதிப்பதற்கு முன்னர் வல்லமைகளைப் பெற்றுக் கொண்டான் என்பது உறுதியாக இருக்கிறது (அப். 8:18-24).

**வசனம் 5. தேவனுடைய நல் வார்த்தைகளை ருசி பார்த்தும்** என்பது அடுத்த வாக்கியமாக இருக்கிறது. இங்கு வார்த்தை என்று கூறப்பட்டுள்ளது கிறிஸ்துவிற்கு எப்போதாவது பயன்படுத்தப்படும் λόγος (*லோகோஸ்*) என்ற வார்த்தையல்ல (யோவான் 1:1, 2, 14), மற்றும் புதிய ஏற்பாட்டில் சுவிசேஷத்தை குறிப்பிடும் வார்த்தையுமல்ல. மாறாக இது வார்த்தையை குறிப்பிடும் பொதுவான பதமாகிய ῥῆμα (*ரேமா*) என்று கூறப்பட்டிருக்கிறது. இது தேவனால் பேசப்பட்ட வார்த்தையையும் குறிப்பிடக் கூடும். *லோகோசும்* ரேமாவும் அடிக்கடி அடையாள பொருள்களை கொண்டுள்ளது. அநேகமாக ரேமா என்பது கிறிஸ்து மற்றும் அவருடைய செயல்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகவும் இருக்கக் கூடும். நெய்ல் ஆர்லைட்ஃப்புட் அவர்கள் இது ஒருவேளை "நற்செய்தி" அல்லது சுவிசேஷத்திற்கு சமமாக இருக்கக் கூடும் என்று கூறினார்.[23] இந்த நல்ல வார்த்தைக்கு கீழ்ப்படிவதினால், நாம் சுத்திகரிக்கப்பட்டிருக்கிறோம் (யோவான் 17:17 மற்றும் அப்போஸ்தலர் 20:32 ல் λόγος [*லோகோஸ்*] வார்த்தையானது சுத்திகரிப்பதாக கூறப்பட்டிருந்தாலும் 1 பேதுரு 1:22, 23 லும் கூறப்பட்டுள்ளது). "ருசித்தல்" என்ற இந்த வார்த்தையானது அதனுடைய சத்தியத்தின் செய்தியிலும், நம்முடைய கீழ்ப்படிதலிலும், இரட்சிக்கும் விசுவாசத்தையும் மற்றும் நம்பிக்கையையும் (எபி. 5:8, 9) கொண்டு வரக் கூடியதாக இருக்க வேண்டும். இந்த வார்த்தையினாலே நாம் சுத்திகரிக்கப்பட்டு மறுபிறப்படைந்திருக்கிறோம். கொரிந்தியர்களை "சுவிசேஷத்தின் மூலம் பெற்றதாக" (1 கொரி. 4:15;

KJV) பவுல் குறிப்பிட்டார். NASB மொழிபெயர்ப்பு "... சுவிசேஷத்தினால் நான் உங்களுக்கு தகப்பனானேன்" என்று கூறுகிறது.

"தேவனுடைய நல்ல வார்த்தையினால்" அடைகிற விசுவாசமானது "நம்பிக்கை கொண்டிருக்கிறவைகளுக்கு உறுதியாக இருக்கிறது ..." (எபி. 11:1). ஒருவர் சுவிசேஷத்தை கேட்டு அதனை விசுவாசித்தால் அந்த விசுவாசமே நித்திய இரட்சிப்பின் மாபெரும் உறுதியை விளைவிக்கிறது!

இங்கே விவாதிக்கப்பட்டு வருகிற மக்கள் ஏதோ ஒரு வழியில் **இனி வரும் உலகத்தின் பெலன்களை பெற்றிருந்தனர்.** "பெலன்கள்" (δύναμις, *டுனாமிஸிலிருந்து* வருகிறது) என்ற பதம் 2:4 ல் அற்புதங்களை நடப்பித்தலோடு தொடர்புடைய அதே பதமாக இருக்கிறது. "இனி வரும் உலகம்" என்பது சாதாரணமாக "மேசியாவின் காலத்தை" பொருள்படுத்து குறிப்பிடும் விவரிப்பாக இருக்கிறது. இப்படி குறிப்பிடுவதின் மாறுபாடுகள் சுவிசேஷத்தில் மூன்று முறையும் (மத். 12:32; மாற்கு 10:30; லூக். 18:30), நிருபங்களில்மூன்று முறையுமாக (எபே. 1:21; 2:7; எபி. 6:5) புதிய ஏற்பாட்டில் ஆறு முறை கூறப்பட்டுள்ளது.

ஒருவேளை "இனி வரும் உலகம்" இன்னமும் எதிர்காலத்திலிருந்தால், நாம் "எதிர்காலத்திலுள்ள ஒன்றை நாம் எப்படி அனுபவிக்கக் கூடுமென்று நாம் கண்டிப்பாக கேட்கக் கூடும்?" இதனை எழுதும் காலத்தில் இதன் வாசகர்கள் இந்த பெலத்தின் சிலவற்றை ஏற்கெனவே அனுபவித்திருந்தனர். இன்னும் சில காரியங்கள் எதிர்காலத்தை பொருள்படுத்தியிருந்தால், அவர்கள் அதை "விசுவாசத்தினால்" அனுபவித்திருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக ஆபிரகாம் எதிர்காலத்தை நோக்கி கிறிஸ்துவின் நாளைப் பார்த்தார் (யோவான் 8:56). இன்னும் தாக்கமாகக் கூறுவதென்றால் அவர் அதன் அருகில் ஒருபோதும் செல்வதற்கு முன்னரே பரலோகத்தைப் பார்த்தார் (எபி. 11:10) மோசே தேவனை "அதரிசனமானவர் போல கண்டார்" (11:27). இந்த சூழலில் பெலன்கள் என்று கூறப்படுவது எதுவானாலும் அவர்கள் "பரிசுத்த ஆவியை பெற்றதால்" ஏதோ ஒரு வித்தியாசமாக பார்க்கப்பட்டனர்.

**வசனம் 6. அவர்கள் மறுதலித்துப் போனார்கள்** என்ற வார்த்தையானது தேவனுடைய கிருபையை விட்டு விலகுதலின் சாத்தியத்தைக் காட்டுகிறது. "ஒருவேளை அவர்கள் அதன் பின்பு *விசுவாசததைவிட்டு விலகினால்* என்று கூறுகிறது" (வலியுறுத்தங்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது), மற்றும் NIV யானது *"ஒருவேளை அவர்கள் விலகிப்போனால்"* என்று கூறுகிறது (வலியுறுத்தங்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது). லைட்ஃபுட் அவர்கள் அவர்களுக்கு முன்னர் மற்றவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் காட்டி தன்னுடைய

வாசகரை எச்சரிக்கிறார் என்று கூறினார்.[24] அது ஒருபோதும் நடக்காது என்று கூறின ஆல்பர்ட் பர்னேஸ் அவர்களின் யோசனைகளுக்கு[25] முரண்பட்டு, இந்த சொற்றொடரானது முன்பு இரட்சிக்கப்பட்ட ஆனால் விலகிப்போன நபர்களைக் குறித்ததாக இருக்கிறது. கிறிஸ்தவ உண்மையான மனமாற்றலை அறிகுறியிடுகிற இந்த எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொண்டு, அதன் பின்னர் விசுவாசத்திலிருந்தும் மற்றும் கிருபையிலிருந்தும் விலகுதலானது சாத்தியமாக இருக்கிறது.

1 தீமோத்தேயு 1:19 ல் ஒருவர் "விசுவாசமாகிய கப்பலை சேதப்படுத்தினார்கள்" என்று கூறப்பட்டுள்ளதற்கு இந்த எச்சரிக்கையானது ஒப்பிடக் கூடியதாகும். இங்கே முழுமையான விசுவாச விலக்கம் பேசப்படுகிறது. எபிரெயர்கள் பின்வாங்கிப் போகும் குற்ற உணர்விலிருந்தார்கள், ஆனால் விசுவாச விலக்கத்தின் எல்லையை அடையவில்லை.

மறுபடியும் (சிலரை) **மனந்திரும்புதலுக்கேதுவாய் புதுப்பிக்கிறது கூடாத காரியம்** என்று ஏன் கூறப்பட்டுள்ளது?[26] நம்முடைய வசனப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள விசுவாச துரோகம் பல ஆசீர்வாதங்களைப் பெற்றிருந்து, ஆவிக்குரிய காரியங்களை குறித்த அவர்களுடைய அக்கறையின்மையானது **தேவனுடைய குமாரனை தாங்களே மறுபடியும் சிலுவையிலறைந்து அவமானப்படுத்துகிறதாக இருந்தது.** (ἀνασταυρόω, *அனஸ்டௌ* "ருவிலிருந்து சிலுவையிலறை") கிரேக்க முடிவற்ற வினைச்சொல்லால் (ἀνασταυροῦντας, *அனஸ்டொளரௌன்டஸ்*) அறிகுறிகாட்டுகிற நிகழ்காலத்தை கவனிக்கவும். அவர்களுடைய இருதயம் விலகிப்போகுதலே இந்த தொடருகிற செயலை செய்து, உண்மையான மனந்திரும்புதலுக்கான சாத்தியத்தை வெளியேற்றியது. எப்படியாயினும் தொடர்ச்சியான "சிலுவையிலறையப்படுதல்" நிறுத்தப்பட வேண்டுமென்றால், அவர்கள் ஒருவேளை "மனந்திரும்புதலுக்கேதுவாக புதுப்பிக்கப்பட வேண்டும்" மேலும் விசுவாச துரோக முடிவைத் தவிர்க்க வேண்டும். அவர்கள் கிறிஸ்துவை இனியும் "வெளிப்படையான அவமானத்திற்குப்" போட மாட்டார்கள். இங்கே அவமானம் என்று கூறப்பட்டுள்ள வார்த்தையானது மரியாளை அவமானப்படுத்த மனதில்லாமலும் "பொதுவான *முன்னுதாரணமாக்காமலும்*" (παραδειγματίζω, *பேரடெய்க்மாடிக்சோ* விலிருந்து) அவரை தள்ளிவிடத் தீர்மானித்ததாக குறிப்பிடுகிற அதே வார்த்தையாக இருக்கிறது.

**எனவே** என்பது "ஆகவே" என்று மொழிபெயர்க்கப்பட்டு (என்ஏஎஸ்பியின் சில தொகுப்புகளின் பக்க எல்லைகளில் தெரிவிக்கப்பட்டிருப்பதுபோன்று), "ஆக" என்ற வார்த்தையும் சேர்க்கப்படக்கூடும் (நிகழ்கால வினைச்சொல்லிற்கு ஒத்தச்சொல்லின் கருத்தில்). இப்படிப்பட்ட வியாக்கியானமும் கூட, ஒருநபரின்

வெளித்தோற்ற வகை மங்கலாகவே விவரிக்கப்பட்டிருக்கிறது.

இங்கே கவனத்திற்குள் இருக்கிற ஆத்துமாக்கள் “பின்வாங்கப்” போராடுகிறவர்களல்ல; அவர்கள் முழுமையான விசுவாச துரோகக்காரர்களாக இருக்கிறார்கள். இந்த இருவருக்கும் வேறுபாடுகள் கண்டிப்பாக செய்யப்பட வேண்டும். இந்த விசுவாச துரோகக்காரர்கள் “சபிக்கப்பட்டவர்களாக” எண்ணப்பட வேண்டும் (கலா. 1:8, 9).

அவர்கள் ஏன் இவ்வளவு நம்பிக்கையற்றவர்களாக இருக்கிறார்கள்? ஏனெனில் அவர்கள் தங்கள் இருதயத்தை மனந்திரும்பக் கூடாத எல்லை வரை கடினப்படுத்தினார்கள். அப்படிப்பட்ட நபர் தண்டனைக்கு பாத்திரராக இருக்கிறார், ஏனெனில் அவர்கள் கிறிஸ்துவை விசுவாசிப்பதில் தோல்வியடைந்தது மட்டுமல்லாமல், அவரை இந்த உலகத்தின் முன் அவமானப்படுத்தியிருந்தனர். அவர்களுடைய விசுவாசத் துரோக நம்முடைய கர்த்தருடைய சிலுவையை கேலிக்கூத்தாக்கும் செயலாக இருக்கிறது. இப்படிப்பட்ட கடினமான பாவிக்கு தேவன் தம்முடைய மனமாற்ற வல்லமையை துண்டித்துப்போடுகிறார்.[27] முரட்டாட்டத்தை அதனுடைய நிலையில் அப்படியே இருக்க விட்டுவிடுவது நம்முடைய இரட்சகரை வெளிப்படையான அவமானத்திற்குள்ளாக்கும். அவர்கள் இயேசு சிலுவையிலிருக்கும்போது பரிகசித்தவர்களுடைய ஸ்தானத்தில் தங்களை இருத்திக் கொள்கின்றனர். உண்மையற்ற கிறிஸ்தவர்கள் உண்மையிலேயே கிறிஸ்துவை மறுபடியும் சிலுவையிலறைய இயலாது, ஏனெனில் அவர் பரலோகத்தின் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார், ஆனால் அவர்களுடைய செயலானது அவரை ஒரு மரத்தில் ஆணியிலறைதலுக்கும் அவரை பரிகசித்தலுக்கும் ஒப்பிடக் கூடியதாக இருக்கிறது.

மனந்திரும்புதலானது ஒரு பரிசுத்தவானுடைய வாழ்வில் இயற்கையாகவும் தினசரியாகவும் நடக்க வேண்டியதாக இருக்கிறது. அவர் தன்னை அறியாமல் பெரும் பிழை செய்ததாகவும், தவறிழைத்திருப்பதாகவும, மற்றவரை தவறாக நடத்தியதாகவும், சிறிய அறிகுறி தென்பட்டாலும் நான் வருந்துகிறேன், உங்களை காயப்படுத்த இவ்வாறு செய்யவில்லை என்று கூறி அதை உண்மையாக அர்த்தப்படுத்துவது பரிசுத்தவான்களுக்கு பொதுவானதாக இருக்கிறது. கடினப்படுத்தியவர்கள் பின்வாங்கிப்போனவர்கள் இப்படிப்பட்ட ஆவியை தன்னுடைய கர்த்தருக்கு வெளிக்காட்டுவதில்லை; அவர் தன் பாவங்களுக்காக வருந்தக்கூடாத எல்லையை அடைந்துவிட்டார். அவரே அந்த அழிவிலிருந்து தப்பிக்க எண்ணினாலும், அவரால் தப்பிக்க முடியாது.

ஆதி சபையில் சிலர் போதித்தது போன்று, பின்மாற்றமடைந்த பாவிகள் எவரும் மீண்டும் மனந்திரும்ப வாய்ப்பே இல்லையென

ஆய்வுக்கொள்ளுதலானது மிகவும் உச்சத்தின் எல்லையாக இருக்கும். அநேகமாக அது 1 யோவான் 1:7-10 ஆகிய வசனத்தை மீறுதலாகவும் ஒரு தேவனுடைய பிள்ளைக்கு கிடைக்கும் இரக்கத்தை விட அந்நியராகிய ஒரு பாவிக்கு கிடைக்கும் இரக்கமானது அதிகமென்று பொருள்படுத்தும். மெய்யாகவே பாவத்திலிருந்து தப்பித்து, மீண்டுமாக அதை முற்றிலும் மேற்கொண்ட ஒருவருக்கு "முந்தைய நிலைமையை விட பிந்திய நிலைமை மோசமாக இருக்கும்" (2 பேதுரு 2:20-22). ஒருவேளை அப்படிப்பட்ட நபர் ஒருநாளும் மனந்திரும்பவில்லையென்றால், அவர் முந்திய நிலையிலேயே பாவத்தை விட்டு தப்பிக்கவில்லை ஆகவே அங்கே "பிந்தின நிலை" என்ற ஒன்று கிடையாது.

ஒரு கிறிஸ்தவர் மீட்டெழலின் நம்பிக்கைக்கு அப்பாற்பட்டு விலகக் கூடுமா? அவர்களை மறுபடியும் "மனந்திரும்புதலுக்கு புதுப்பிக்க சாத்தியமே இல்லாமல் போகுமா"? சிலர் இந்த சொற்றொடரானது மிகவும் "கடினமானதென்று" யோசித்து வார்த்தைகளை மென்மையாக்கி கொள்கின்றனர்.[28] "தேவனைத் தவிர வேறு எந்த மனிதனாலும் ஒரு நபரை மனந்திரும்புதலுக்கு நேராக கொண்டுவர முடியாது" என்று கூறப்பட்டிருப்பதுபோன்று, மற்றவர்கள் இந்த சொற்றொடரை "மனித தன்மையில்" "சாத்தியமற்றதாகக்" கூறி இந்த சொற்றொடரை மேலும் அதிக மென்மையாக்கிக் கொள்கின்றனர். எப்படியாயினும் "மனிதத் தன்மையில்" என்ற கருத்துரு வசனத்தில் காணப்படவில்லை; இந்த பகுதியின் நேர்மையற்ற நடத்துதலானது எச்சரிக்கையில் உண்மைத் தன்மையை மறுக்கிறது. இந்த வசனம் முன்னர் உண்மையாக மனமாற்றமடைந்து விசுவாசத்திற்கு மறுபடியும் ஒருபோதும் திரும்புதலுக்கு கடினமாகி தற்போது உண்மையாக விசுவாசத் துரோகக்காரராக இருப்பவர்களை தனிப்பட்ட விதத்தில் வற்புறுத்துகிறது.[29] இந்த உண்மையானது ஏவுதல் பெற்ற ஆசிரியர்களால் சொல்லபட்டிருக்கிறப்படியால், இதுவே தேவனுடைய மற்றும் மனிதனுடைய நிலை குறிப்பிலிருந்து உண்மையாக இருந்தது! இங்கே விவரிக்கப்பட்டிருக்கிறபடி இப்படிப்பட்ட நபர்களுக்கு உண்மையான மனந்திரும்புதல் சாத்தியமற்றதாகும்.

"சாத்தியமற்றது" என்ற வார்த்தையானது "ஊசியின் காதில்" ஒட்டகத்தை நுழைய செய்வது போன்று (மாற்கு 10:25-27),[30] மனிதனால் அல்லாமல் தேவனால் மட்டுமே சாத்தியமானதாக பொருள் கொள்ளப்பட்டு சிலரால் எடுத்துக் கொள்ளப்படுகிறது. மற்றவர்கள் நம்முடைய வசனப்பகுதியை "சக கிறிஸ்தவர்களால் விசுவாசத்திலிருந்து விழுந்து போனவர்களை மீண்டுமாக மனந்திரும்புதக்கு கொண்டுவர முடியாது என்று யோசிக்கின்றனர். எபிரெயரில் சொல்லப்பட்டுள்ள "கூடாத காரியம்" என்பது மேலும் படிக்கப்பட வேண்டும், தவறாக நடப்பதுதேவனால் *கூடாத காரியம்* என்று எபிரெயர் கூறுகிறது (6:18), மிருக பலிகள் பாவத்தை

*சுத்திகரிக்காது* (10:4), மேலும் விசுவாசமில்லாமல் தேவனைப் பிரியப்படுத்துவது *கூடாத காரியம்* (11:6). விலகிப்போகுதலானது "கூடாத காரியமானது வெறும் வார்த்தையால் நின்றுவிடுவது கிடையாதது," மாறாக அது உண்மையான ஆபத்தாகும். இந்த விசுவாச துரோகமானது இயல்பில் முழுமையானதாகும், ஏனெனில் வேறொரு இடத்தில் பாவத்தை ஏற்றுக் கொண்டு அதற்காக வருந்துகிற கிறிஸ்தவர்கள்; தேவனிடம் திரும்பக்கூடும் என்று கூறப்பட்டிருக்கிறது (1 யோவான் 1:7-10; 2:1, 2; கலா. 6:1, 2). யோவான் 21:15-19 மற்றும் லூக்கா 24:54-62 ல் பேதுருவின் நிலையை கவனத்தில் கொள்ளவேண்டும்.

மீண்டும் திரும்பக் கூடாத நிலை ஒன்று இருக்கிறது. பிடிவாதமான பாவத்தில் இருக்கிறவர்கள் தேவனுடைய கிருபை தொடக்கூடாத இடத்தில் தன்னை வைத்துக் கொள்கிறார்கள், "ஆவியானவருக்கு எதிரான தேவதூஷணத்திற்குத் தொடர்புடைய மற்ற வசனப்பகுதிகளும் அதைப்போன்ற சத்தியங்களையே போதிக்கிறது" (மத். 12:31, 32; காண்க மாற்கு 3:28, 29).[31] இந்த கோட்பாடானது எபிரெயர் 10:26-29 லும் சுட்டப்படுகிறது.

**வசனங்கள் 7, 8.** சுவிசேஷத்திற்கு ஒருவர் வெளிப்படுததப்படும் போது என்ன நிகழும் என்பதை சித்தரிக்க நன்கு பரிச்சயமான விவசாய காட்சிஒன்று பயன்படுத்தப்படுகிறது.

இரண்டு வித **நிலப்பகுதிகளுக்கு** ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது - ஒவ்வொன்றும் ஒரே விதமான மண்ணையும் ஒரே விதமான புத்துணர்ச்சி தரும் **மழையை** பெற்றுள்ளது - ஆனால் இரண்டும் ஒரே விதமான **பயிர் பலன்களை** தரவில்லை. ஒரு துண்டு நிலம் **முட்களையும் முட்புதர்களையும்** தருவித்தது. அதேபோன்று கிறிஸ்தவர்கள் ஒரே விதமான ஆசீர்வாதங்களை பெற்றிருந்தும், சிலர் கிருபையில் வளர்ந்தும் வேறு சிலர் பாவத்திலும் வீழ்ந்தும் விடுகின்றனர். ஒருவர் **தேவனிடமிருந்து ஆசீர்வாதங்களைப்** பெற்று அதற்கு அவர் எவ்வாறு மறுமொழியளிக்கிறார் என்பது அவர்களுடைய பொறுப்பாக இருக்கிறது. தேவனால் கொடுக்கப்பட்ட பாக்கியங்களை அதற்கு பாத்திரவான்களாக இல்லாமலும், தங்கள் ஒழுக்கநெறியை மாற்றிக் கொள்ளாமலும் அனுபவிப்பது எவ்வளவு வெறுக்கத்தக்கதாக இருக்கிறது! 4 லிருந்து 6ஆம் வசனம் வரை பெயரிடப்பட்டுள்ள ஆசீர்வாதங்களைப் பெற்று, அதைத் தந்த கர்த்தரை புறந்தள்ளுகிறவர்கள் தண்டனையை தவிர வேறு ஒன்றிற்கும் பாத்திரவான்களாக இருக்கமாட்டார்கள்.

ஏசாயா 5:1-10 மற்றும் எரேமியா 2:21 ஆகிய வசனங்களில் மனிதர்கள் செடிகளுக்கு ஒப்பிட்டு கூறப்பட்டிருக்கிறார்கள். தேவன் கனி தரும் நிலத்தையும் மக்களையும் அவர்கள் இன்னும் அதிகமாக கனிதரும்படி ஆசீர்வதிக்கிறார். இது யோவான் 15:2 லுள்ள இயேசுவின்

போதனையை மனதில் கொண்டு வருகிறது: "கனிகொடுக்கிற செடி எதுவோ அது மிகுந்த கனிகொடுக்கும்படி, அதைச் சுததம் செய்கிறார்."

உழவனின் கடும் உழைத்தலுக்கும் அப்பாற்பட்டு. சில நிலங்கள் தகுதியற்றதாகவும், **சுட்டெரிப்பிற்கு** மட்டுமே ஏற்ற களைகளை விளைவிப்பதுபோன்று காணப்படுகிறது. கனியற்ற விசுவாசம் இதனைப்போன்ற காரியமே நடைப்பெறும் என்று இயேசு கூறினார் (யோவான் 15:5, 6). கனியற்ற கிளைகளை அக்கினியில் போடுவது மிகவும் பொதுவானதாக இருந்து, எனவே இதை எழுத்துப்பூர்வ நிகழ்வாக கண்ணோக்கப்பட வேண்டும்.[32]

## தெய்வீக வாக்குத்தத்தத்தின் உறுதி (6:9-20)

### 6:9-12

**9பிரியமானவர்களே, நாங்கள் இப்படிச் சொன்னாலும் நன்மையானவைகளும், இரட்சிப்புக்குரியவைகளுமான காரியங்கள் உங்களிடத்தில் உண்டாயிருக்கிறதென்று நம்பியிருக்கிறோம். 10ஏனென்றால், உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே. 11நீங்கள் அசதியாயிராமல், வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களைப் பின்பற்றுகிறவர்களுமாயிருந்து, 12உங்களுக்கு நம்பிக்கையின் பூரண நிச்சயமுண்டாகும்படி நீங்கள் யாவரும் முடிவுபரியந்தம் அப்படியே ஜாக்கிரதையைக் காண்பிக்கவேண்டுமென்று ஆசையாயிருக்கிறோம்.**

தன்னுடைய வாசகர்களை தேவனை விட்டு விலகுதலைக் குறித்து எச்சரித்தப் பின்னர், அதிகாரம் 3 ல் உள்ளதுபோன்று இதன் ஆசிரியர் தன்னுடைய செய்தியை நேர்மறையான திசைக்கு அதிகமாக திருப்பினார். வசனம் 6 ல் கூறப்பட்டுள்ள விசுவாச விலக்கக்காரர்கள் தேவனுடைய குமாரனை குறித்து பொதுவான காட்சியை கொண்டிருந்தனர், 6:9-12ல் முகவரியிடப்பட்டிருப்பவர்கள் இதற்கு எதிரானதை செய்கின்றனர்.அவர்கள் அவருடைய நாமத்திற்குரிய அன்பையும் போற்றுதலையும் கொண்டிருந்தனர். இந்த பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள புத்திமதிகளுக்கு ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் செவிகொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

**வசனம் 9.** தன்னுடைய வாசகர்கள் உயர் தகுதிகளை பின்தொடரும்படிக்கு இதன் ஆசிரியர் விரும்புகிறார். ஆவிக்குரிய வாழ்வில் வளரும்படிக்கு அவர்கள் **இரட்சிப்புக்குரியவைகளுமான காரியங்கள்** மீது கவனம் செலுத்த வேண்டியது அவசியமானதாக

இருந்தது.

நாம் என்ற வார்த்தையை பயன்படுத்தி (2:1, 3; 3:6ல் உள்ளதுபோன்று) இதன் ஆசிரியர் இந்த நிருபத்தைப் பெறுகிறவர்களோடு தன்னையும் இணைத்துக் கொள்கிறார். சில சமயம் அதிகாரம்4 ல் உள்ள ஒவ்வொரு "நாம்" என்ற வார்த்தையில் உள்ளதுபோன்று, இது அனைத்து கிறிஸ்தவர்களையும் உள்ளடக்கிக் கொள்கிறது. சிலசமயங்களில் "நாம்" என்ற பதம் ஒரு பிரசங்கியார் தன்னையும் தன்னுடைய நேயர்களையும் குறிப்பிட பயன்படுத்துவது போன்று (அநேகமாக 2:5; 5:11; 9:5) காணப்படுகிறது. மற்ற சமயங்களில் இதன் ஆசிரியர் ஒருவேளை தன்னுடன் இந்நிருபத்தை எழுதுவதில் இணைந்திருந்த இரண்டு அல்லது மூன்றுபேரை இணைத்துக் கொண்டிருக்கலாம். வசனம் 2:5 மற்றும் 13:18 ல் அது உண்மையாக இருக்கக் கூடும். வசனம் 6:9 ல் இதன் ஆசிரியர் தன்னையும் குறைந்தது மற்ற ஒரு நபரையும் குறித்துப் பேசுவதுபோன்று காணப்படுகிறது.

இந்த உடன்படிக்கையில் தன்னுடைய வாசகர்களை **பிரியமானவர்களே** என்றழைப்பது இதுவே முதன்முறை. இந்த வார்த்தை சம்பிரதாய வணக்க வரிசை முறையை விட மேலானதாக இருக்கிறது. ஆக நிருபத்தின் ஆசிரியர் இந்த மக்களின் மீது பட்சமான உணர்வை வெளிப்படுத்தினார். அவர்கள் தங்கள் சகோதரர்கள் மேல் வெளிப்படுத்தின தங்கள் அன்பின் காரணத்தினால் (வசனம் 10) அவர்கள் "பிரியமானவர்களே" என்ற சித்தரிப்பிற்கு மிகவும் தகுதியானவர்களாக இருந்தனர். இதன் ஆசிரியர் **இவ்விதமாக** கண்டிப்பான மொழிநடையில் அவர்களை முகமன்னிட்டாலும் (6:4-6) அவர்கள் ஆபத்தை குறித்து எச்சரிக்கையாக இருக்கும்படிக்கு அவர்கள் மீதான அன்பினிமித்தம் அப்படி செய்தார். அவர் ரோம சபையின் சகோதரர்கள் "நற்குணத்தினால் நிறைந்திருந்ததைக்" குறித்து **சமாதானமடைந்தது போல** (ரோமர் 15:14), எபிரெய கிறிஸ்தவர்களின் நற்தகுதிகளினாலும் சமாதானம் அடைந்திருந்தார்.

"இரட்சிப்பிற்கேதுவான" என்ற சொற்றொடரானது இந்த கிறிஸ்தவர்கள் அவர்கள் இருக்க வேண்டியது போல வளர்ச்சியடையாமல், இன்னமும் மீட்கப்பட்ட நிலையிலேயே இருந்தார்கள். இரட்சிப்பைப் பெற்றவர்களாக, அவர்கள் ஒரு உண்மையான விசுவாசத்தையும் தேவனுக்குக் கீழ்ப்படியும் விருப்பத்தையும் கடைப்பிடித்தனர். எப்படியாயினும், 6:4-6 ல் தொகுத்தளிக்கப்பட்ட துயரார்ந்த முகப்புத்தோற்றத்திற்குப் பின்னர்,ஒரு உற்சாகப்படுத்துதல் அவசியப்பட்டது.

"இரட்சிப்பிற்கேதுவான காரியங்கள்" என்ற சொற்றொடர் கனி நிறைவு மற்றும் விசுவாசம் போன்ற இரட்சிப்பின் இயல்பான விளைவுகளை சித்தரிக்கிறது. ஒருவேளை அது மத்தேயு 25:34-40 ல்

குறிப்பிட்டிருப்பது போன்று நற்கிரியைச் செய்ய விருப்பமுள்ளவர்களுக்கான பரிசை சுட்டுவதாகவும் இருக்கக் கூடும். மத்தேயு 25 ஆம் வசனமானது கிரியையினால் சம்பாதிக்கிற இரட்சிப்பைப் பற்றி கூறவில்லையென்றாலும், இந்த வசனம் நித்திய வெகுமதியின் நிலைகளை எடுத்துரைக்கிறது. உண்மையுள்ளவர்கள் தங்கள் பெரும் ஊழியத்திற்காக ஒரு பெரும் பரிசை நிச்சயம் பெறுவார்கள்; அப்படியில்லாவிட்டால் தாலந்துகளின் உவமையானது குறைந்த பொருளுடையதாக இருக்கும் (மத். 25:14-30). ஒவ்வொரு நபரும் அவர்களுடைய "கிரியைகளுக்கு தக்கவாறு" நியாயந்தீர்க்கப்படுவார்கள் (ரோமர் 2:6; காண்க வெளி. 20:12).

**வசனம் 10. தேவன் அநீதியுள்ளவரல்லவே** என்ற வார்த்தையானது "தேவன் நீதியுள்ளவர்" என்று கூறுகிற வல்லமையுள்ள வழியாக இருக்கிறது. ஒரு சீஷராக குளிர்ந்த தண்ணீரை பரிசாக அளித்திருந்தாலும் (மத். 10:42) அவர் நம்முடைய **நற்கிரியைகளை** நினைவில் கொள்கிறார். இருந்தபோதிலும், நாம் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய மறுத்தால் நற்செயல்களினால் இரட்சிக்கப்பட முடியாது, நாம் சுவிசேஷத்தின் அடிப்படை காரியங்களுக்குக் கீழ்ப்படிந்து பிறகு கிறிஸ்துவை விட்டு இழுப்புண்டுப் போனால் அந்த நற்கிரியைகள் நம்மை இரட்சிக்காது.

நீதியுள்ள தேவன் நம்முடையை இரக்கமுள்ள கிரியைகளை **மறக்கமாட்டார்.** இந்த வாக்குத்தத்தமானது அவருடைய மனதுருக்கமுள்ள இருதயத்தை எடுத்துக் காட்டி, நீதியை பின்பற்றும்படிக்கு நம்மை உந்துகிறது. அது ஒரு உற்சாகப்படுத்துதலை பொருள்படுத்துகிறதாக இருக்கிறதேயொழிய நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சியில் சோம்பலாக இருப்பதை தொடருவதற்காக அல்ல.

எபிரெய நிருபத்தைப் பெறுகிறவர்கள் இரக்கமுள்ள ஊழியத்திற்கு சான்று பகிர்ந்திருந்தாலும், வசனத்தை வாசிப்பதை அலட்சியம் செய்தனர் (5:12). தங்களை "கிறிஸ்தவர்களாக" அழைத்துக் கொள்கிற அநேகர்தங்கள் மற்ற வாழ்வின் பகுதிகளிலுள்ள ஆவிக்குரிய பற்றாக்குறையை நற்கிரியைகள் நிரப்பிவிடுவதாக கற்பனை செய்கின்றனர். தனிப்பட்ட வேத வாசிப்பு இல்லாமல் ஒரு கிறிஸ்தவன் பயிற்சிக்கிற கிறிஸ்தவனாக இருக்கக் கூடுமேயொழிய வளருகிற கிறிஸ்தவனாக இருக்க முடியாது. இந்த கிறிஸ்தவர்கள், தங்கள் ஆவிக்குரிய வாழ்வில் முதிர்ச்சியற்றிருந்தாலும், தேவனை விட்டுவிலகிவிட்டவர்களாக இருக்கவில்லை. அவர்கள் **பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்ததை** தேவன் நினைவில் வைத்திருக்கிறார். அவர்கள் தங்கள் ஜீவனை பணயம் வைக்கும் சில காரியங்களையும் உள்ளடக்கி, கட்டுண்டவர்களுக்கு இரக்கத்தை காட்டினார்கள் (10:34). ஒருவேளை அவர்கள் இந்த இரக்கத்தின் ஊழியத்தை நிறுத்தியிருந்தால், விசுவாச விலக்கத்தில்

விழுந்திருக்கக்கூடும்.

மற்றவர்களுக்கு காட்டுகிற அன்பானது **அவருடைய நாமத்திற்கு காட்டப்படுகிற** அன்பாகும். இந்த "நாமம்" என்பது கிறிஸ்துவை பிரதிநிதித்துவப்படுத்துகிறது, மற்றும் தேவனுடைய நாமத்தை அருகலாக பேசின யூதர்களால் அடிக்கடி தெய்வீகத்தை குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டது. இந்த கிறிஸ்தவர்கள் தங்கள் இரக்கமுள்ள செயல்களை கிறிஸ்துவினுடைய போதனையின் கண்ணோட்டத்தில் செயற்படுத்தினார்கள். அவர்கள் தனிப்பட்ட விதத்தில் மற்றவர்களுடைய உபத்திரவங்களைப் பகிர்ந்து கொண்டு "இன்னமும் ஊழியம் செய்து கொண்டிருந்தனர்" (διακονέω, *டையகொனியோ*). சரீரத்தின் அங்கத்தினர்கள் ஒருவரோடு ஒருவர் பாடுகளை அனுபவிக்க வேண்டும் என்று பவுல் வலியுறுத்தினார் (1 கொரி. 12:26).

"விசுவாச வீட்டாருக்கு" உதவி செய்வதை குறித்து குறிப்பான கவனம் கொடுக்கப்பட்டிருக்கிறது (கலா. 6:10). இது எருசலேமில் சபை ஆரம்பிக்கப்பட்டபோது அதிலிருந்த கிறிஸ்தவர்களை நிச்சயமாகவே பண்பிட்டது (அப். 4:32-35). முதலாம் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் வறியவர்களுக்கு உதவிசெய்ய விரும்பினார்கள் (அப். 15:4; கலா. 2:10). இந்த வசனப்பகுதியின் அடிப்படையில்; இப்படிப்பட்ட செயல்கள் சபையின் மாதிரியாக தொடர்ந்து இருந்ததாக நாம் கூறக்கூடும். வியாதியஸ்தர்களையும் கட்டுண்டவர்களையும் விசாரிப்பவர்களை கனப்படுத்துவதாகவும் ஏனெனில் அப்படிச் செய்கிறவர்கள் தனக்கே செய்வதாகவும் இயேசு கூறினார் (மத். 25:36, 40).

இங்கு கூறப்பட்டுள்ள அன்பின் பிரயாசமானது "பரிசுத்தவான்களுக்கு" அதாவது ஜீவனுள்ள கிறிஸ்தவர்களுக்கு காட்டப்பட்டதாகும். பரிசுத்தவான் என்று கூறப்படுவதற்கு; ஒருவர் செத்தவராக இருக்கக் கூடாது, ஆக இந்த வார்த்தையானது "சுத்திகரிக்கப்பட்ட ஒருவரை" பொருள்படுத்துகிறது. பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலர்கள் தேவனால் சுத்திகரிக்கப்பட்டிருந்தனர் (காண்க சங். 85:8; தானி. 7:21-27), மேலும் தற்போது இந்த வார்த்தையானது புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களுக்கு செயல்முறைப்படுத்தப்படுகிறது.

**வசனம் 11.** தேவையிலுள்ளவர்களுக்கு இந்த வாசகர்களால் செய்யப்படுகிற கரிசனையானது அவர்களுடைய வாழ்வின் **முடிவுபரியந்தம்** தொடர்ந்து செய்யப்பட வேண்டியதாக இருக்கிறது. நாம் கர்த்தரை விட்டு விடுமுறையில் செல்ல முடியாது, நாம் நம்முடைய வழியில் பாடுகளையும் சோதனைகளையும் அனுபவித்தாலும் நம்முடைய நடக்கையில் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும் (எபி. 12:6, 7).

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள **விருப்பமானது**, இயேசு தம்முடைய சீஷருடன் பஸ்கா திருவிருந்தை உண்ண ஆசித்து உணர்ந்த அதே

வகையான விருப்பமாகும் (ἐπιθυμέω, *எபிதூமியோ*; லூக். 22:15). அந்த சம்பவத்தை பேசும்போது, இயேசு இந்த வார்த்தையை வலியுறுத்தும் நோக்கோடு, தம்முடைய "ஆர்வம் நிறைந்த விருப்பமான ஒன்றாக" சுட்டிக்காட்டும் விதமாக அதை மறுபடியும் மறுபடியும் கூறினார்.

பரிசுத்தவான்களுக்கு அதேபோன்றதொரு மனதுருக்கத்தையே இதன் ஆசிரியரும் உணர்ந்திருந்தார். "அவர் அவர்களை பெயர்ச்சொல்லி அழைப்பதினால் ஒருவர் உணர்ச்சி விளைவை அடைகின்றார்."[33] ஒருவருடைய வளர்ச்சியடைதலின் நிலைகளைக் குறித்து பேதுரு கூறினதுப்போன்றே இவரும் அதையே அவசியப்படுத்தி அவர்களுக்கு கூறினார் (2 பேதுரு 1:5-11). சீஷர்கள் "ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்கும்படி" (வசனம் 10) கிறிஸ்தவ கிருபைகளை வளர்க்க கிரியை செய்யும்போது, நாம் இரட்சிப்பாகிய தேவனுடைய "அழைப்பில்" "உறுதியாக" இருப்போம் என்று பேதுரு கூறினார் (2 பேதுரு 1:10 ஐ காண்க). வெளிப்படையாகவே இந்த கிறிஸ்தவர்கள் தங்கள் உறுதியில் கீழ்நோக்கிச் சென்று கொண்டிருந்தனர், ஆகையால் அவர்கள் தங்கள் உறுதியில் பெருக வேண்டியதாக இருந்தது.

**நம்பிக்கையின் பூரண நிச்சயமானது** எதிர்காலத்தைக் குறித்து விருப்பங்கொள்கிற வெறும் யோசனையல்ல, மாறாக தேவனுடைய வாக்குத்தத்தத்தின் அடிப்படையிலான விசுவாசமாக இருக்கிறது (11:1 ஐ காண்க). புதிய ஏற்பாட்டில் நம்பிக்கை என்பது "உறுதியான எதிர்பார்ப்பாகக்" கூறப்பட்டுள்ளது. உண்மையான நம்பிக்கையும், மெய்யான விசுவாசமும் பொறுமையோடு கரம் கோர்த்து ஒன்றோடொன்று இணைந்து போகிறது. கிறிஸ்துவில் நாம் கொண்டுள்ள உறுதியானது விசுவாசத்தினால் வளருகிறது. தேவனுடைய வெளிப்பாடு நம்பிக்கையில் நிறைவடையும் விசுவாசத்தை உருவாக்குகிறது. ஒருவர் தன்னைத்தானே திருப்திபடுத்திக் கொண்டு வாழும்போது இந்த உண்மையான உறுதியைப் பெற்றிருக்க முடியாது; அப்படிப்பட்ட வாழ்வு விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்ட நம்பிக்கையாக இருக்காது. "அன்பு" (வசனம் 10), "நம்பிக்கை" (வசனம் 11), மற்றும் "விசுவாசம்" (வசனம் 12) ஆகியவை 1 கொரிந்தியர் 13:13 ல் பவுல் அழுத்தம் தந்த அதே மும்மூர்த்திகளாகும்.

நம்முடைய இரட்சிப்பில் முழு உறுதியாக இருப்பதற்கு நம்முடைய இருதயத்தை திறக்க, வசனத்தின் அறிவில் வளருதலே திறவுகோலாகும். ஒரு "முழு உறுதியை நம்முடையதாக்குவதற்கு" பரிசுத்த வாழ்வை செயல்முறைப்படுத்துலே வழியாகும். ஒருவர் ஆர்வமாக விருப்பங்கொண்டு, பரம வெகுமதிக்கு எதிர்ப்பார்த்திருக்கும்போது இப்படிப்பட்ட உறுதி பெறப்பட்டு காட்சிப்படுத்தப்படுகிறது (எபி. 11:6). இந்த உறுதியான

நம்பிக்கையானது அர்ப்பணிக்கப்பட்ட விசுவாசத்தின் ஒரு பகுதியாகும். இது தேவனுடைய சித்தத்தை அறிய உதவுகிற தேவ வசனத்தைத் தொடர்ச்சியாக படித்தலை உள்ளடக்கியுள்ளது.

**வசனம் 12.** எபிரெய கிறிஸ்தவர்கள் இந்த இரட்சிப்பின் உறுதியை பெறுவதற்கு அசதியாக அல்லது **சோம்பலாக** (νωθρός, *நோத்ரோஸ்*; 5:11 ஐ காண்க) இருக்கக் கூடாது என்று கூறப்பட்டனர். இந்த வார்த்தையானது "மழுங்கலான, கூரறறிவற்ற" நிலை போன்றுள்ளது. அவர்கள் நிதானமாக அல்லது அசதியாக இருப்பதற்குப் பதிலாக அவர்கள் அதிகாரம் 11 ல் கூறப்பட்டுள்ள விசுவாசிகளைப் **பின்பற்ற** வேண்டியவர்களாக இருந்தனர். இது பவுலால் கூறப்பட்ட சொற்றொடரை மனதிற்குள் கொண்டு வருகிறது (1 கொரி. 11:1; எபே. 5:1; 1 தெச. 1:6; 2:14 ஆகியவற்றையும் காண்க). அவர் "பின்பற்றுகிறவர்கள்" (νωθρός, *மிமிடெஸ்*) என்ற துல்லியமான வார்த்தையின் வடிவத்தை பயன்படுத்தினார். இவ்வார்த்தையிலிருந்தே நமக்கு "பின்பற்று" "நடித்துக் காட்டு" மற்றும் "அபிநயக் கூத்தாடி" போன்ற வார்த்தைகள் கிடைக்கப் பெறுகிறது.

மரித்த விசுவாசிகள் ஏற்கெனவே ஜீவனுக்குள் பிரவேசித்து தேவனுடைய வாக்குத்தத்தத்தை சுதந்தரித்துக் கொண்டனர். லாசரு மரித்தபோதும் (லூக். 16:22, 25), இயேசு மரித்து ஆவியில் "ஜீவிக்கிறவராக" எழுப்பப்பட்டபோதும் (1 பேதுரு 3:18) இது உண்மையாக இருந்தது. இதன் வாசகர்கள் அவர்களுக்கு முன்னாக சென்ற விசுவாசிகளை தொடர்ந்து பின்பற்றினால், அவர்களும் அதே பரிசை தேவனுடைய வாக்குத்தத்தத்தின் நிறைவாக பெற்றுக் கொள்வார்கள். அவர்கள் இந்த வெகுமதியை விசுவாசத்தின் மூலமாகவும் பொறுமையான சகிப்பின் மூலமாகவும் பெற்றுக்கொள்வார்கள், அதுவே நமக்கும் உண்மையானதாக இருக்கிறது. நாம் காலத்தின் நெடுமையால் அல்லது நமது வழியோடு தொடரும் பாரத்தின் கடுமையால் மலைத்து நின்றுவிடக் கூடாது, ஏனெனில் அந்த "பாரங்கள்" எதிர்கால மகிமையோடு ஒப்பிடுகையில் "இலகுவாக" கூறப்படுகிறது (2 கொரி. 4:17, 18).

விசவாசிகள் அவர்கள் விசுவாசத்தில் மரித்தபடியால் தற்போது **வாக்குத்தத்தங்களை சுதந்தரித்திருக்கிறார்கள்** (κληρονομούντων, *க்லெரொமௌன்டொன்*, நிகழ்கால பெயரடை) வேறொரு விதத்தில் கூறுவதென்றால்; இறுதியான பரிசை பெறாததினால் "அவர்கள் அவர்களுக்கு வாக்குப்பண்ணப்பட்டதை பெறவில்லை" (எபி. 11:39). முடிவுபரியந்தம் உண்மையாக இருப்பவர்களுக்கு மட்டுமே இந்த வெகுமதி அளிக்கப்படுகிறது. விசுவாசிகள் தொடர்ச்சியாக செவிகொடுத்து விசுவாசித்தபடியால் "அவர்கள் ஒருபோதும் கெட்டுப்போகவில்லை" (யோவான் 10:27, 28). நித்தியமாக இரட்சிப்படைய விரும்புகிறவர்கள் இரட்சகரின் சத்தத்திற்கு

தொடர்ச்சியாக செவிகொடுக்கவும், உற்று கவனிக்கவும் வேண்டும்.

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் **பொறுமையினால்** (μακροθυμία, *மக்ரோதுமியா*) சுதந்தரிக்கப்படுகிறது. இதன் பொருள் யாதெனில் "உளவலிமை" அல்லது மற்ற மக்களுக்கான நீடியபொறுமையாகும். பொறுமைக்கான பொதுவான வார்த்தை (ὑπομονη, *யுபோமோன்*) என்பதாகும். இது மனவிருப்பமான இன்முகத்தோடு பாடுகளையும் கஷ்டங்களையும் சகித்தலை பொருள்படுத்துகிறது. ஒரு நபர் விசுவாசத்தில் விடா முயற்சி இல்லாமல் சுதந்திரத்தை பெற முடியாது.

ஒரு சுதந்திரவாளியானவர் நம்பிக்கைக் கொள்கிறார்; அவர் சுதந்திரத்தைப் பெறும்போது, அவருடைய நம்பிக்கையானது நிறைவேறுகிறது. இது "இரட்சிப்பை சுதந்தரிக்கப்போகிறவர்களை" குறித்துப் பேசுகிற 1:14 ன் முன்நினைவுகூருதலாக இருக்கிறது.[34] "கிறிஸ்து தம்முடைய மக்களை அவர்களுக்குள் இல்லாமல் 'அவர்களுடைய பாவத்திலிருந்து' (மத். 1:21) இரட்சிக்கவே இங்கு வந்தார். நான் நரகத்தின் பிள்ளையாக வாழ்ந்து கொண்டு பரலோகத்திற்கு செல்ல பிணைக்கப்பட்டவன் என்ற சிந்தையை ஊக்கமூட்டுவதைப் போன்ற மோசமான யூகம் எதுவுமிருக்காது."[35]

**6:13-20**

**[13]ஆபிரகாமுக்கு தேவன் வாக்குத்தத்தம்பண்ணினபோது, ஆணையிடும்படி தம்மிலும் பெரியவர் ஒருவருமில்லாதபடியினாலே தமது பேரிலே தானே ஆணையிட்டு: [14]நிச்சயமாக நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன்னைப்பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றார். [15]அந்தப்படியே, அவன் பொறுமையாய்க் காத்திருந்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெற்றான். [16]மனுஷர் தங்களிலும் பெரியவர்பேரில் ஆணையிடுவார்கள்; உறுதிபண்ணும்படிக்கு ஆணையிடுதலே சகல விவாதத்திற்கும் முடிவு. [17]அந்தப்படி, தேவனும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களுக்குத் தமது ஆலோசனையின் மாறாத நிச்சயத்தைப் பரிபூரணமாய்க் காண்பிக்கும்படி சித்தமுள்ளவராய், ஓர் ஆணையினாலே அதை ஸ்திரப்படுத்தினார். [18]நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதலுண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார். [19]அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது. [20]நமக்கு முன்னோடினவராகிய இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நித்திய பிரதான ஆசாரியராய் நமக்காக அந்தத் திரைக்குள் பிரவேசித்திருக்கிறார்.**

எபிரெயர்களை அசதியாக இருக்க வேண்டாம் என்று எச்சரித்த பின்னர், இதன் ஆசிரியர் அவர்களுடைய வரலாற்றிலிருக்கிற விசுவாசம் மற்றும் பொறுமையின் பெரும் எடுத்துக்காட்டுகளை அவர்களுக்கு நினைவூட்டுகிறார். அவர் ஆபிரகாமை இரண்டாம் முறையாக குறிப்பிடுகிறார் (2:16 காணவும்). இதன் பின்னர் அவருடைய பெயர் அதிகரிக்கும் அடுக்கு நிகழ்வாக காணப்படுகிறது. அநேகமாக இதன் ஆசிரியர் எபிரெய கிறிஸ்தவர்களுக்கு இஸ்ரவேலின் பிதாக்களோடு தேவனுடைய முந்தைய தொடர்பை நியாயப்பிரமாணத்திற்கு அப்பாற்பட்டு சுட்டுகிறார். ஆபிரகாமிற்கு சுதந்திரத்தின் “வித்து” நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு 430 வருடங்களுக்கு முன்னரே கொடுக்கப்பட்ட தென்று காட்டுவதிலும் அவர் அவ்வாறே செய்தார். இந்த தனித்துவம் வாய்ந்த வாக்குத்தத்தமானது கிறிஸ்துவின் வருகையால் நிறைவேறினது (கலா. 3:16-19).

**வசனம் 13. ஆபிரகாமிற்கு தேவனுடைய வாக்குத்தத்தம்** ஆதியாகமம் 12:1-7; 15:5; 17:5-8; மற்றும் 22:15-18 ஆகியவற்றில் பதிவிடப்பட்டுள்ளது. ஆபிரகாமை இங்கு காட்சியில் கொண்டுவருவதற்கான ஒரு காரணமென்னவெனில் அவர் ஏற்கெனவே அவருக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலைப் பெற்றுக் கொண்டார். புரூஸ் அவர்கள் ஆபிரகாம் ஈசாக்கை “மரித்தோரிலிருந்து பெற்றதில்” ஒருவகையில் (அல்லது உருவகமாக; எபி. 11:19; ASV) வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலைப் பெற்றுக் கொண்டார் என்று யூகித்தார், அவர் வலிமையான உணர்வில் வாக்குத்தத்தத்தைப் பெற இதை “செய்தார்.”[36] அவருடைய “வித்தைக்” குறித்த வாக்குத்தத்தமானது அதன் பின்னரே உறுதிச் செய்யப்பட்டது. அந்த வாக்குத்தத்தத்தின் ஒரு பகுதி கிறிஸ்துவில் கொடுக்கப்படும் தொகையாக இருந்தது (கலா. 3:26-29) அதை அவரால் மரிக்கும் வரை பெறப்படவில்லை. ஆபிரகாம், இந்த முழுமையான இரட்சிப்பை யூத மற்றும் புறஜாதி பின்னணியாரோடு இறுதியாக பரலோகத்தில் பெற்றுக்கொள்வார் (மத். 8:11 ஐ காண்க).

எப்போதெல்லாம் புதிய ஏற்பாடு விசுவாசத்தைக் குறித்து விவாதம் செய்கிறதோ அப்போதெல்லாம் ஆபிரகாம் குறிப்பிடப்படுகிறார். ஆபிரகாமை தேவனுடைய வாக்குத்தத்தத்திற்கான அவருடைய அர்ப்பணிப்போடு அடையாளப்படுத்தபடுகிறதை ஏற்றுக்கொள்ளும் இதன் வாசகர்கள், ஆபிகாரம் மெல்கிசேதேக்கிற்கு அடங்கியிருந்ததை பின்பற்றுவதற்கு ஒரு முன்மாதிரியாகவும் அங்கீகரிக்க வேண்டும். இந்த உருவகமானது 7:1-10 அமைவு செய்யப்பட்ட புதிய மெல்கிசேதேக்காகிய கிறிஸ்துவிற்கு விசுவாசத்தோடு கீழ்ப்படிதலை அவசியப்படுத்துகிறது.

ஆபிரகாமிற்கான ஆசீர்வாதமும் மற்றும் தேவனுடைய உறுதி

மொழியும் ஆதியாகமம் 22:15-18 ல் பதிவு செய்யப்பட்டுள்ளது; வேறு எந்த நிகழ்விலும் தேவன் ஆபிரகாமிற்கு தம்முடைய ஆணையை உறுதிப்படுத்தவில்லை. இந்த வாக்குத்தத்தமானது என்னவாக இருந்தது? அவர் தனிப்பட்ட விதமாக ஆசீர்வதிக்கப்படுவார், வரப்போகிற அவருடைய வித்தாகிய மேசியாவின் மூலம் எண்ணிக்கைக்கு அப்பாற்பட்ட சந்ததியினரை பெற்றிருப்பார் (கலா. 3:16), மேலும் அந்த "வித்தின்" மூலம் எல்லா விசுவாசிகளுக்கும் தகப்பனாக இருப்பார். கிறிஸ்துவில் பங்காக மாறிய எல்லா கிறிஸ்தவர்களும் விசுவாசத்தின் மூலம் அவருடைய "சந்ததியாக" "ஆபிரகாமின் வித்தாக இருக்கிறார்கள்" (கலா. 3:26-29).

ஒரு ஆணை இங்கு அவசியமற்றதாகும், ஆனால் ஃபிலோ அவர்கள் இந்த ஆணையானது மனித தேவைகளுக்கு இசைவுபடுத்த கொடுக்கப்பட்டது என்று கூறுகையில் அவர் சரியாக இருக்கக் கூடும்.[37] அநேகமாக ஆபிரகாமிற்கு தேவன் அளித்த ஆணையை உறுதிப்படுத்த வேண்டிய அவசியமேற்பட்டது. ஆபிரகாமிற்கு தேவன் வாக்குப்பண்ணினவைகளில் பெரும்பாலும் தொலை எதிர்காலத்தைச் சேர்ந்ததாக இருக்கிறது. அவை நிறைவேற ஏற்பட்ட காலதாமதமே ஒருவேளை ஆபிரகாம் தன்னுடைய விசுவாசத்தை அமிழாமல் தடுக்க உதவும்படிக்கு தேவனிடமிருந்து ஒரு ஆணையை அவசியப்படுத்தும் ஆர்வத்தை தூண்டியிருக்கும்.

**வசனங்கள் 14, 15. நிச்சயமாக நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன்னைப்பெருகவே பெருகப்பண்ணுவேன்** என்று தேவன் கூறினார் (வசனம் 14). பழைய ஏற்பாட்டின் வாக்குத்தத்தத்தைக் குறித்த எபிரெயரின் எழுத்துச் சார்ந்த மொழியானது கேஜேவியில் பிரதிபலிக்கிறது: "நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிப்பேன்" (ஆதி. 22:17). இங்கு இருமுறை பயன்படுத்தப்பட்ட "ஆசீர்வாதமானது" வலியுறுத்தலாகவும், உறுதியின் சேர்த்தலாகவும் இருக்கிறது. இந்த வாக்குத்தத்தமானது ஏற்கெனவே உறுதியானதாகும், ஆனால் கூடுதலாக கொடுக்கப்பட்ட தேவனுடைய ஆணையானது அந்த உறுதியை இன்னும் அதிகமாக்கியது. மனிதர்கள் ஆணையிடும்போது, அவர்கள் வார்த்தையை காப்பாற்றாமல் போனால் தண்டிப்பதற்கு பாத்திரமான மேலான அதிகாரத்திற்கு முறையிடுகிறார்கள். முறையிடுவதற்கு தேவனை விட பெரியவர் எவரும் இல்லாதபடியால் இப்படிச் செய்வது தேவனால் கூடாததாகும். ஆக தம்முடைய ஆணையிடுதலில். தேவன் தம்முடைய சொந்த இருத்தலின் மீது ஆணையிட்டு அது காப்பாற்றப்படும் என்று ஆணையிட்டார். மனிதர்கள் தேவனுடைய நாமத்தில் ஆணையிடுகையில், தேவன் இருக்கிறார், அவர் வெகுமதியளிக்கிறார் (எபி. 11:6), அவருக்கு கீழ்ப்படியாதவர்களைத் தண்டிக்கிறார் என்று அவர்கள் கண்டிப்பாக விசுவாசிக்க வேண்டும்; அப்படியில்லாவிட்டால் அப்படிப்பட்ட ஒரு

ஆணை அர்த்தமற்றுப்போகும்.

எபிரெய நிருபம் "வாக்குத்தத்தத்தின்" புத்தகமாகும். இந்த வார்த்தையானது பெயர்ச்சொல் மற்றும் வினைச்சொல் வடிவத்தில் பதினெட்டு முறை காணப்படுகிறது. இது புதிய ஏற்பாட்டின் எந்தப் புத்தகத்தைக் காட்டிலும் அதிகமானதாகும்.[38] பொறுமையான சகிப்பிற்கு பின்னர் ஆபிரகாம் **தேவன் செய்த வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலை பெற்றுக் கொண்டார்.** ஆபிரகாம் எழுபத்தைந்து வயதாக இருக்கையில் ஆதியாகமம் 12:1-3 லிருக்கிற வாக்குத்தத்தமானது செய்யப்பட்டது. மற்றுமொரு இருபத்து நான்கு ஆண்டுகளுக்கு முன்பே அவர் கருக்கொள்ளுதலையும் அதன் பின்னர் ஈசாக்கின் பிறப்பு நிறைவேறுதலின் தொடக்கத்தைக் கண்டார். ஈசாக்கை பலியிட முற்பட்டதற்குப் பிறகு, தேவன் தம்முடைய ஆணையை ஆபிரகாமிற்கு புதுப்பித்து, தம் மீதே ஆணையிட்டு தம்முடைய ஆணையை தந்தார் (ஆதி. 22:16). அநேகமாக ஆபிரகாம் யாககோபு, ஏசா ஆகிய தன்னுடைய பேரப்பிள்ளைகளின் பிறப்பைக் காணும்படி வாழ்ந்தார். எப்படியாயினும், விசுவாசத்தினால், அவர் கிறிஸ்துவின் நாளை கண்டு மகிழ்ந்தார் (யோவான் 8:54-56) **பொறுமையோடு காத்திருந்ததாக** அவருடைய பெரும் விசுவாசமானது விவரிக்கப்படுகிறது. ஒவ்வொரு சோதனையிலும் அவர் விசுவாசத்தில் வலிமையாக வளர்ந்தார் (ரோமர் 4:20); ஆனால் வாக்குப்பண்ணப்பட்ட ஆசீர்வாதங்கள் பலவற்றை காண, அவர் மரணத்திற்கு அப்பாலும் காத்திருக்க வேண்டியதாக இருந்தது. ஒருவேளை நிறைவேறுதல் உடனடியாக இருக்குமென்றால், ஒரு ஆணையானது அவசியமற்றதாக இருந்திருக்கும்.

ஆபிரகாம் அவருடைய சந்ததியைக் காண பல ஆண்டுகள் வாழ்வாரென்றும், அவர் எதிரிகளை சந்திக்கும்போதும் அவரை தீமையிலிருந்து தேவன் பாதுகாப்பாரென்றும், மேலும் சரீரத்தில் மட்டுமல்லாமல் ஆவிக்குரிய சந்ததியினருக்கு விசுவாசத்தினாலும் அவர் திரளானவர்களுக்கு தகப்பனாக இருப்பாரென்றும் தேவனுடைய ஆணையானது உறுதியளித்தது (கலா. 3:7, 26-29).

**வசனம் 16. உறுதிபண்ணுதல்** (βεβαίωσις, *பெபையோசிஸ்*) என்று மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிற வார்த்தையானது ஏழுனூறு ஆண்டுகளுக்கு மேலாக பயன்பாட்டில் இருக்கிறது, இந்த அதிகாரப் பூர்வ வார்த்தையானது மனிதர்கள் ஒரு வணிகத்தை அத்தாட்சி செய்யும்போது செயல்முறைப்படுத்தப்பட்டது.[39] நாம் எதையாவது ஒன்றை விலைகொடுத்து வாங்க விரும்பினால், நாம் நம்முடைய நல்ல விசுவாசத்திற்கு அடையாளமாக ஒரு தொகையை முன்பணமாக செலுத்த அவசியப்படுவோம், அதன் பின்னர் மீதி தொகையை எப்போதாவது எதிர்காலத்தில் நாம் செலுத்திவிடலாம். இந்த தொகை செலுத்துதலே நாம் கிரயத்தை முழுமையாக முடிப்போம் அல்லது முழு

தொகையையும் கொடுத்துவிடுவோம் என்பதற்கு ஒரு **ஆணையிடுதலாக** செயல்படுகிறது. இறுதியான மற்றும் முழுத் தொகையைச் செலுத்த தவறுதல் தன் வார்த்தையை காப்பாற்றத் தவறினவர் மீது தண்டனையைக் கொண்டுவரும்.

எல்லா ஜாதிகளையும் சேர்ந்த மக்கள் ஆணையிடுதலை இயல்பில் தீவிரமானதாகவும் அதில் பங்குபெறுகிறவர்கள் அனைவரையும் கட்டியிணைப்பதாகவும் கருதினார்கள். மனிதர்கள் அவர்களுடைய ஆணையை தீவிரமாக எடுத்துக்கொள்ளாதிருந்தால், அந்த உண்மைத்தன்மையின் குறைபாடானது எப்போதும் ஒழுக்க அழிவின் தெரிநிலையாக இருந்தது. வாக்குப்பண்ணப்பட்ட சுதந்திரத்தின் காரியங்கள் நிரந்தரமாக அமைவு செய்யப்பட வேண்டுமென்று தேவன் விரும்பினார். அவருடைய வாக்குத்தத்தத்தினாலும் ஆணையினாலும் எல்லா சந்தேகங்களும் அழிக்கப்பட்டுப்போகும்.

கிறிஸ்து இந்த பூமியில் வாழ்ந்த காலத்தில், யூதர்கள் அதிலும் குறிப்பாக வேதபாரகர் மற்றும் பரிசேயர்கள் பிணைக்கப்படாத "குறைவான ஆணை" என்ற ஒரு முறைமையை மேம்படுத்திக் கொண்டிருந்தனர். அநேகமாக அவர்கள் அவர்களுடைய இந்த முறைமையை தங்களுக்குள்ளே இரகசியமாக வைத்துக் கொண்டனர், ஆனால் இயேசு அதை அறிந்து, அவர்களை அதைப்போன்ற நடைமுறையால் மாயக்காரரே என்று கூறி வெளியரங்கமாக்கினார் (மத். 23:16-22). "என்னுடைய தாடியின் மீது" அல்லது "தேவனுடைய ஆலயத்தின் மீது" என்ற ஒரு ஆணையானது அவர்களை பிணைக்காது என்று அவர்களால் கருதப்பட்டது ஒருவேளை ஒரு நபர் தன்னுடைய ஆணையின் கீழ் பொய்யுரைத்ததாக குற்றஞ்சாட்டப்பட்டால், அந்த பொய்யிற்கு அவரை குற்றவாளி என்று நியாயந்தீர்க்க நியாயப்பிரமாணமானது இரண்டு அல்லது மூன்று சாட்சிகளை அவசியப்படுத்தியது (எபி. 10:27, 28; உபா. 17:6; 19:15; மத். 18:16; யோவான் 8:17, 18; 2 கொரி. 13:1). இந்த முறைமைக்கு முரண்பட்டு, இயேசு தம்முடைய சீஷருக்கு உண்மையைக் கூறும்படிக்கு போதித்தார், ஆக ஆணையிடுதல் அவசியமற்றதாகிப்போனது (மத். 5:33-37; யாக். 5:12). ஆணையைக் குறித்த அவருடைய போதனையானது, நியாயாசனத்தில் உண்மையைக் கூற ஆணை எடுத்துக் கொள்ளுதலை தடை செய்யவில்லை. அவர் ஆணையின் கீழ் போடப்படும் வரை அவருடைய தெய்வீக குமாரத்துவத்தைப் பற்றிய கேள்விகளுக்கு அவர் எந்த பதிலையும் கொடுக்கவில்லை (மத். 26:63, 64).

**வசனம் 17.** இந்த எபிரெயர்கள் **வாக்குத்தத்தத்தின் சுதந்திரவாளிகள்**, ஆனால் அவர்கள் குறிப்பாக அவர்களுக்கான **தேவனுடைய** வாக்குத்தத்தமானது கிறிஸ்துவிற்குள் இருக்கிறது என்பதை அறிய மறு உறுதிப்படுத்தப்பட்டனர். எல்லா

கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவுடன் "சக சுதந்திரர்கள்" (அல்லது "உடன் சுதந்திரர்கள்"; KJV) அதாவது நாம் அவருடன் சம சுதந்திரர்களாக இருக்கிறோம் என்பது இதன் பொருளாகிறது (ரோமர் 8:17). ஆபிரகாமின் மரபுரிமை யூதருக்கு மட்டுமல்ல, மாறாக புறஜாதியாரான கிறிஸ்துவிற்குள் விசவாசிகளானவர்களுக்கும் உரியது. தம்முடைய மக்களுக்கான தேவனுடைய திட்டமானது ஒருபோதும் மாறாதது. ஆகவே நமக்கான அவருடைய ஆசீர்வாதமும் மாறாததாக அல்லது **நிலையானதாக** (KJV) இருக்கிறது.

தேவனுடைய சில வாக்குத்தத்தங்கள் நிபந்தனைக்குட்பட்டதாக இருக்கிறது; அந்த நிபந்தனைகளை நாம் சந்திக்க தவறினால் அவைகள் நடைமுறைக்கு வராது. அப்படியெனில் உடன்படிக்கையானது எப்படி அங்கீகாரம் பண்ணப்படுகிறது? எந்த மனித நிபந்தனையும் இணையப் பெறாத பட்சத்தில் தேவனுடைய வாக்குத்தத்தம் நடைமுறை வருவதற்கு நாம் அவரை சார்ந்திருக்கக் கூடும். எடுத்துக்காட்டாக நம்முடைய எந்த கிரியைகளுமில்லாமல் இந்த உலகத்தின் முடிவு வரப்போகிறது.

**வசனம் 18.** அவருடைய சித்தத்துடனான முழு இசைவோடு,தேவன் ஆபிரகாமிற்கு இரு சாட்சிகளைக் கொடுத்து அவர் அவருக்கு உண்மையாக இருப்பதாகக் கூறினார். தேவனுக்கு அவருடைய மாறாத வாக்குத்தத்தமானது அவருடைய மாறாத ஆணையால் சேர்த்துக் கொள்ளப்பட்டது; ஆக அவைகள் அவருடைய வாக்குத்தத்தமும் அவருடைய ஆணையுமாகிய **இரண்டு மாறாத பிரமாணங்களாம்.**

**தேவன் பொய் உரைப்பது அல்லது அவருடைய இயல்புடன் பொருத்தமற்ற ஒன்றைச் செய்வது சாத்தியமற்றது**; ஆனால் தேவைப்பட்டால், அவரது இயல்புடன் இணக்கமான எதையும், அவர் செய்வார் மற்றும் செய்ய முடியும். அவரால் உலகத்தை சிருஷ்டிக்கவோ, மரித்தோரை எழுப்பவோ முடியும், ஆனால் அவர் பொய் பேசமாட்டார் அல்லது தம்மைத்தாம் மறுதலிக்கவும் மாட்டார். (2 தீமோ. 2:13). அவர் தமது வாக்குத்தத்தத்தை மீறினால், அவரது சட்டங்கள் முறிந்துவிடும். பின்னர் அவர் நாம் அறிந்திருக்கும் அன்பான தேவனாக இருக்க முடியாது.

தேவன் பொய் கூற முடியாது என்று உலகளவில் பண்டைய உலகம் நம்பியது. "[எவராவது] கிறிஸ்துவில் இருந்து விலகி திரும்பவும் யூத மதத்திற்கு வந்திருப்பவர்கள் இதனால்: அவருடைய வாக்குறுதிக்கு அது தெரிவிக்கும் அர்த்தம் அல்ல என்றும், அவருடைய ஆணை பொய்யானது என்றும் இரண்டு பொய்களைக் கூறி தேவனை குற்றம் சாட்டுகிறார்கள்"[40] என்று ஆர். சி. எச். லென்ஸ்கி எழுதினார்.

பண்டையகாலத்தில் ஒருவனைக் கொன்றவன் ஒரு அடைக்கலப் பட்டணத்திற்கு ஓடிப்போகிறது போலவும் அல்லது பாதுகாக்கப்பட்ட துறைமுகத்தில், புயலின் சீற்றத்திற்குத் தப்பி இருக்கும் ஒரு

மாலுமியைப் போலவும் **நாம் ... தேவனில் அடைக்கலம் அடைந்திருக்கிறோம்**[41] (எண். 35, யோசுவா 20), பண்டைய காலத்து மக்கள், பல்வேறு பயங்கரங்களில் இருந்து தப்பிச் செல்லும்போது பெரும்பாலும் தங்கள் கோவில்களில் தஞ்சம் அடைவார்கள். புதிய உடன்படிக்கையின் கீழ், கிறிஸ்தவர்கள் தேவனுடைய புதிய ஆலயத்தின் திரைச்சீலைக்குப் பின்னால் பாதுகாப்பைக் காண்கின்றனர். ஏற்கனவே பிரவேசித்திருக்கிற கிறிஸ்துவோடு, நமக்கு முழு பாதுகாப்பு இருக்கிறது, நாம் "திரைச்சீலைக்குள்ளாக" பிரவேசிக்கும்போது (வசனம் 19) நாம் இயேசுவின் கரங்களில் பாதுகாப்பாக இருக்கிறோம்.

அனைத்து அடிமைத்தனத்திலிருந்து ஒரு சுதந்திரமாகவும் இந்த பாதுகாப்பு இருக்கிறது. நாம் ஒவ்வொருவரும் அடைக்கலமும் பெலனுமான தேவன் நமக்குத் தேவை என்கிற ஒரு நேரத்தை வாழ்க்கையில் வந்தடைவோம். சங்கீதம் 46:1, 2 இல் பலர் ஊக்கத்தைக் கண்டிருக்கிறார்கள்:

> தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர். ஆகையால் பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்துபோனாலும், நாம் பயப்படோம்.

விரைவில் மறைந்துவிடக் கூடிய இந்த உலகத்தில் இருந்து தப்பி ஓடுகிற அகதிகளைப் போல் நாம் இருக்கிறோம். நமது வாசஸ்தலம் பரலோகத்தில் இருக்கிற ஒன்றாகும், பூமிக்குரிய ஆலயத்தில் இல்லை. நமது நம்பிக்கை நம்மை முன்னோக்கிக் கொண்டு செல்கிறது; "நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கை," "நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை; வரப்போகிறதையே நாடித் தேடுகிறோம்" (13:14).

தேவன் நமக்கு **நிறைந்த ஆறுதலுண்டாகும்படிக்கு** விரும்பினார். "*ஆறுதல்*" என்பதற்கான (παράκλησις, *பாராக்லெஸிஸ்*), என்ற வார்த்தை "ஆறுதல்," "தேறுதல்," அல்லது "புத்திமதி" என்றும் பொருள் தருகிறது. இந்த எண்ணங்கள் எல்லாம் தேவனுடைய வாக்குறுதிகளில் சேர்க்கப்பட்டுள்ளன. அந்த வாக்குறுதிகளிலிருந்து நாம் வலுவான ஊக்கத்தைப் பெறுகிறோம்; நாம் அவற்றில் பாதுகாப்பாக நிற்க முடியும். நாம் சோதனையில் இருந்து தப்பித்துக் கொள்ளும்படி வாஞ்சித்து, அதற்குக் காத்திருந்து, அதைப் பயன்படுத்தி கொள்ள தயாராக இருந்தால் சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார் (1 கொரி. 10:13).

**வசனம் 19.** யோவான் 14:1, 2 இல் உள்ளதைப் போன்ற வாக்குறுதிகள் மீது கட்டப்பட்ட **நம்பிக்கை**, நமக்கு உறுதியான **ஆத்தும நங்கூரமாயிருக்கிறது.** ஒரு கப்பல் அல்லது நாம் ஒழுங்காக நங்கூரம் இடப்பட்டிருக்கும்போது இலக்கு இல்லாமல் நகர முடியாது.

நங்கூரம் வலுவாக இருந்தால், அது வளையாது அல்லது உடையாது; பாதுகாப்பாக கட்டப்பட்டிருந்தால், நமது வாழ்க்கைக் கப்பல் பாதுகாப்பானதாக இருக்கிறது. நம்முடைய மகிமையான நம்பிக்கையை இழந்துவிட்டால், பின்னர் அனைத்தும் இழக்கப்படுகிறது. நங்கூரம் ஒப்புமை பண்டைய உலகில் பொதுவாக இருந்தது. சாக்ரடீஸ் கூறினார், "ஒரு கப்பல் ஒரு நங்கூரத்தை அல்லது ஒரு வாழ்க்கை ஒரு நம்பிக்கையைச் சார்ந்து இருக்க முடியாது."[42] ஒரு மாலுமி கீழ்நோக்கி கடலுக்குள் ஒரு நங்கூரம் இடுகிறான், ஆனால் கிறிஸ்தவனின் நங்கூரம், இயேசு **திரைக்குள்ளாக** பிரவேசித்திருக்கிற பரலோகத்தில் இருக்கிறது (6:19; காண்க 9:24). நமது நங்கூரம் கிறிஸ்து - "நம்மில் உள்ள கிறிஸ்து, மகிமையின் நம்பிக்கை" (கொலோ. 1:27; காண்க 1 தீமோ. 1:1).

"பாதுகாப்பான துறைமுகத்தின் உறுதியான கீழ்நிலையில் நாம் நங்கூரம் இடப்பட்டிருக்கிறோம்." என்று ஆசிரியர் கூற ஒருவர் எதிர்பார்த்திருந்திருக்கலாம். ஒரு "நேர்த்தியான சொல்லாட்சி அடையாளத்திற்கு" மாறாக,[43] கிறிஸ்துவின் பிரதான ஆசாரியத்துவத்தின் பொருளுக்குத் திரும்பினார்.

**வசனம் 20.** பழைய ஏற்பாட்டின் எந்த ஒரு ஆசாரியனும் ஆராதிப்பவர்களை **இயேசுவைப்** போல, திரைக்குப் பின்னால் உள்ள இடத்திற்குள் வழிநடத்த இயலாது, எந்தவொரு பழைய ஏற்பாட்டு ஆசாரியனும் நம் **முன்னோடினவராக** இருந்திருக்க முடியாது. (πρόδρομος, *ப்ரோட்ராமாஸ்*), என்ற வார்த்தை ஒரு இராணுவத்திற்கு முன்னால் செல்கிற ஒரு சாரணருக்குப் பயன்படுத்தப்படுகிறது. நாம் "திரைக்கு பின்னால் உள்ள ஸ்தலத்தில் பிரவேசிப்போம் என்ற ஒரு நம்பிக்கை" கொண்டிருக்கிறோம் (NRSV), இது ஆலயத்தின் மகா பரிசுத்த ஸ்தலம், பரலோகத்தில் உள்ள மகிமையின் ஒரு அடையாளச் சின்னமாக விளங்கியது என்பதைத் தெரிவிக்கிறது (காண்க 9:11, 12). இயேசு நமக்காகத் தமது இரத்தத்துடன் சென்ற இடம் இதுவாகும்.

ஒருநாளில் இயேசு நம்மைப் பரலோகத்திற்குத் தம்முடன் அழைத்துச் செல்வார். பூமிக்குரிய ஆசாரியர்கள் பரலோகத்தின் நிழலாய் இருப்பதில் மட்டுமே நுழைய முடியும். "திரை" என்பது லௌகீக உலகத்திற்கும் ஆவியிலான உலகத்திற்கும் இடையே உள்ளதைக் குறிப்பிடலாம். தலைசிறந்த இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்கும் பொழுது, கிறிஸ்து நாம் பின்பற்றுவதற்காக "ஒரு புதிதும் ஜீவனுமான மார்க்கத்தைத்" திறந்தார் (10:20-22). அத்தகைய வாக்குறுதிகள் "நிலையும் உறுதியும்" (வசனம் 19) உடையதாக உள்ளது ஏனென்றால் தேவனுடைய வார்த்தைகள் எப்போதும் உண்மையாக நிரூபிக்கப்பட்டுள்ளன. ஒரு புள்ளியில் மட்டுமே அவர் தோல்வி அடைந்தால், நாம் அவரைப் பொய்யராகக் கருதி அவருடைய எந்த வாக்குறுதிகளையும் நம்பமாட்டோம்.

இயேசு யோவான்ஸ்நானகனை முன்னோடினவராகக் கொண்டு இருந்தது போல, நாமும் நமக்கு வழியை ஆயத்தப்படுத்தி, நமக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணுகிற இயேசுவை முன்னோடினவராகக் கொண்டுள்ளோம் (யோவான் 14:1-3, 6). "முன்னோடினவர்" என்பது வசந்த காலத்தின் முதல் அரும்புகளையும் திராட்சைப்பழ ஆலையில் பிழியப்படும் முதல் திராட்சைப் பழங்களின் முதல் சொட்டுகளையும் குறிக்கலாம்.[44] இந்த வார்த்தை கிரேக்க எழுத்துக்களில் அடிக்கடி சேனைகளுக்கு முன்பாக முகாம்களைக் கண்டுபிடிக்கவும் எதிரிகள் ஏற்படுத்தும் எந்த கலக்கத்தையும் தடுக்கவும் அனுப்பப்பட்ட குதிரைப்படை வீரர்களுக்குப் பயன்படுத்தப்பட்டதாக புரூஸ் கூறினார்.[45] ஆரோன் மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் செல்வது வழக்கம், ஆனால் ஒருபோதும் முன்னோடினவராக அல்ல. இயேசு நமக்கு முன்னாகச் சென்றவர்; அவர் நமக்கு முன்னதாகச் சென்று நமக்கான வழியை எளிதாக்கினார்.

இயேசு நம் "வழி கண்டுபிடித்துக் கூட்டிச் செல்பவர்," அந்த நித்திய இலக்குக்கு செல்லும் பாதை சில நேரங்களில் பாறை நிறைந்ததாக இருப்பினும், நன்கு குறிக்கப்பட்ட பின் தொடரக்கூடிய உத்தரவாதத்தை நாம் பெற்றுக் கொள்ளத் தக்கதாக பரலோகத்தில் பிரவேசித்திருக்கிறார். கிறிஸ்து மரித்தபோது, தேவனால் மட்டுமே செய்ய முடிவது போல தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது (மத். 27:51); மகிமைக்குரிய வழி இப்போது காண்பதற்குத் திறந்திருக்கிறது.

இயேசு **மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நித்திய பிரதான ஆசாரியராய்** நமக்காக அந்தத் திரைக்குள் பிரவேசித்திருக்கிறார் என்று வசனம் 20 நிறைவு செய்கிறது. (5:6, 10; 6:20; 7:1-15 இன் விவாதங்களைக் காண்க.)

## மேலும் ஆய்வுக்கு: ஞானஸ்நானம் (6:2)

இயேசுவால் கட்டளையிடப்பட்ட ஞானஸ்நானத்தின் நோக்கத்தைப் புதிய ஏற்பாட்டு சபை உறுப்பினர்கள் அவர்களின் அடிப்படை போதனையின் பகுதியாகப் புரிந்து கொண்டனர். அவர்கள் இந்த ராஜ்யத்தில் அல்லது கிறிஸ்துவின் சரீரத்தில் பிரவேசிக்க வேண்டுமானால் அவர்கள் இதைத் தெரிந்து கொள்ள வேண்டியதாக இருந்தது (1 கொரி. 12:13). அது ஒருபோதும் திரும்பத் திரும்பச் செய்யப்படாத செயல் என்பது அவர்களுக்குத் தெரியும். அந்த உண்மைக்கு அப்பால், அதை மறந்து விடாமல் அவர்கள் வளர்ந்து இருக்க வேண்டும். ஞானஸ்நானம் மறக்கக் கூடாதபடி மிகவும் இன்றியமையாததாக இருந்தது! இது கட்டளைகளில் காட்டப்பட்டுள்ளது (அப். 10:48), "கிறிஸ்து போதித்தவற்றிற்கு" கீழ்ப்படிதல் அப்போஸ்தலரில் விளக்கப்பட்டுள்ளது (8:29-39), மற்றும்

கர்த்தரின் சரீரத்தின் உறுப்பினர்கள் அனைவராலும் செயல்படுத்தப்படுவதாக நிருபங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.[46] இது கிறிஸ்துவின் பிரசங்கத்தின் ஒரு பாகமாகவும், அவர் சிலுவையில் அறையப்பட்டவராகவும் கற்பிக்கப்பட்டது (அப். 8:35-39; 1 கொரி. 2:2; காண்க அப். 18:8).

கிறிஸ்தவர்கள் அதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டார்கள், அவர்கள் "மரணத்துக்குள்ளாக, ஞானஸ்நானம் பெற்றபோது" (ரோமர் 6:3, 4), என்ன நடந்திருந்தது என்பதை அவர்களுக்கு நினைவூட்டுவதற்காக பாவத்திற்குத் திரும்ப வேண்டாம் என்று பவுல் அவர்களை ஊக்கப்படுத்த வேண்டியதாக இருந்தது. அவர்கள் கிறிஸ்துவில் ஞானஸ்நானம் பெற்றபோது, அந்த "மரணம்" அவர்களுடைய பாவங்களின் மரணமாக இருந்தது. இது நோவாவின் இரட்சிப்பில் காணப்பட்ட வகையின் நிறைவேற்றமாகும் (1 பேதுரு 3:20, 21). சிலர் ஞானஸ்நானத்தைப் பற்றி குறிப்பிடுவது போல, நிச்சயமாக அது ஒரு "உள்ளார்ந்த அனுபவத்தின் வெளிப்புற வெளிப்பாடாக" இருப்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். அவர்கள் விசுவாசத்தினாலே கிறிஸ்துவுக்குள் பிரவேசித்து, கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளும் வழிமுறையாக இது இருந்தது (கலா. 3:26, 27). கட்டளையிடப்பட்டபடி ஞானஸ்நானம் புதிய ஏற்பாட்டில் நீண்ட அளவு விவாதிக்கப்படவில்லை. இது யோவான் ஸ்நானகன் கீழ் (மத். 3:1-5), இயேசு கிறிஸ்து (யோவான் 4:1-3), மற்றும் அப்போஸ்தலரில் விவரிக்கப்பட்டுள்ள மாற்றம் அடைதலில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த எளிய கட்டளைக்கு கீழ்ப்படிந்த அனைவரும் அவர்கள் "கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள்" என்று புரிந்து கொண்டார்கள் (ரோமர் 6:3; கலா. 3:27), மேலும் அதற்கு அதன் செயல்பாடு அல்லது நடவடிக்கை பற்றி எந்த விவாதமும் தேவைப்படவில்லை.

## பயன்பாடு

### பரிபூரணத்திற்கு (6:1)

பவுல் தீமோத்தேயுவின் ஆவிக்குரிய முன்னேற்றத்திற்கு ஒரு முக்கிய முக்கியத்துவத்தை கொடுத்தான்: "நீ கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில் நிலைத்திரு; அவைகளை இன்னாரிடத்தில் கற்றாய் என்று நீ அறிந்திருக்கிறதுமல்லாமல்" (2 தீமோ. 3:14). நாம் மீண்டும் சீர்கேடடைவதில் இருந்து நம்மைப் பாதுகாக்க, வளர்ந்து வரும் விசுவாசம் அவசியமாகிறது. விசுவாச துரோகத்திலிருந்து விலக, அந்த ஆபத்தைக் குறித்த பயத்தால் நாம் தூண்டப்பட வேண்டும். துன்மார்க்கர்களின் ஏமாற்றுதலுக்குப் பதிலாக, தீமோத்தேயு ஏற்கெனவே கற்றுக்கொண்டு, நிச்சயித்திருந்த

விஷயங்களிலிருந்து ஒருபோதும் விலகிப்போகாமல் இருக்க பவுல் வலியுறுத்தினான். பவுல் என்ன விஷயங்களை மனதில் வைத்திருந்தான்? அவன் தொடர்ந்தான்,

> கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயதுமுதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும். வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படி, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது (2 தீமோ. 3:15-17).

ஏவப்பட்ட வேதவாக்கியங்கள் அல்லது புனித நூல்கள் என்பது பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளை உள்ளடக்கியது. தீமோத்தேயு வளரும் பொருட்டு இரண்டையும் படித்துக்கொண்டே இருக்க வேண்டியிருந்தது. இளைஞனாக இருந்தபோது, குறைந்தபட்சம் பவுல் நற்செய்தியை அறிவிக்க வரும்வரை புதிய ஏற்பாட்டின் கொள்கைகள் அவனுக்குக் கற்பிக்கப்படவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது; ஆனால் "வேத வாக்கியங்கள்" என்று பவுல் குறிப்பிடுவது புதிய ஏற்பாட்டையும் உள்ளடக்கியுள்ளது. பழைய ஏற்பாட்டிலிருந்து மேற்கோள் காட்டுவதுடன், லூக்கா 10:7 மற்றும் மத்தேயு 10:10 வசனங்களையும் மேற்கோள் காட்டி 1 தீமோத்தேயு 5:18 இல் "வேதவாக்கியம்" என குறிப்பிடுகிறான். எனவே, 2 தீமோத்தேயு 3:16 இல் "வேதவாக்கியம்" என்பது பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளைக் குறிக்கிறது.

ஆவிக்குரிய வளர்ச்சி ஒரு படிப்படியான செயல்முறை ஆகும். நாளுக்கு நாள் குறிப்பிட்ட வளர்ச்சியை நாம் உணர முடியாவிட்டால், நாம் சோர்வடைந்து விடக்கூடாது, ஆனால் நாம் முதிர்ச்சியை நோக்கிச் செல்லும் பொழுது வேதவாக்கியங்களைத் தொடர்ந்து படிக்க வேண்டும்.

### நமது "மூல உபதேச வசனங்கள்" (6:1, 2)

இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதுதான் மிகவும் அடிப்படையான அடிப்படை உண்மை (மத். 3:17; 16:13-17; காண்க 1 கொரி. 3:11). விசுவாசத்தின் இந்த எளிமையான ஒப்புகையில் நாம் நம்புகிற அனைத்தும் உள்ளது. ஒருவன் இதை ஏற்றுக்கொண்டால், புதிய ஏற்பாடு கற்பிக்கிற எல்லாவற்றையும் கிறிஸ்து மற்றும் அவருடைய அப்போஸ்தலரிடத்தில் இருந்து வருவதாக ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறான். சத்தியத்தை நம்மிடம் அவர்கள் அறிவிப்பதற்காக கிறிஸ்து அவர்களுக்கு அதிகாரம் வழங்கி

(யோவான் 16:12, 13), ஆவிக்குரிய வெளிப்பாட்டை குறிப்பால் அவர் செய்வதற்காக தெய்வீகமாக பாதுகாத்து வைத்தார் (மத். 24:35). ஏவப்பட்ட தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள், மற்றவர்கள் ஆகியோரால் நமக்கு அளிக்கப்பட்ட வெளிப்பாட்டின் காரணமாக நாம் இயேசுவை நம்புகிறோம். அவர்கள் எழுதிய எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளாமல் நாம் இயேசுவை விசுவாசிக்க முடியாது. இயேசு சொன்ன "அவருடைய வார்த்தைகள்" புத்தியுள்ள மனுஷர்களால் பின்பற்றப்படும் என்று இயேசு கூறினார் (மத். 7:24, 25). நிச்சயமாக, அதன் பிறகு அவரது வார்த்தைகள் எல்லா இடங்களிலும் மக்களுக்கு எவ்வாறு அனுப்பப்படும் என்பதை அவர் அறிந்திருந்தார். இவ்வாறாக "நல்ல அறிக்கை" (1 தீமோ. 6:12), அதன் எல்லா தாக்கங்களுடனும், விசுவாசத்திற்கான நம்முடைய தெளிவான அடித்தளமாகும்.

**கைகளை வைத்தல் (6:2)**

அப்போஸ்தலரில் கைகளை வைத்தல் என்பது "ஆவிக்குரிய வரங்களை" கடத்திச் செல்வதுடன் தொடர்புடையதாக இருந்து, ஒரு தெய்வீக வல்லமை என்று பொருள்படுகிறது. அப்போஸ்தலர்கள் ஏழு பேர் மீது தங்கள் கைகளை வைத்த உடனேயே (அப். 6), ஸ்தேவானும் பிலிப்பும் அற்புதங்களைச் செய்தார்கள் (அப். 6:6, 8; 8:4-8, 12, 13). நவீன காலங்களில் பணம் சம்பாதிப்பதற்கான திறன் மற்றும் அதை ஏழைகளுக்கு உதவக் கொடுப்பது உள்ளிட்ட ஒருவர் கொண்டிருக்கிற எந்தவொரு தாலந்தையும் பொருள்படுத்துவதற்கு, "ஆவிக்குரிய வரங்கள்" பற்றிய கருத்து, விசேஷித்த அற்புதமான வல்லமைகளிலிருந்து (1 கொரி. 12:4-11 இல் விவரிக்கப்பட்டுள்ளது போல) விரிவுபடுத்தப்பட்டும் நீர்க்கச் செய்யப்பட்டும், இருந்திருக்கிறது. இது ரோமர் 12:6-8 இன் தவறான புரிதலை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. அந்த பகுதியின் முதல் பிரிவில் உள்ள வரங்களாகிய தீர்க்கதரிசனம், சுவிசேஷக பணி, போதித்தல் மற்றும் அறிவுறுத்தல் போன்றவை 1 கொரிந்தியர் 12:4-11 உடன் மிகவும் ஒத்ததாக இருக்கிறது, இது 1 கொரிந்தியர் 12, எபேசியர் 4:11 ஆகியவற்றில் உள்ள வரங்களை ஒருங்கிணைக்கிறது. அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் (தேவனுடைய சித்தத்தை பேசியவர்கள்), சுவிசேஷகர்கள், போதகர்கள் (மேய்ப்பர்கள்/மூப்பர்கள்), மற்றும் ஆசிரியர்கள் தங்கள் ஆவியானவரால் வழிநடத்தப்படும் பணிகளை செயல்படுத்த அவர்கள் விசேஷித்த வரங்களைப் பெற்றிருந்தனர்.

ரோமர் 12 இல் உள்ள பட்டியலில், தீர்க்கதரிசனத்திற்குப் பின்பு சுவிசேஷக வேலை (διακονία, *டையகோனியா*) வருகிறது. அப்போஸ்தலர் 6:2 இல் ஏழு பேரின் வேலைகளுக்கு இந்த வார்த்தையின் ஒரு வடிவம் பயன்படுத்தப்பட்டது. அவர்கள் மேல்

அப்போஸ்தலர்களின் கைகள் வைக்கப்பட்ட பிறகு ஏழு பேரும் அப்படிப்பட்ட வல்லமையைப் பெற்றார்கள். ரோமர் 12 பற்றி "பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனை இல்லாமல் கொடுக்கக் கடவன்" (12:8) என்ற வார்த்தைகளில் கிரேக்க வார்த்தைகளின் அமைப்பில் மாற்றங்கள் உள்ளன என்று மோசஸ் லார்ட் கவனித்தார்.

> எயிட் [இரண்டில் எதுவாயினும்] என்பது நான் தற்செயலாக எடுத்துக்கொண்டது அல்ல, ஆனால் வேண்டுமென்றே வாக்கியத்தின் உட்பிரிவிற்கு முன்பு வடிவமைக்கப்பட்டது. அது முன் நின்று, முந்தைய நான்கு உட்பிரிவுகளை ஒன்றாக இணைக்கிறது. அவை ஒவ்வொன்றும் சில விசேஷித்த வரங்கள் இருப்பதைக் குறிக்கின்றன. ஆனால் இந்த நான்கு உட்பிரிவுகளுக்கும் அப்பால், விசேஷித்த வரங்கள் விரிவடையவில்லை. ஐந்தாவது உட்பிரிவுடன் அந்த [எழுத்தாளர்] எந்த சிறப்பு தகுதியும் தேவையில்லாத மற்ற கடமைகளை பெயரிடத் தொடங்குகிறார்; எனவே அவர் eite, எயிட் ஐ விட்டு விடுகிறார்.[47]

வேதவாக்கியங்களின் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த வார்த்தைகளை ஒதுக்கி விடுகிற சாராம்சங்களின் பதிப்பை மட்டும் வாசிப்பதில் ஆபத்து இருக்கிறது என்பதை இது அறிவுறுத்துகிறது. அத்தியாவசியமான வார்த்தையான "இரண்டில் எதுவாயினும்" (εἴτε, *எயிட்*) என்பதை ரோமர் 12:6 இல் சேர்த்து இருப்பதைக் காண ஒருவன் பழைய ASV ஐப் படிக்க வேண்டும். ரோமரின் இரண்டாம் பகுதி, மற்றவர்களுக்கு சேவை செய்வதற்காக கிறிஸ்தவர்களுக்கு உதவுகிற, ஏராளமான அற்புதங்கள் எதுவும் இல்லாத திறமைகள் என்று நாம் அழைக்கிற இயற்கை திறன்களைக் குறிப்பிடுகிறது. தேவன் அவர்களுக்குக் கொடுத்த "பரிசு" காரணமாக பணத்தால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களால் அதிகமாக கொடுக்க முடியும், ஆனால் வேதாகம அர்த்தத்தில் அது "ஆவிக்குரிய வரம்" அல்ல (πνευματικός χάρισμα, *நியுமேடிகோஸ் கரிஸ்மா* தேவனால் அருளப்பட்ட ஈவு, இலக்கிய ரீதியாக "பரிசாகிய ஆவி").

மேலும், பவுல் ரோமாபுரிக்கு வரவில்லை என்றாலும், அங்கே இருந்த சகோதரர்களுக்கு ஒரு *ஆவிக்குரிய பரிசை* வழங்குவதற்காக அவன் போக விரும்பினான் (ரோமர் 1:11). வெறுமனே கற்பிப்பதன் மூலம் அவன் அவர்களுக்குக் கொடுக்க விரும்பியிருந்தால், ரோமருக்கு எழுதிய நிருபத்தை அவர் அனுப்பி அதைச் செய்திருக்கலாம். பலர் "ஆவிக்குரிய வரங்களை" சரியான வேதாகம பொருளில் பார்க்க தவறி விடுகிறார்கள், அதன் விளைவாக "ஆவிக்குரிய வரங்களை" வைத்திருப்பதாகக் கூறுகின்றனர். உண்மையில் அவர்கள் உருவாக்கப்பட்ட திறமைகளைக் கொண்டிருக்கின்றனர். அதே பயிற்சியைப் பெற்றிருந்தால் மற்றும் பலரும் அதே திறமையைப் பயன்படுத்த முடியும்.

### நித்திய நியாயத்தீர்ப்பு (6:2)

நவீன கால போதனைகள் நித்திய நியாயத்தீர்ப்பின் யோசனையை பெரும்பாலும் புறக்கணித்து விடுகிறது. நியாயத்தீர்ப்பு நாளில், மத்தேயு 25:31-46 இல் சித்தரிக்கப்பட்ட, “சகல ஜனங்களும்” (அதாவது “எல்லா மக்களும்”) கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்பார்கள். யோவான் 5:28, 29 “ஜீவனை அடையும்படியான உயிர்த்தெழுதல்” பற்றியும் “நியாயத்தீர்ப்பின் உயிர்த்தெழுதல்” பற்றியும் பேசுகிறது. எந்த விதமான உயிர்த்தெழுதலை நாம் அனுபவிக்கிறோம் என்பதை நியாயத்தீர்ப்பு தீர்மானிக்கும்.

வரவிருக்கும் நியாயத்தீர்ப்பைக் குறித்து நாம் பிரசங்கிக்க வேண்டும். பவுல் ரோம தேசாதிபதியாகிய பேலிக்ஸ் என்பவனுக்கு முன்பாக அதை மிகவும் திறம்படச் செய்து, அவனை பயமடையச் செய்தான் (அப். 24:25). “நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே” என்று எபிரெயர் 12:29 கூறுகிறது. 10:30, 31 இல் “கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பாரென்றும் … ஜீவனுள்ள தேவனுடைய கைகளிலே விழுகிறது பயங்கரமாயிருக்குமே” என்று நாம் வாசிக்கிறோம். வரவிருக்கும் நியாயத்தீர்ப்பைப் பற்றிய எச்சரிக்கைகளால் வேதவாக்கியங்கள் நிரப்பப்பட்டுள்ளன: வாசிக்கவும் மத்தேயு 12:41, 42; யோவான் 12:48; அப்போஸ்தலர் 17:30, 31; ரோமர் 2:4, 5; 14:10-12; 2 கொரிந்தியர் 5:10; எபிரெயர் 9:27; மற்றும் வெளிப்படுத்துதின சுவிசேஷம் 20:11-15.

### “தேவனுக்குச் சித்தமானால்” (6:3)

தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தையைத் தவிர ஆவிக்குரிய பரிபூரணத்திற்கு நம்மை எடுப்பார் என்று சிலர் கூறுகின்றனர். இது உண்மை என்றால், கற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஒருவன் தவறான ஆவியைக் கொண்டிருந்து ஒரு கேள்வியில் தன்னைத் தானே நீதிமானாக நிரூபிக்க, வேதவாக்கியங்களைப் படிக்கிறான், ஆனால் தொடர்ந்து ஆர்வமுள்ள மனதோடு வார்த்தைக்குத் திரும்பும் ஒருவன், மேலும் மேலும் தேவன் விரும்புகிற வண்ணமாக மறுரூபமடைவான் (2 கொரி. 3:18; காண்க யாக்கோபு 1:23-25). வார்த்தையின் திட்டமிடப்பட்ட விளைவை கொண்டிருக்க நாம் தொடர்ந்து வார்த்தையைத் தியானிக்க வேண்டும்.

ஆவிக்குரிய வளர்ச்சி ஒரு அதிசயம் அல்ல, ஆனால் ஒரு இயற்கையான செயல்முறை. சிலர் மறுபிறப்பு உட்பட எல்லாவற்றையும் அற்புதமாக செய்ய முயற்சி செய்கிறார்கள். அதில் “அதிசயப்படுவதற்கு” ஏதுமில்லை என்று இயேசு கூறினார் (யோவான் 3:7). அதிசயங்களை அல்லது ஆச்சரியங்களை உருவாக்க அற்புதங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. மறுபிறப்பு ஒரு அற்புதமாக இருந்தால், அது

ஒரு நாள் ஒருவிதமாகவும் மற்றொரு நாள் வேறுவிதமாகவும் நடக்க வேண்டும். மாறாக, அது எப்போதும் சுவிசேஷத்தின் வழியாக நடக்கிறது (1 கொரி. 4:15; யாக். 1:18; 1 பேதுரு 1:22, 23). நவீன அறிவியலின் எந்த குறுக்கீடும் இல்லாமல் இருந்தால், இயற்கையான பிறப்பு ஒரே மாதிரியான முறையில் உற்பத்தி செய்யப்படுகிறது. கருத்தரித்தல் மற்றும் பிறப்பு இவற்றின் செயல்முறை நமக்கு ஆச்சரியமாக இருக்கலாம், ஆனால் இது முன்கூட்டியே அறியக் கூடியது, அதிசயமானது அல்ல. இது தெய்வீக நியமத்தின்படி தெய்வீக தோற்றமாக ஏற்படுகிறது. மறுபிறப்பும் அதைப் போலவே (யோவான் 3:7, 8). ஆவியானவர் ("காற்று" க்கு சிறந்த மொழிபெயர்ப்பு) தேவனுடைய வார்த்தையின் மூலம் அதன் வல்லமையை சுவாசிக்கையில் இது நிகழ்ந்து, இதயத்திலும் வாழ்க்கையிலும் மாற்றங்களைக் கொண்டுவருவதால் கிறிஸ்துவில் புதிய மனிதன் உருவாகிறான்.

"தேவன் அனுமதித்தால்" என்பது புதிய ஏற்பாடு எழுத்தாளர்கள் எதிர்காலத்தைப் பற்றி எப்போதுமே அறிந்திருக்கவில்லை என்பதைக் குறிக்கிறது, ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியில் தேவன் எப்போது கிரியை செய்கிறார் என்பதையும் அவர்கள் எப்போதும் அறிந்திருக்கவில்லை. "கர்த்தர் இந்தச் சபையை இப்பொழுது ஆசீர்வதிக்கிறார் என்று நான் அறிந்திருக்கிறேன்" என்று கூறி மேன்மை பாராட்டுவது சரியானதாக அல்லது சரியானதல்லாததாக இருக்கலாம். சபையின் வளர்ச்சி எப்போதும் நன்மையானது என்று நாம் நினைக்கிறோம், ஆனால் பலர் தவறுகளில் வளரலாம். சில விஷயங்கள் சாத்தானின் விருப்பமாக இருக்கிறது (லூக். 13:16; 1 தெச. 2:18), தேவனுடைய சித்தத்தின்படியானதல்ல. தேவன் என்ன செய்ய அனுமதிக்கிறாரோ அது அவரால் அங்கீகரிக்கப்படாமல் இருக்கலாம்.

ஒநேசிமு பிலேமோனிடத்தில் திரும்ப வந்தபோது தேவனுடைய சித்தம் பற்றி பவுல் நிச்சயமற்றவனாக இருந்தான் (பிலே. 15). "அவன் என்றென்றைக்கும் உம்முடையவனாயிருக்கும்படிக்கும், இனிமேல் அவன் அடிமையானவனாகவல்ல, அடிமையானவனுக்கு மேலானவனாகவும் பிரியமுள்ள சகோதரனாகவுமிருக்கும்படிக்கும் கொஞ்சக்காலம் உம்மைவிட்டுப் பிரிந்துபோனானாக்கும்" என்று அவன் கூறினான். பவுல், அவனுடைய தெய்வீக வெளிப்பாடுகள் மற்றும் நுண்ணறிவுகளுடன், ஒரு நிகழ்வை தேவனுடைய தெய்வீக கிரியையின் பாகமாக இருந்ததா இல்லையா என்பதை எப்போதும் அறிந்திருக்கவில்லை. "கர்த்தருக்குச் சித்தமானால்" என்று நாம் கூறுவது நமக்கு பயன் தருகிறது, ஆனால் "இது கர்த்தருடைய ஆசீர்வாதம் என்று எனக்குத் தெரியும்." என்பதாக அல்ல. முதலாவது கூற்று ஒரு நம்பிக்கையைக் காட்டுகிற போது பிந்தையது அறியப்படாத விஷயங்களில் மேன்மை பாராட்டுதல் மற்றும்

கற்பனைகளைக் காட்டுகிறது.

இந்த வெளிப்பாட்டைப் பயன்படுத்துதல் வெறுமனே ஒரு பக்தியான எண்ணம் இல்லை, ஆனால் விசுவாசத்தின் நேர்மையான செய்திக்கூறு புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களின் கூற்றுகளில் பிரதிபலித்தது. மனிதர்களின் விவகாரங்களில் தேவன் ஆளுகை செய்கிறார் என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டிருந்தார்கள். தேவனுடைய ஜாக்கிரதையான ஆளுகை மீது நம்பிக்கையும் விசுவாசமும் இல்லாமல், தனிப்பட்ட தேவனிடம் நமக்கு பலவீனமான தனிப்பட்ட நம்பிக்கை இருக்கிறது. யாக்கோபு 4:13-16 தற்காலிக இயல்புடைய வாழ்க்கையை நாம் எவ்வாறு பார்க்க வேண்டும் என்பதை நமக்குக் காட்டுகிறது:

> மேலும், நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப் போய், அங்கே ஒருவருஷம் தங்கி, வியாபாரஞ்செய்து, சம்பாத்தியம்பண்ணுவோ மென்கிறவர்களே, கேளுங்கள். நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக்காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப்போலிருக்கிறதே. ஆதலால்: ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்லவேண்டும். இப்பொழுது உங்கள் வீம்புகளில் மேன்மைபாராட்டுகிறீர்கள்; இப்படிப்பட்ட மேன்மைபாராட்டல் யாவும் பொல்லாங்காயிருக்கிறது.

**பிரகாசிப்பிக்கப்படுதலும் ஞானஸ்நானமும் (6:4)**

எதற்காக இரண்டாம் நூற்றாண்டின் சபைத் தலைவர்கள் ஞானஸ்நானம் பெறும் தருணத்தை “பிரகாசிப்பிக்கிற” நேரம் என்று குறிப்பிடுகிறார்கள்? ஒருவன் கிறிஸ்துவில் பிரவேசிக்கும் நேரத்தையும் “ஒளியில் நடக்க” தொடங்கியதையும் அவர்கள் உணர்ந்திருந்தார்களா (1 யோவான் 1:7)? நிச்சயமாக, அப்படி இருந்தது. பெரும்பாலான நவீன இறையியலாளர்கள் போல அல்லாமல், இந்த செயல் ஒருவனை “கிறிஸ்துவுக்குள்ளாகச்” செய்கிறது என்று அவர்கள் பார்த்தார்கள் (ரோமர் 6:3, கலா. 3:26, 27) மற்றும் புதிய கிறிஸ்தவன் தொடர்ந்து ஒளியில் இருக்க வேண்டும். இந்த கட்டத்தில், ஒருவன் சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து மேலும் அறிவை நோக்கி தனது பயணத்தைத் தொடங்குகிறான். “இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தின” (கொலோ. 1:13) கட்டமாகவும் இது இருக்கிறது.

“ஒளி” என்பது அறிவு மற்றும் புரிந்து கொள்ளுதலின் சின்னமாக உள்ளது, அதேசமயம் “இருளில்” இருப்பது பாவத்திலும் அறியாமையிலும் இருப்பதைக் குறிக்கிறது. கிறிஸ்தவர்கள் “ஒளியின் பிள்ளைகளாக” இருக்கிறார்கள் மற்றும் “இருளில் அல்ல” (1 தெச. 5:4, 5). அவ்வாறு இருக்கும் பொழுது, கிறிஸ்துவில் இருக்கிற ஒருவன்

ஆபத்துகளுக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் (வசனம் 6).

**பரம ஈவு (6:4)**

"தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்" என்று ரோமர் 6:23 கூறுகிறது. இந்த விலையுயர்ந்த பரிசு ஒரு ஊக்கமுள்ள விசுவாசத்தின் விளைவாக வருகிறது. ஒருவன் விசுவாசத்தின் மூலம் இந்த ஈவைப் பெற்றுக் கொள்ள அதிகாரம் பெறுகிறான், அவன் விசுவாசித்த கட்டத்தில் ஏற்கெனவே பெற்றிருந்தான் என்பது அல்ல என்று யோவான் அறிவித்தான் (யோவான் 1:11, 12). இந்த ஈவு நம்பிக்கை உள்ளவர்களுக்கானதாகும்: "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்." "ஆகும் உரிமை" என்பதற்கு ஒருவன் "ஏற்கனவே இருக்கிறான்" என்பது பொருள் அல்ல. பயணி ஒருவன் ஒரு விமான பயணச்சீட்டு வாங்கும் போது, அவன் விமான நிலையத்திற்குச் செல்லவும், விமானத்தில் ஏறவும், அவன் சேரும் இடத்திற்குப் பறந்து செல்லவும் உரிமை உள்ளது. எனினும், அந்த பயணச்சீட்டை வைத்திருப்பதால், அவன் ஏற்கெனவே அவன் சேரவேண்டிய இடத்தை அடைந்து விட்டான் என்பது பொருள் அல்ல. விசுவாசமானது மகிமைக்கான பயணச்சீட்டாகும், ஆனால், நாம் பரலோகத்தை அடைய வேண்டுமானால், அது பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட வேண்டும்.

**மனந்திரும்புதலுக்கு ஒருபோதும் திரும்பாதிருத்தல் (6:6)**

தேவன் நம்மை நீதிக்குரிய சுயாதீனர்களாக உருவாக்கிய போது, அவர் கிறிஸ்துவைப் பின்பற்றுவது அல்லது அவரைவிட்டு விலகிச் செல்வது ஆகிய விருப்பத் தேர்வை நமக்குக் கொடுத்தார். நம்முடைய விருப்பத் தேர்வு நிற்கும்படி தேவன் அனுமதிக்கிறார் என்று எபிரெயர் 6:6 காட்டுகிறது. ஒருவன் கிறிஸ்துவில் தன்னுடைய தனிப்பட்ட விசுவாசத்தை சிலுவையில் அறைந்துவிட்டு, அதனாலேயே அவரிலுள்ள எல்லா நம்பிக்கையையும் இழந்து விடுகிறான். ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலே இரட்சிக்கப்பட்டு, மாற்றமடைந்த ஒருவனைப் பற்றி இந்த உரை கூறுகிறது, இதனால் இடறுதலுக்கு ஏதுவாக ஏதோ இருந்தது.

ஒரு மனிதன் ஒரு குறிப்பிட்ட நோய்க்கு எதிராக அதன் ஒரு சிறிய அளவைப் பெற்று தடுப்பு மருந்தாகக் கொள்ளலாம். அதே போல, ஒரு மனிதன் கிறிஸ்தவ விசுவாசத்தின் ஒரு சிறிய அளவை அனுபவித்து, மீண்டும் உலகத்திற்குத் திரும்பி, இதனால் கிறிஸ்துவின் நன்மைகளுக்கு உணர்ச்சியற்றவனாக இருக்கிறான். ஒருவன் மனந்திரும்பி பின்பு இடறல் அடையலாம், அதன் பின்பு தேவனிடம்

திரும்பலாம்; அவன் தன் விசுவாசத்தை இழந்து, புதுப்பிக்க இயலாத நிலையில் இருக்கலாம். ஒரு மனிதன் ஒரு முறை தான் அற்புதமாக எண்ணிய ஆசீர்வாதங்களுக்கான சுவையை இழந்து விட்டால், அவனால் ஒருபோதும் அதைத் திரும்பப் பெற இயலாது. அந்த நேரத்தை எப்போது அடைவோம் என்பது ஒருவேளை தேவனுக்கு மட்டுமே தெரியும்; ஆனால் சில தனிப்பட்ட மனிதர்களுக்கு அவர்கள் மனம் திரும்பும் நிலைக்கு அப்பால் இருக்கின்றனர் என்பது தெரியும் என்று நான் நம்புகிறேன். "இது பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவம் என்று சரியாக அழைக்கப்படுகிறது ..."[48] ஒருவன் அச்சம் அடைகிறான் என்றால், அவன் இந்த பாவத்தை செய்திருக்கிறான் என்று கூறுவதை நாம் அடிக்கடி கேட்டிருக்கிறோம், அவனது கவலை அவன் அவ்வாறு செய்யவில்லை என்பதற்கான சான்று ஆகும். அந்த அச்சத்தை அடக்கி வைக்க முயலுகிறவர்கள், கீழ்ப்படிதல் மற்றும் உறுதியைக் காப்பாற்ற வழிவகுக்கும் மனந்திரும்புதலுக்கு ஒருபோதும் வரமாட்டார்கள்.

**நான்கு கூடாத காரியங்கள் (6:6)**

எபிரெயரில் நான்கு "கூடாத காரியங்கள்" கொடுக்கப்பட்டுள்ளன. முதலாவது வசனம் 6 இல் உள்ளதாகும். ஒருவன் "மறுதலித்துப்போகும் பொழுது" மனந்திரும்புகிறதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம் என்று தேவன் கூறுகிறார். மற்றொன்று, தேவனால் பொய் உரைப்பது கூடாத காரியம் (6:18). மூன்றாவது, காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்தி செய்வது கூடாத காரியம் (10:4). கடைசியாக விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம் (11:6).

**நம்முடைய இரட்சிப்பின் நோக்கம் (6:6)**

நம்மை பரலோகத்திற்கு அழைத்துச் செல்வதற்காக மட்டும் இயேசு நம்மை இரட்சித்தாரா? அப்படியானால், ஏன் நாம் ஏற்கனவே அங்கு இல்லை? நாம் ஆவிக்குரிய முதிர்ச்சியுடன் வளர்ந்து, மற்றவர்கள் இரட்சிக்கப்பட உதவ வேண்டும் என்று அவர் நம்மை இரட்சித்தார். பரிசுத்தமாகுதலை தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம் (2 கொரி. 7:1). நமது இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்பட வேண்டுமென்று பவுல் வலியுறுத்தினான் (பிலி. 2:12). நாம் கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாக இல்லாமல், வளரவும், முதிர்ச்சியடையவும் நம் கர்த்தர் நம்மைப் பாவத்தில் இருந்து விடுவித்தார். நமது தலையிலுள்ள மயிரை எல்லாம் எண்ணக்கூடிய தேவன் (மத். 10:30) இந்த வழியில் உள்ள நமது முன்னேற்றத்தை நிச்சயமாக அறிந்திருக்கிறார். நம் ஆழ்ந்த தேவைகள், நமது சந்தோஷங்கள், துயரங்கள் மற்றும் நமது ஆசைகள் எதுவாகிலும் நாம்

அவரிடம் கேட்பதற்கு முன்பே அறிந்திருக்கிறார்.

**கனி தருபவர்களாய் இருத்தல் (6:7, 8)**

விதைக்கிறவன் உவமையில் இயேசு தமக்குச் செவி கொடுத்தவர்களிடம், சிலர் ஒரு காலத்திற்கு மட்டுமே "நம்புவார்கள்" பின்பு "இடறலடைவார்கள்" என்று எச்சரித்தார் (லூக். 8:5-15). நிறைவாக, "ஆதலால் நீங்கள் கேட்கிற விதத்தைக்குறித்துக் கவனியுங்கள்" (லூக். 8:18) என்று கடிந்து கொண்டார். வார்த்தையை ஒருவன் கேட்கிற விதத்திற்கும், அல்லது "விதையை ஏற்றுக் கொள்ளும்" விதத்திற்கும் ஒவ்வொரு மனிதனும் பொறுப்பாகிறான். வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய வார்த்தையின் ஒவ்வொரு கருத்திற்கும் கருத்தாக கவனம் செலுத்தி அதற்குக் கீழ்ப்படிய வேண்டும். புரிந்து கொள்ளும் திறனையும் கீழ்ப்படிதலையும் கொண்டிருத்தல் கேட்பவரை அதிக பொறுப்புள்ளவராகச் செய்கிறது (மத். 13:23). நாம் "ஆவியின் கனியை" உருவாக்கவோ அல்லது "மாம்சத்தின் கிரியைகளையோ" தெரிவு செய்யலாம் (கலா. 5:19-23). தேவனுடைய வார்த்தையைப் புரிந்துகொண்டு, இருதயத்தில் வைத்து உபயோகிப்பதால் பிந்தையதுக்கு மாறாக முந்தையதை உருவாக்கலாம். பின்பு நாம் தேவனுடைய உண்மையான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வோம். "நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்" என்று லூக்கா 8:15 கூறுகிறது. ஒவ்வொரு நீதிமானும் "[அவனுடைய] அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்" (2 பேதுரு 1:10; KJV).

**சகோதரர்களை வாழ்த்துதல் (6:9)**

சக கிறிஸ்தவர்கள், குறிப்பாக பிரசங்கிகள், ஒருவரை ஒருவர் ஊக்கப்படுத்த வேண்டும். நாம் மக்களை கடுமையாகத் தாக்கிப் பேசக் கூடாது, நம்முடைய சகோதரர்கள், கர்த்தரைப் பிரியப்படுத்த நாம் அறிந்திருப்பதை விட கடினமாக முயற்சி செய்யலாம். நாம் இன்னும் ஊக்குவித்து ஆறுதல் அளிக்க முயற்சி செய்தால், நம் அனைவரையும் பர்னபாகளாகச் செய்யும் (அப். 4:36). இது சபையில் நமக்கு அதிகமாகத் தேவைப்படுகிறது! கிறிஸ்துவில் உள்ள நம் சகோதர சகோதரிகளின் உண்மையான நற்குணத்தை நாம் நம்ப வேண்டும். நாம் அவர்களுக்கு மதிப்பளித்து அவர்களைப் பாராட்டுகிறோம் என்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். ஆசிரியர் தனது வாசகர்களை ஊக்குவித்தார் ஏனென்றால் அவர் மனித மனத்தின் உளவியலை அறிந்திருந்தார். நாம் சுமக்க போதுமான சுமை நமக்கு இருக்கிறது. கடிந்துகொள்ளுதல்

அவசியம், ஆனால் நம் பிரசங்கத்தை சமநிலையோடு பார்க்க வேண்டும். நாம் மிகவும் எதிர்மறையாக இருந்து, மற்றவர்களுடைய நன்மையின் உணர்வை நாம் இழந்துவிட்டால், நம்மைப் பற்றிய நன்மையின் உணர்வை அவர்களும் இழந்து விடுவார்கள். எபிரெயரில் மட்டுமல்லாமல் வேதாகமத்தில் உள்ள அனைத்து புத்தகங்களிலும் இது தெளிவாகிறது.

**“இரட்சிப்புடன் வருகிற காரியங்கள்” (6:9, 10)**

பல அருமையான ஆசீர்வாதங்கள் நம் இரட்சிப்புடன் சேர்ந்து வருகின்றன. உண்மையில் சில தொடக்க நிலை இரட்சிப்பின் பாகங்களாக இல்லை, ஆனால் அவைகள் தற்செயலாக, நன்மையாக நடக்கிற நிகழ்வாகவோ அல்லது அதனுடன் இணைந்து வருகிற நன்மையானவைகளாகவோ இருக்கும். நமது பெயர்கள் பரலோகத்தில் எழுதப்படும் பொழுது நாம் அனுபவிக்கும் சில நன்மைகள் யாவை (12:23)?

மற்றவர்களுக்கு சேவை செய்யும் நமது வாய்ப்பும், வாழ்க்கையில் ஒரு நோக்கம் இருக்கிறது என்பதை உணர்ந்து கொள்வதும் தேவனுடைய ராஜ்யத்தில் சேவை செய்வதன் இயல்பான விளைவாகும். நாம் மற்றவர்களுக்கு உதவி செய்யும்போது, நமது உள்ளார்ந்த கவனத்தில் இருந்து இயேசுவின் மகிமையான ஆவிக்குள் நாம் செல்கிறோம். இது, திருப்தி நிறைந்த புதிய உயரத்திற்கு நம்மை உயர்த்துகிறது. நம்முடைய இரட்சிப்பு நற்கிரியைகளாக விரிவுபடுத்தப்பட வேண்டும், ஏனென்றால், நாம் அதன் காரணமாகவே “கிறிஸ்து இயேசுவுக்குள் படைக்கப்பட்டு இருக்கிறோம்” (எபே. 2:10). உலகத்திற்கு உரியவர்கள் தங்கள் செயல்களிலும் கிரியைகளிலும் நோக்கத்தைக் கொண்டிராமல், தங்களது நம்பிக்கையற்ற சூழ்நிலையை மேம்படுத்துவதற்கு எதையும் செய்ய முடியாது என்று கருதுகின்றனர். மற்றவர்களுக்கு உதவுதல் நமது தனிப்பட்ட நன்மைக்கு வழிவகுக்கிறது.

நாம் விசுவாசத்துடனான கீழ்ப்படிதலினால் கர்த்தருடைய இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளும்போது (எபி. 5:8, 9), நாம் அவரால் எந்த அளவு நேசிக்கப்படுகிறோம் என்பதையும் ஆகையால், மற்றவர்களை நாம் எப்படி நேசிக்க வேண்டும் (1 யோவான் 4:19) என்பதையும் உணர முடிகிறது. இந்த அன்பை நாம் அதிகமாக பகிர்ந்து கொள்ளும் போது, நாம் அதிகமான அன்பைப் பெறுகிறோம். உண்மையாகவே, “வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்” (அப். 20:35). நாம் பெற்றுக் கொள்ளுவதைவிட அதிகமாகக் கொடுக்க முடியாது, ஏனென்றால் பெருக கொடுப்பவர்கள் பெருக ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் (2 கொரி. 9:6-11). இது நேர்மையானவர்கள் மறுபடியும் மறுபடியும் கற்றுக்கொள்கிற பாடம்.

நம்மில் தேவனுடைய நினைவிற்கு தினசரி தியானம் தகுதி வாய்ந்த சிந்தனையாகும் (வசனம் 10). எல்லாவற்றிற்கும் மேலாக, அவர் நீதியுடையவராய் நாம் பாராட்டின இரக்கத்தைக் கவனமாக கருத்தில் கொள்கிறார். நாம் அவருடைய ஊழியத்தில் செய்த காரியங்கள் தேவனால் மறக்க முடியாது ஏனென்றால் அவை அவருக்கான செயல்களாகும்! இயேசு இந்த உண்மையை நியாயத்தீர்ப்புக்கு அடிப்படையாக அறிவித்தார். தேவையுள்ள ஒரு சகோதரனுக்கு உதவும் போது நாம் உண்மையில் அவருக்கு உதவி செய்கிறோம் (மத். 25:40). கிறிஸ்துவில் துன்பப்படுகிற சகோதரன் நாம் அவனுக்கு உதவும் போது நமக்கு "கிறிஸ்து" ஆகிறான். "நான் ஏழைக்கு உதவுவதில் கிறிஸ்துவைப் போலாகிறேன்" என்று நாம் நினைத்தல் கூடாது, மாறாக, "நான் கர்த்தருக்கு ஊழியம் செய்யும் வாய்ப்பை எனக்கு அனுமதிப்பதின் மூலம் தேவையுள்ள மனிதன் எனக்கு கிறிஸ்துவாகிறான்" என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நம்முடைய செயல்கள் கவனிக்கப்படாமல் இருப்பதை நினைத்து ஒருபோதும் சோர்வடையக்கூடாது. தேவன் மறப்பதில்லை! "நான் என்ன செய்கிறேன் என்பதைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. எனது அனைத்து சேவைகளும் பலனளிக்கப்படாமல் உள்ளது" என்று நாம் எண்ணுதல் கூடாது. அனைவராலும் நாம் புறக்கணிக்கப்படுகிறோம் என்று நினைத்துக் கொள்ளுவது தேவனை மறந்துவிடுவதாகும்!

### "ஒருபோதும் விட்டுவிடாதே!" (6:11, 12)

மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதன் மூலம் (6:9, 10) நாம் தொடர்ந்து விசுவாசத்தில் வளர்ந்து, "நம்பிக்கையின் பூரண நிச்சயம்" உண்டாகிறது (வசனம் 11). இந்த வசனங்கள் கிருபையில் வளரவும், இதனால் ஏராளமான பிரதிபலன்களுடன் குறிப்பிட்ட இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளவும் பேதுரு கொடுத்த அறிவுரைகளை நமக்கு நினைவுபடுத்துகிறது (2 பேதுரு 1:5-11). பேதுரு விசுவாசத்தின் அடித்தளத்தை கட்டியெழுப்பும்போது, இந்த உறுதிப்பாட்டை வளர்ப்பதில் ஏழு செயல்படிகளை பெயரிட்டான்: ஜாக்கிரதை, ஞானம், இச்சையடக்கம், பொறுமை, தேவ பக்தி, சகோதர சிநேகம், அன்பு. இந்த நல்லொழுக்கங்களில் நாம் வளரும் போது கனி தருகிறவர்கள் ஆகிறோம். பின்பு நாம் நம்முடைய "அழைப்பைப்" பற்றியும் நமக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும் நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் பற்றியும் நிச்சயமுடையவர்களாய் இருக்க முடியும் (2 பேதுரு 1:8, 10, 11). நாம் இடறல் அடைந்து, மனந்திரும்புதல் தேவைப்பட்டால், நாம் ஆதியில் கொண்டிருந்த அன்பின் செயல்களுக்கு நாம் மீண்டும் செல்ல வேண்டும் (வெளி. 2:5).

வில்லியம் பார்க்லே வசனங்கள் 11 மற்றும் 12 க்கு இந்த முறையில்

பொழிப்புரை எழுதினார்:

> உங்களில் ஒவ்வொருவரும் உங்களது நம்பிக்கை நிச்சயமாகும்படி, அதே ஊக்கத்தை வெளிப்படுத்துவீர்கள் என்றும் முடிவுபரியந்தம் நீங்கள் தொடர்ந்து செய்வீர்கள் என்றும், நீங்கள் அசதியாயிராமல் வாக்குத்தத்தங்களை விசுவாசத்தினாலும் பொறுமையினாலும் சுதந்தரித்துக் கொண்டவர்களைப் பின்பற்றுவீர்கள் என்றும் நாங்கள் எங்கள் முழு இருதயத்துடனும் நம்புகிறோம்.[49]

ஆராதனை மந்தமாக செல்லும்போது, பிரசங்கத்தில் வெளிப்பாடே இல்லாதபோது, வேதபாட வகுப்பு உற்சாகமற்று இருக்கும் சமயங்களில் நம்மால் என்ன செய்ய முடியும்? நம்முடைய வைராக்கியத்தை வெளிப்படுத்தும் விதமாக, தொடர்ந்து ஆராதனையில் கலந்துகொள்வதும், மற்றும் சபையில் தொடர்ந்து உதவுவதுமாக இருக்கவேண்டும். கர்த்தரை ஆராதிப்பதில் நிலைத்திருந்தால், மகிழ்ச்சி திரும்ப வரும். நமக்கு முன்பாக அநேகர் அனுபவம் கொண்டுள்ளனர்.

"சிரத்தை" என்பதற்கான அர்த்தம் "காரியத்தில் தொடர்ந்து கவனமாயிருத்தல்" இராஜ்ஜியத்தில் சோம்பலாய் இல்லாமலிருத்தல். நமக்கு முன்பாக மகிமை சேர்ந்தவர்களை நாம் நினைவுகூர வேண்டும், பாதிவழியில் அவர்கள் ஒருபோதும் சோர்ந்துபோனதில்லை. அவர்கள் பாதுகாக்கப்பட்டனர், நாமும் அவ்வாறு காக்கப்படுவோம். எபிரெயர் 11-ல் அநேக உதாரணங்கள், கடந்த காலத்தில் உண்மையாயிருந்தவர்களின் வாழ்வைக் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது, அவைகள் மறக்கப்படக்கூடாதவைகள். தேவனில் அன்பாயிருக்கிறவர்கள் மேல் தேவனுடைய ஆசீர்வாதம் இருப்பதை தினந்தோறும் நினைவுகூருவதை, ஒருவன் தனது கண்ணை விரிவாய் திறக்கிறவன் பார்க்க முடியும். சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் (ரோமர் 8:28). வழிநடத்துதலுக்கும் மற்றும் உதவிக்காகவும் தொடர்ந்து நோக்கிக்கொண்டிருக்கிறவர்களை அவர் ஒருபோதும் கைவிடமாட்டார். உபாகமம் 31:6 லிருந்து எபிரெயர் 13:5, குறிப்பிடுகிறது மற்றும் நமக்கு உத்திரவாதம் அளிக்கிறது, "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே." சங்கீதம் 118:6 லிருந்து எபிரெயர் 13:6 குறிப்பிட்டு மாற்று யோசனை சொல்கிறது, "கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான்?" அவருக்கு அருகில் தொடர்ந்து இருப்பவர்களுக்கு தேவனுடைய பிரசன்னம் வாக்குத்தத்தம் செய்யப்படுகிறது.

**வாக்குறுதி கொடுத்தல்: எல்லா பிரச்சனைகளுக்கும் முடிவு (6:15, 16)**

மனுக்குலம் தனக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்டவைகளை மறந்துவிட்டன, ஆகையால் நாம் சாட்சிகளாயிருக்க வேண்டும்.

ஆயினும், சாட்சிகளும் மறந்துவிட முடியும், ஆகவே சட்டப்பூர்வ தாக்கீதுகள் நமக்கு உண்டு. அந்த வாக்குத்தத்தங்கள் மிகவும் கவனமாக எழுதப்படவேண்டும், ஆகையால் அந்த வாக்குத்தத்தங்களை நாம் பெறுவதற்கான நிபந்தனைகளைக் குறித்து எந்த சந்தேகமும் எழாது. விளக்கவுரையாளர்கள் உண்மையுடன் செயல்பட வேண்டும் இல்லையேல் பிரச்சனைகள் எழும். உண்மையில், ஒரு ஆணையானது எல்லாப்பிரச்சனைகளையும் கவனித்துக் கொள்ளும். ஒரு நேரத்தில் சொல்லப்பட்ட வார்த்தை, ஒரு மனிதனை கட்டுப்படுத்துகிறதாயுமிருக்கிறது, அந்த வார்த்தையைக் கடைபிடிக்க தன்னால் முடிந்த விலையைக் கொடுப்பான்! எல்லா மனிதரும் உண்மையுள்ளவர்களும் மற்றும் கனம்பண்ணுகிறவர்களுமாயிருந்தால், நாம் கிறிஸ்துவின் இராஜ்ஜியத்தில் இருப்போம், பின்பு ஒருவருடைய வார்த்தை நம்பிக்கைக்குரியதாயிருக்கும். எல்லா மனிதரும் ஒருவருக்கொருவர் முற்றிலும் உண்மையுள்ளவர்களாக இருந்தால், சபை மற்றும் உலகம் இரண்டிலும் - இன்று நாம் சந்திக்கிற எல்லாவித சச்சரவுகள் மற்றும் பிரச்சனைகள் - தீர்த்துவிட முடியும். இம்மாதிரியான காலம் வருவதற்காக நாம் ஜெபிப்போம்.

**சத்தியம்பண்ணுதல் (6:16)**

மத்தேயு 5:34-ல் இயேசு எல்லா சத்தியம்பண்ணுதலையும் நீக்கிவிட்டார் என்று அநேகர் கணிக்கின்றனர், ஆனால் இந்த பார்வை குறுகலானதாக இருக்கலாம். தமது தெய்வீக குமாரத்துவத்தைக் குறித்து இயேசு ஒருவர் தாமே சத்தியம்பண்ணுதல் மூலம் சொல்கிறார் (மத். 26:63, 64), 2 கொரிந்தியர் 1:23; 11:30 பவுல் தன்னை சத்தியம்பண்ணுதலுக்குக் கீழ் வைத்தார். யாக்கோபு 5:12-ல் அதே மொழி பயன்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் "*வேறொரு* சத்தியம்பண்ணுதலைக்" குறிக்கிறது (முக்கியத்துவப்படுத்துகிறது). ἕτερος (*ஹெட்டரோஸ்*) என்பதன் அர்த்தம் "வேறு வகையின் வேறு ஒன்று" இதற்கு மாறாக ἄλλος (*அல்லோஸ்*) என்பதன் அர்த்தம் அதே வகையின் வேறு ஒன்று என்பதிலிருந்து தான் இந்த வார்த்தை வந்தது. பரிசேயர்களுக்குள் ஒரு முறைமை உருவாக்கப்பட்டிருந்தது, சொந்தக் குழுவில் உள்ள வேறொரு உறுப்பினருக்கு சத்தியம்பண்ணுவது பெறுபவருக்கு மதிப்புள்ளது அதேவேளையில் கொடுத்தவருக்கு கடைபிடிப்பது தேவையற்றதாயிருக்கிறது. செயல்பாட்டுடன் இயேசு சொன்னார்: எப்போதும் உண்மையைப் பேசினால், சத்தியம்பண்ணுவது தேவையற்றதாயிருக்கிறது. கிறிஸ்துவின் சீஷர்கள் உண்மையுள்ளவர்களாக இருக்கிறபடியால், கிறிஸ்தவன் ஒருபோதும் சத்தியம்பண்ணக் கூடாது. அமெரிக்க நீதிமன்றங்களில் ஒருவர் "நான் உறுதியளிக்கிறேன்" அல்லது "நான் வலியுறுத்திக் கூறுகிறேன்" என்றோ கூற அனுமதிக்கப்பட்டுள்ளது, காரணம் இந்த

இரண்டு வார்த்தைகளுக்கும் இடையில் சட்டப்பூர்வ வேறுபாடுகள் இல்லை. “நான் உறுதியளிக்கிறேன்” என்று சொன்ன பின்பு, ஒருவன் நீதிமன்றத்தில் பொய் சொன்னால் “நான் சம்பிரதாயப்படி உறுதியளிக்கிறேன்” என்று அவன் சொல்லியிருந்தால் அவன் பொய்சாட்சியின் குற்றவாளியாகிறான்.

தன் வார்த்தையை காப்பாற்றுவதில் பேர் பேற்றவன் கிறிஸ்தவன். இருப்பினும், சட்டத்துடன் இணைந்து செயல்படும்போது ஒருவனுடைய சாதாரண வார்த்தை போதுமானதாக இல்லை, உறுதிமொழி அளிக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட கட்டணம் மற்றும் நிபந்தனைகளுடன் ஒருவன் ஒரு வேளை செய்வதாக வாக்குறுதியளித்தாலும்கூட, தன் வார்த்தையை அவன் காப்பாற்ற வேண்டும். 1984-ல் அமெரிக்க வானுர்தி கட்டுப்பாட்டு தொழிலாளார்கள் சிறந்த சம்பளத்திற்காகவும் மற்றும் வேலை சூழலுக்காகவும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அவர்களுடைய ஒப்பந்தமும், தேசிய சட்டமும் அவர்களுடைய செயல் குற்றம் என்று தீர்த்தது. சட்டத்தினிமித்தமும், மக்களின் பாதுகாப்பினிமித்தமும் வேலை நிறுத்தத்திலுள்ளவர்களை பயமுறுத்தும் விதமாக அவர்களை சுடும்படி அதிபர் கட்டளையிட்டார். அவர் அவ்வாறு செய்வார் என்று அவர்கள் நினைக்கவில்லை, அவர்கள் வேலை செய்யும்படியான ஒப்பந்தம் தொடர்வதாகவும், அதை கனம்பண்ணி வேலை செய்யாதவர்கள் சுடப்படுவார்கள் என்று அவர் அறிவித்தார்.

### தேவனுடைய வார்த்தை உண்மையுள்ளதும் மாறாததுமாயிருக்கிறது (6:18)

தேவனுடைய வார்த்தை எப்போதும் உண்மையுள்ளது, அதன் அடிப்படையில் நாம் அவருடைய நித்திய மாறாமையை உறுதியாக நம்பலாம். அவர் நமக்கு அளித்த வாக்குத்தத்தங்களிலிருந்து அவரால் பின்வாங்க முடியாது மற்றும் பொய் சொல்லவும் முடியாது. தேவனுடைய மன்னிக்கும் நிபந்தனையில் சில விடுவிப்பைப் பெற நாம் முயற்சிக்கலாம், ஆனால் அது நம்முடைய சிறப்புரிமை இல்லை. அவருடைய வார்த்தை உண்மையாயிருக்கும்படியாக சார்ந்திருக்கும்படிக்கு, அவர் தளமிட்ட மன்னிக்கும் நிபந்தனைகளை பிரசங்கிப்பது மட்டுமே நமது கடமை ஆகும்.

பூமியில் இன்னமும் வாழ்ந்துகொண்டிருக்கிற தனது சகோதரர்களுக்கு விசேஷ தயை கிடைக்கும்படிக்கு காதேசில் *டிவிஸ்* (லத்தின் மொழியில் “செல்வந்தன்”) கதறி வேண்டுதல் (ஆகவே அவன் நடுநிலையில் இருப்பதை இது குறிப்பிடுகிறது). அதன் பதில் செயலில் இருந்தது, “மோசேயின் மற்றும் தீர்க்கதரிசிகள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய வார்த்தை போதுமானது. நீ

செய்யத் தவறியது போன்று, ஏழைகளுக்கு இரக்கம் காண்பிக்கும்படிக்கு உன் சகோதரர்களுக்கு போதிய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மரணத்திலிருந்து எழுந்த அவரிடமிருந்து கற்றுக்கொண்டாலும், இருதயம் கடினமான இருதயமுள்ள பாவிகள் அவர்களைப் போன்று மாறமாட்டார்கள். அவர்கள் நம்பிக்கைக்கு அப்பாற்பட்டவர்கள், ஆகவே அவர்களுக்கு விசேஷ அற்புதம் நிகழ்வதற்கு மிகப்பெரிய காலம் ஆகலாம்" (லூக். 16:27-31).

**நங்கூரமும் மற்ற அடையாளங்களும் (6:19)**

இரண்டாம் நூற்றாண்டின் முடிவில், நங்கூரத்தின் அடையாளமானது கிறிஸ்தவ நம்பிக்கையின் சின்னமாகவும், அத்துடன் புறா ஆவியானவரின் சின்னமாகவும் உள்ளது. மீன் விசுவாசத்தின் சின்னமாகவும், (ἰχθύς, *இக்துஸ்*) மீன் என்பதற்கான கிரேக்க வார்த்தையின் முதல் எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது, அதாவது அதன் மொழிபெயர்ப்பு விரிவாக்க வார்த்தைகள் "இயேசு கிறிஸ்து தேவன் குமாரன் இரட்சகர்"[50] என்பதாகும். ஆதிக் கிறிஸ்தவர்களின் கல்வெட்டுக்களில் நம்பிக்கையை பிரதிபலிக்கும் விதமாக ஒரு நங்கூரம் இருப்பதை நம்மால் அடிக்கடி காண முடிகிறது. தேவனுடைய வார்த்தையை நம்புகிறவர்களுக்கு இம்மாதிரியான காரியங்கள் தேவையற்றதாக இருக்கிறது. ஞானஸ்நானம் மற்றும் கர்த்தருடைய பந்தி என்னும் இரண்டு அடையாளங்களை கிறிஸ்து நமக்குக் கொடுத்திருக்கிறார். ஞானஸ்நானம் என்பது ஒருவன் "கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம்" எடுக்கும்பொழுது உண்மையில் பாவத்திலிருந்து விடுதலையாகும் இரட்சிப்பு நிகழ்கிறதன் அடையாளம் ஆகும். ரோமர் 6:3-ல் இந்த சத்தியம் குறித்து ரோமாபுரியிலுள்ளவர்களுக்கு பவுல் நினைவுபடுத்துகிறார் (காண்க கலா. 3:26, 27), 1 பேதுரு 3:20, 21-ல் இதே பாடத்தை பேதுருவும் போதிக்கிறார். கர்த்தருடைய பந்தியில் பகிர்ந்து கொள்ளப்படும் அப்பமும் திராட்சை ரசமும், நாம் அவருடைய சரீரத்தையும் மற்றும் இரத்தத்தையும் பகிர்ந்து கொள்வதற்கான அடையாளமாக இருக்கிறது (1 கொரி. 10:16). பந்தியில் பங்குகொள்வது மூலம், கிறிஸ்துவின் மரணத்தையும் மற்றும் அவருடைய இரண்டாம் வருகையை எதிர்பார்த்தும் இருக்கிறதையும் அறிவிக்கிறவர்களாகவும் இருக்கிறது (1 கொரி. 11:26). அதிகாரப்பூர்வமற்ற அடையாளங்களை சேர்ப்பது நல்ல விஷயமாக இருந்தாலும், குறிப்பாக இந்த இரண்டு மட்டுமே நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. உண்மையில், தேவனுடைய ஞானத்திற்கு மனிதனுடைய கருத்து ஒருபோதும் அவசியமானதில்லை.

நங்கூரத்தை கழுத்தில் அணிந்து கொள்வதைவிட சிலுவையை அணிந்து கொள்வது எந்த வேறுபாட்டையும் உண்டுபண்ணுவதில்லை. அடையாளமானது எனது வாழ்க்கையை ஒரு விதமாக வசீகரிக்கிறது

என்று ஒருவர் சொல்வாரானால், அது மிகவும் ஆபத்தானது. கர்த்தருக்குள் நமக்கு இருக்கும் விசுவாசத்தை நினைவுகூருதைவத்தவிர இந்த அடையாளங்கள் அர்த்தமற்றவை.

நம்முடைய நங்கூரம் என்பது கிறிஸ்துவுக்குள் நமக்கு இருக்கும் நம்பிக்கையாகும். ஒரு பழைய பாமாலை சொல்லும் கதை:

> நம் ஆத்துமாவை காக்கும் நங்கூரம் நமக்குண்டு.
> அலைபுரண்டு வந்தாலும் நிலையும் உறுதியும் பெறுவோம்.
> அசைக்க முடியாத பாறையை இறுக பற்றிக்கொள்வோம்.
> இரட்சகரின் அன்பில் ஆழமாக வேரூன்றுவோம்.[51]

அவிசுவாசிகளினால் அடிக்கடி உண்டாகும் புயல் போன்ற பிரச்சனைகளால் நாம் அசைக்கப்படாமல் நம்முடைய விசுவாசமும் நம்பிக்கையும் நம்மைக் காக்கிறது. எபிரெயரின் எழுத்தாளர் நங்கூரத்தை உருவகமாக வர்ணிக்காமல், வாழ்க்கைப் புயலிலிருந்து கிறிஸ்தவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள அநேக வழிகளுண்டு என்றார்.

### நம்முடைய நம்பிக்கையின் அடைக்கலம் (6:20)

நம்முடைய நம்பிக்கை இயேசுவில் இருக்க வேண்டும், அவரே நம்முடைய வழிகாட்டி. நமக்கு வழியை உண்டுபண்ணும் விதமாக அவர் நமக்கு முன் சென்றிருக்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக நாம் அவரையே நோக்க வேண்டும் (12:1, 2). "நம்முடைய பிடிவாத விருப்பமும் மற்றும் நம் வாழ்வை அவருக்குக் கொடுக்க மறுப்பதைத் தவிர, நமக்கும் தேவனுக்கும் இடையே வேறொன்றும் இல்லை."[52] பரலோகத்திற்கு போவது மூலம், நாம் அவரை பின்பற்றக்கூடிய சாத்தியத்தை அவர் உருவாக்கியுள்ளார். பூலோக காரியங்களை விட பரலோகத்தின் மேல் நம்முடைய நம்பிக்கை உள்ளதா? கொலோசெயர் 3:1-4-ல் மேலானவைகள் மேல் எங்கள் இருதயத்தை வைக்க நாங்கள் வாஞ்சையாயிருக்கிறோம். மரித்த நீதிமான் மகிமையில் கிறிஸ்துவுடன் தோன்றுவான். ஏற்கனவே நாம் அங்கே கிறிஸ்துவுடனே உள்ளோம், அங்கே தான் நம்முடைய நம்பிக்கை இருக்க வேண்டும்.

---

இறுதிக் குறிப்புகள்

[1]Philip Edgcumbe Hughes, *A Commentary on the Epistle to the Hebrews* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 195, n. 33. [2]R. C. H. Lenski, *The Interpretation of the Epistle to the Hebrews and of the Epistle of James* (Columbus, Ohio: Wartburg Press, 1946), 176. [3]F. F. Bruce, *The Epistle to the Hebrews*, The New International Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1964), 112. [4]James T. Draper, Jr., *Hebrews, the Life That Pleases God* (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1976), 140. [5]Donald Guthrie, *The Letter to the Hebrews: An Introduction and Commentary*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B.

Eerdmans Publishing Co., 1983), 137. [6]Gareth L. Reese, *A Critical and Exegetical Commentary on the Epistle to the Hebrews* (Moberly, Mo.: Scripture Exposition Books, 1992), 84, n. 12. [7]9:14-ன் பின்னனியமானது நியாயப்பிரமாணத்தின் கீழ் கிரியை செய்து முடிக்கப்பட்டதை காட்டுகிறது. இம்மாதிரியான கிரியை சரீரத்தை சுத்திகரிக்காது. வார்த்தை நமக்குக் கொடுக்கும் வாய்ப்பு "நியாயப்பிரமாணத்திலிருந்து கிறிஸ்துவுக்கு திரும்புதல்." [8]Simon J. Kistemaker, *Exposition of the Epistle to the Hebrews*, New Testament Commentary (Grand Rapids, Mich.: Baker Book House, 1984), 250. [9]இவ்வளவு சீக்கிரம் மாற்று ஞானஸ்நான போதனை இருந்ததற்கான உண்மை ஆதாரம் இல்லை. [10]Bruce, 114-16.

[11]Josephus *Antiquities* 18.5.2. [12]Kistemaker, 155. [13]Neil R. Lightfoot, *Jesus Christ Today: A Commentary on the Book of Hebrews* (Grand Rapids, Mich.: Baker Book House, 1976), 122. [14]ஜேம்ஸ் பர்டன் காப்மேன் புதிய ஏற்பாடின் ஏழு ஞானஸ்நானத்தைப் பட்டியலிடுகிறார்: பரிசுத்த ஆவியானவரில் ஒன்றும் மற்றொன்று அக்கினியிலும் (மத். 3:11), யோவானின் ஞானஸ்நானம் (மத். 3:16), மோசேயின் ஞானஸ்நானம் (1 கொரி. 10:2), ஞானஸ்நானத்தின் பாடுகள் (லூக்கா 15:30), for the dead (1 கொரி. 15:29), மற்றும் பிரதான கட்டளை (மத். 28:18-20). (James Burton Coffman, *Commentary on Hebrews* [Austin, Tex.: Firm Foundation Publishing House, 1971], 117.) [15]See the discussion on 2:4. [16]Bruce, 118. [17]Acts 18:21; see 1 Cor. 16:7; Jas. 4:15. Josephus *Antiquities* 20.11.3; George Wesley Buchanan, *To the Hebrews: Translation, Comment, and Conclusions*, The Anchor Bible, vol. 36 (Garden City, N.Y.: Doubleday, 1972), 105. [18]Arthur W. Pink, *An Exposition of Hebrews* (Grand Rapids, Mich.: Baker Book House, 1954), 286. [19]Draper, 149. [20]Hughes, 206.

[21]Moses Stuart, *A Commentary on the Epistle to the Hebrews* (London: William Tegg & Co., 1856), 372. [22]Guthrie, 142. [23]Lightfoot, *Jesus Christ Today*, 124. [24]Neil R. Lightfoot, *Everyone's Guide to Hebrews* (Grand Rapids, Mich.: Baker Books, 2002), 8. [25]Albert Barnes, *Notes on the New Testament: Hebrews to Jude* (London: Blackie & Son, 1884-85; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1985), 134. [26]Lenski, 186. [27]Robert Milligan, *A Commentary on the Epistle to the Hebrews*, New Testament Commentaries (Cincinnati: Chase and Hall, 1876; reprint, Nashville: Gospel Advocate Co., 1975), 223. [28]Erasmus rendered it this way in the sixteenth century. (Lightfoot, *Jesus Christ Today*, 125.) [29]"வீழ்ச்சியைக் குறித்து எழுத்தாளரால் பட்டியலிடப்பட்டு விவரிக்கப்பட்டுள்ளவைகள் யாவும் உண்மை கிறிஸ்தவர்களின் குணாதிசயங்களை குறிப்பிடுகிறதாயிருக்கிறது" (Gerald F. Hawthorne, "Hebrews," in *The New International Bible Commentary*, ed. F. F. Bruce, H. L. Ellison, and G. C. D. Howley [Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1986], 1515). [30]The thought of the "needle's eye" being a small gate within a larger one is an idea from a much later Medieval mind.

[31]Since no specific sin, such as murder, lying, etc., is beyond forgiveness, the "blasphemy" must include a disposition of heart that would prevent repentance. [32]See Mt. 3:11, 12; 13:40-42, 50; 18:8; 25:41; Mk. 9:43, 48; Lk. 3:16, 17; Heb. 10:27; 12:29; 2 Pet. 3:10-13; Jude 7, 23; Rev. 14:10; 20:10, 14, 15; 21:8; see 2 Thess. 1:7. [33]Lightfoot, *Jesus Christ Today*, 128. [34]Lenski, 195. [35]Pink, 337. [36]Bruce, 129. [37]Lightfoot, *Jesus Christ Today*, 134; Philo *The Sacrifices of Abel and Cain* 29.94-96; *Allegorical Interpretation* 3.72-73. [38]Lightfoot, *Everyone's Guide to Hebrews*, 83. [39]Adolf Deissmann, *Bible Studies*, trans. Alexander Grieve (Edinburgh: T. & T. Clark, 1901), 104-9. [40]Lenski, 203.

[41]The city of refuge would still be like a prison; for if a manslayer left it, he might be killed by the "avenger of blood." A form of the same word meaning "prison" is used to mean "fled for refuge" (ASV) in the LXX in Deuteronomy 4:42 and Joshua 20:6 (20:9 in English). (Reese, 100, n. 78.) [42]Quoted in Lightfoot, *Jesus Christ Today*, 131, n. 27. [43]Hawthorne, 1517. [44]Draper, 174. Craig R. Koester said it could apply to an advance group of soldiers or ships, or even a runner who breaks away from the group to win the race. (Craig R. Koester, *Hebrews: A New*

*Translation with Introduction and Commentary*, The Anchor Bible, vol. 36 [New York: Doubleday, 2001], 330.) [45]Bruce, 132, n. 83. [46]See Rom. 6:3-5; 1 Cor. 12:13; Eph. 5:26; Col. 2:11, 12; Tit. 3:5; Heb. 10:22; 1 Pet. 3:21. [47]Moses E. Lard, *Commentary on Paul's Letter to Romans* (Lexington, Ky.: N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 386. [48]Pink, 293. [49]William Barclay, *The Letter to the Hebrews*, 2d ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1957), 60. [50]The words represented by this acronym are Ἰησοῦς (*Iēsous*, "Jesus"), Χριστός (*Christos*, "Christ"), Θεός (*Theos*, "God"), υἱός (*huios*, "Son"), and σωτήρ (*sōtēr*, "Savior").

[51]Priscilla J. Owens, "We Have an Anchor," *Songs of Faith and Praise*, comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [52]Draper, 174.